[பகுதி - 1](#)
[பகுதி - 2](#)
[பகுதி - 3](#)

**ஸ்த்ரீ ரத்தினங்கள் - அனுராதா ரமணன்**



'**ந**வரத்தினங்கள் என்றுதானே கேள்விப் பட்டிருக்கிறோம்? இது என்ன புதுசா ஸ்த்ரீ ரத்தினங்கள்', என்று கேட்கிறீர்களா என் அருமை சகோதரிகளே..

நாமதாங்க அந்த ஸ்த்ரீ ரத்தினங்கள்! நம்மைப் பற்றி நாமே பெருமையாக சொல்லிக்கொண்டால்தான் உண்டு! அட, ஒவ்வொரு ரத்னத்துக்கும் ஒரு குண விசேஷம் இருப்பது போல, நம்மிடமும் நாலு விதமான குணம் இருக்கத்தானே செய்யும்?

எத்தனையோ சமர்த்தும் சாமர்த்தியமுமாய், அதி வீர தீர பராக்ரமசாலினிகளாக நாம் வலம் வந்தாலும் அங்கங்கே கொஞ்சம் ஏமாளித்தனம், அசட்டுப் பிடிவாதம், பித்துக்குளித்தனம், சண்டித்தனம், ஆகாத்தியம், அழுகை, ஆவேசம், பேசத் தெரியாமல் பேசி விட்டு, பேய் முழி முழிப்பது, குழந்தைத்தனம், மூன்றாம் பேஸ்துத் தனம், துடுக்குத்தனம், முறைப்பு, விறைப்பு, வீறாப்பு, ராங்கி.. இப்படி எல்லாமே ஒரே இடத்தில் இல்லாவிட்டாலும், இவைகளில் ஒருசிலவாவது கலந்ததுதானே பெண்களாகிய நம் குண விசேஷமே!

கவனியுங்கள்.. 'நாம்' என்று என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நான் ஒன்றும் அதிமேதாவி இல்லை. என்னிடம் மாற்றிக் கொள்ளவே முடியாத சில பல கல்யாண குணங்கள் இருக்கின்றன.

சரி, விஷயத்துக்கு வருவோம்.. இந்த ஸ்த்ரீ ரத்தினங்கள் ஒன்றும் வெறுமனே கிண்டலடிப்பதற்காக எழுதப் படுவது இல்லை தாய்மார்களே.. சும்மா நமக்குள் இருக்கிற சுபாவங்களை நமக்குள்ளேயே பகிர்ந்து கொள்ளலாமே என்றுதான்!

'அவள் விகடன்' - நமது பிறந்த வீட்டு முற்றம்.நம்மைப் பற்றி நாமே சிரித்து விமர்சிக்க இதை விடவும் நல்ல இடம் ஏது?

**ச**மீபத்தில்தான் காரடையான் நோன்பு வந்து போனது. ஆதலால் சத்தியவானுக்காக, சாவித்திரி எமனுடன் போராடிய கதையெல்லாம் நாம் சொல்ல வேண்டியதில்லை.. ஆனாலும்-

‘உருக்காத வெண்ணெயும், ஓரடையும் நோன்பும்,

ஒருக்காலும் என் கணவன் பிரியாதிருக்க வேணும்..’




- இந்த வரிகளை, நம் மரியாதைக்குரிய ‘தாலி’பாக்யம் சொல்ல வேண்டும், நீங்கள் கேட்க வேண்டும். அந்தக் கால சாவித்திரி கூட இத்தனை உணர்ச்சிபூர்வமாக சொல்லியிருக்க மாட்டாள். நம்ம பாக்யம் மாமிக்கு தாலி பற்றிய பேச்சை எடுத்தாலே ‘பொசுக்’ என கண்கள் கலங்கி விடும். பயங்கர சென்டிமென்ட் பெண்மணி. பாக்யத்துக்கு 65 வயசிருக்கும். அவள் கணவர் ராமபத்ரனுக்கு எழுபத்தி நாலோ என்னவோ..

‘‘இன்னி தேதி வரைக்கும் எங்காத்துக்காரி கையாலே ஒரு வாய் காபி, அரை ஸ்பூன் சர்க்கரை போட்டு, நான் குடிச்சதில்லே.. நீ வேணா கேட்டுப் பாரு..’’ - இப்படி அவர் சலித்துக் கொள்ளும்போது, நமக்கே அவரைப் பார்க்க பாவமாகத்தான் இருக்கும்..

‘‘ஏன் மாமி.. உங்க கணவருக்கு அம்பது வயசுலே இருந்துதானே டயபடீஸ்? அதுக்கு முன்னாலே கூடவா நீங்க, சர்க்கரை போட்ட காபி அவருக்குக் கொடுத்ததில்லே?’’ - இப்படி ஒரு நாள் நான் தெரியாத் தனமாய் கேட்டு விட்டு, பேய் முழி முழித்தேன்.

பாக்கியம், உடனேயே, ‘சடக்’ என புடவைக்குள் மறைந் திருந்த தன் தாலியை இரு கைகளிலும் பிடித்துக் கொண்டு, நீ..ள..மாய் ஒரு லெக்சர் கொடுத்தாள்.

‘‘இந்தத் தாலியைக் காப்பாத்திக்க நான் படற பாடு உங்களுக்கெல்லாம் தெரியுமாடீ.. இவரை நான் கல்யாணம் பண்ணிட்டு, குடித்தனம் நடத்த வந்தப்ப தான் தெரிஞ்சுது.. வியாதி இருக்குன்னு! மறைச்சு வச்சு கழுத்தை அறுத்துட்டார் என் மாமியார்..’’

‘‘கல்யாணத்தும்போதே ஷுகர் இருந்ததா என்ன.. அம்பது வயசுலதானே..’’ - நான் இப்படி கேட்டதும், என்னைப் பாய்ந்து குதறாத குறை!

‘‘அப்ப இல்லே.. ஆனா, எப்படியும் வரும்.. என் தாலிக்கு என்னிக்கும் ஆபத்து இருக்குன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம், எப்படி என் கையாலே அந்த விஷத்தைக் கொடுக்க முடியும்? சொல்லு..’’

‘விக்.விக்..’ என அழுதாள் பாக்யம்.

அதாவது, பாக்யத்தின் கழுத்தில் தாலி ஏறின அன்றே, மாப்பிள்ளை குடும்பத்தினரில் யாரோ ஒரு வேண்டாதவர், அந்த வம்சத்தின் ‘சர்க்கரைவர்த்தி’களைப் பற்றிச் சொல்ல, பாக்யத்தைப் பயம் பிடித்துக் கொண்டு விட்டது. இத்தனைக்கும் அப்பொழுது, ராமபத்ரனின் அப்பாவுக்குக் கூட சர்க்கரை வியாதி இல்லை.

‘‘ஜானவாஸத்தும்போது, எங்கப்பா அரை டஜன் பால் போளி சாப்பிட்டார் தெரியுமா.. அதுக்கு அப்புறம் பத்து வருஷம் கழிச்சுத்தான் அவருக்கு ஷுகர் கம்ப்ளெயின்ட் வந்தது.. ஆனா, இவ, சாந்தி முகூர்த்த ரூம்லே என்ன செஞ்சா தெரியுமா..’’

கிழவர் கேட்க, எனக்கோ தர்மசங்கடம்! நான் நெளி வதைப் பார்த்த பாக்யம் மாமி ‘வெடுக்’ என கூறினாள்.. ‘‘நீ ஒண்ணும் தப்பா நினைச்சுக்காதே.. அவருக்கு வயசாச்சோ இல்லையோ.. பேசத் தெரியாமல் பேசறார். சாந்தி கல்யாண அறைக்குள்ள நுழைஞ்சதும்தான் பார்த்தேன்.. முறுக்கு, திரட்டுப்பால், ஜிலேபி, மைசூர் பாகு, பருப்பு தேங்காய், ஆப்பிள், திராட்சை, கல்கண்டு தட்டிப் போட்ட பால்.. எல்லாமே ஷுகர்தானே! அத்தனை யையும் இவர் சாப்பிட்டா என்ன ஆறது.. காலம்பற அம்மி

*மிதிச்சு, அருந்ததி பார்த்து இவர் கட்டின தாலிக்கு அவ்வளவுதான் ஆயுசா?''*

*மறுபடியும் தாலியை இரண்டு கைகளாலும் தூக்கி, என் முகத்துக்கு நேரே பிடித்தாள்.*

*''அப்படியின்னா... அத்தனையையும் தூக்கி வெளில வீசிட்டீங்களா?'' என்று நான் கேட்க, பாக்யம் மாமி சிரித்தாள்.*

*''அசடு... நல்ல நாளும் அதுவுமா அப்படி செய்வாளாடி ஒருத்தி! அதனால, நானே எல்லாத்தையும் சாப்பிட்டேன்... என்ன, ஒரு வாரத்துக்கு வயிறு சரியில்லாமப் போச்சு. அதைப் பார்த்தா முடியுமா... அப்படியே வயித்து வலி வந்து என் உயிருக்கு ஏதாவது ஆகியிருந்தா, அது என் தாலி பாக்கியம்தான்டீ...''*

*நான் பிரமித்து நின்றேன்... ராமபத்ரன் எந்த முகூர்த்தத்தில் பாக்யத்தைக் கை பிடித்தாரோ... அன்று முதல் அவர் தன் நாக்கை அறுத்து பெண்டாட்டியின் கையில் தராத குறைதான். பாக்யம், தன் கணவருக்கு அரிசி சோறே போட்டதில்லை. எப்போதும் அளவாய் கோதுமை சாதம்தான். பாகற்காய், கீரை, வெண்டை, சுண்டை... இப்படித்தான் சுற்று வட்டாரச் சங்கதிகள்...*

*'கீரைக்கும் ரசத்துக்கும் சாதமே இல்லையேடி' என அவர் ஒரு நாள் கண்ணீர் ததும்பக் கேட்க, ரசத்தில் கீரையை விட்டு, கலக்கி, மாட்டுக்குப் பருத்திக் கொட்டை வைப்பதுபோல வைத்து விட்டாள் புண்ணியவதி.*

*''அவனுக்கு இப்படிப் போட்டுட்டு, நீ மட்டும் ஒண்ணுல ஒண்ணு குறையாமத் திங்கறியேடி... நீ நன்னாயிருப்பியா...'' மகன் படும் பாட்டைக் கண்டு நொந்து போய், ராமபத்ரனின் தாய், மருமகளிடம் கேட்க...*

*''உங்க பிள்ளை நன்னாயிருக்கணும்னுதானே நான் பத்தியமா அவருக்குப் போடறேன். அவருக்கு முன்னால தீர்க்க சுமங்கலியா போய்ச் சேர்ந்துடணும்னுதான் நான் அவர் சாப்பிடக் கூடாததை எல்லாம் சேர்த்து வச்சு சாப்பிடறேன்... என் தியாகத்தைப் புரிஞ்சுக்கவே மாட்டேளா...'' அன்றைக்கு பாக்யம் அடித்த லூட்டியில், மாமியார் பிரஷர் ஏறி மண்டையைப் போட்டாள்.*

*''எத்தனையோ ஜாக்கிரதையா இருந்தும் அவருக்கு ஷுகர் வந்துடுத்து... போதாக்குறைக்கு மாமியார் பிரஷர்லே போனாரா... அன்னிலேருந்து, உப்பையும் குறைச்சுட்டேன்...''*

*ஆனாலும் சர்க்கரை விஷயத்தில் பாக்யம் காட்டிய ராணுவ கெடுபிடியை, உப்பு விஷயத்தில் அதிகம் காட்ட முடியவில்லையாம். மனிதனுக்கு ஒரு நாள் விடிகாலையிலேயே கை, கால் எல்லாம் குறக்களி வாங்கி, கோணிப் போக, பேச்சே வராமல் ஒரு மாதிரி சேது - விக்ரம், வயசான 'கெட் அப்'பில் வந்தது போல் ஆகிவிட்டாராம்.*

*அதற்குப் பிறகு, டாக்டரின் அட்வைஸ்படி உப்பு ஓரளவுக்கு... மற்றபடி அரை வேக்காட்டுக் காய்கறியும், பருப்பே இல்லாத சாம்பாரும் அவருக்கு... பாக்யம், தான் தீர்க்க சுமங்கலியாய், தொங்கத் தொங்கத் தாலியைக் கட்டிக் கொண்டு போய்ச் சேர வேண்டும் என்கிற பிரார்த்தனையுடன் வெண்ணெய், வெல்ல அடை, உப்பு அடை இப்படி வகைக்கு ஐந்தாறு இலையில் வைத்துக் கொண்டு, பிரச்னையே இல்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க...*

*ராமபத்ரன், 'இவ அடை திங்கறதைப் பார்க்கறதுக் காகவா நான் உயிரோட இருக்கணும்', என்கிற விரக்தியில்... வாசல் பக்கம் ஒரு பார்வையும், மனைவியின் இலையில் ஒரு பார்வையுமாய் நடை போட்டுக் கொண்டிருக்கிறார்.*
*- ஜொலிப்பார்கள்...*

# 2 ஸ்த்ரீ ரத்தினங்கள்!



'பட்டுப் புடவையை இரவல் கொடுத்து விட்டு, பாயைத் தூக்கிக் கொண்டு அவள் பின்னாலேயே அலைந்த மாதிரி..' - இப்படியொரு பழமொழியை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா ஃப்ரெண்ட்ஸ்? நம்ம மீனாட்சி சபேசன் அப்படித்தான். அவளை வைத்துக் கொண்டு, நாம் யாரிடமும் எதுவும் இரவல் வாங்கக் கூடாது.

''அம்மு.. இளநி வெட்ட அரிவாளே இல்லையே.. எங்கேயிருந்தாவது இரவல் வாங்கிட்டு வர்றியா?'' - நான், என் வீட்டு வேலைக்காரப் பெண் அம்முவிடம் இப்படிச் சொன்னால், உடனே மீனாட்சி பாய்ந்து வருவாள்.

''என்னது அரிவாளா? வீச்சரிவாளா.. வெட்டரிவாளா.. என் வீட்டுல இல்லாத அரிவாளா? என் வீட்டுக்காரர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். மறந்து போயிட்டியா?'' - சொன்னதோடு விடாமல், அதைக் கையோடு கொண்டும் வருவாள்.

அதற்கு அப்புறம்தான் கதையே!

''அனு.. ரெண்டு அரிவாளையும் கொண்டு வந்துட்டேன். எது வேணுமோ எடுத்துக்கோ. இன்னொண்ணை நானே கொண்டு போயிடறேன்..''

''தாங்க்ஸ்.. இது போதும்!'' - இப்படிச் சொல்லி விட்டு, நாம், நம் வேலையைப் பார்க்கப் போய் விட்டு, அரை மணி நேரத்துக்குப் பிறகு கூடத்துக்கு வந்தால், அங்கேயே அசையாமல் உட்கார்ந்திருப்பாள் மீனா.

''என்ன நீ.. வீட்டுக்குப் போகலியா?''

‘‘இருக்கட்டுமே.. நீ இளநி சீவிட்டு அரிவாளைக் கொடுக்க அம்முவை நடக்க விடுவே.. அதுக்கு நானே, ஒரே நடையா..’’

‘‘ஸாரி மீனா.. நான் இப்ப இளநி வெட்டலை. நீ வேணுமானா அரிவாளை எடுத்திட்டுப் போ..’’ - நான் இப்படிச் சொன்னால் மட்டும் உடனே பதறி விடுவாள்.

‘‘த்ச்.. பார்த்தியா.. அதுக்குள்ள கோவிச்சுக்கிட்டே! சரி.. சரி.. நீ நிதானமாவே கொடு. நான் வர்றேன்.’’

அவள் அந்தண்டை போனதும், அம்மு புலம்புவாள்.. ‘‘அம்மா.. இதுதான் ஒரு கம்பளிப் பூச்சி யின்னு தெரியுமில்லே.. இது இருக்கிறப்ப எதுக்குக் கேட்டீங்க?’’

‘‘இல்லேடீ..’’

நான் அவளிடம் பேசுவதற்குள் வாசற்பக்கம் நிழலாடும். எட்டிப் பார்த்தால், ஓணான் மாதிரி தலையைக் கம்பிக் கதவுக்குள் பதிய வைத்துக் கொண்டு, மீனாவின் பத்து வயசு மகன்..

‘‘என்னடா?’’ - அம்முதான் அதட்டுவாள்.

‘‘ஒண்ணுமில்லே. இளநி வெட்டியாச்சுன்னா அம்மா அரிவாளை வாங்கிட்டு வரச் சொன்னா.. அப்புறம்னா மறந்துடுமாம்..’’

‘‘இந்தா.. முதல்லே எடுத்துட்டு ஒழி..’’ - அம்மு அரிவாளுடன் சீறிப் பாய்வாள்.. இத்தனைக்கு அப்புறம், மறுபடியும் சந்திக்கும்போது, ஒரு சிறிய எவர்சில்வர் சம்புடத்தில் தேங்காய் துவையலோ, பொடி தூவிய கத்தரிக்காய் கறியோ கொண்டு வருவாள்.

‘‘அரிவாளுக்கு கோவிச்சிண்டியாமே..’’

‘‘.......’’

‘‘அது எங்க மாமனார் காலத்தது. செங்கோட்டையில் வாங்கினார். அதான்..’’

‘‘.......’’

‘‘சரி.. கோவிச்சுக்காதே.. உனக்கு தேங்காய் துவையல் பிடிக்குமே.’’

‘‘இரு, டப்பாவைக் கொடுத்துடறேன்..’’

‘‘போதும் போ. இந்த டப்பா எங்கே இருந்தா என்ன.. அப்புறம் வாங்கிண்டாப் போச்சு..’’

இத்தனை தாராளமாகச் சொல்பவளை நம்பி, சோம்பல்பட்டு, நாம் அதை வைத்துக் கொள்ளவே கூடாது. அன்று மாலையே பையனை விட்டு அனுப்புவாள்.

‘‘மாமீ.. துவையல் கொடுத்த டப்பா இருக்காமே.. அதை வாங்கிண்டு வரச் சொன்னா அம்மா. இன்னிக்கு சனிக்கிழமை. அதுலதான் கோயிலுக்கு எண்ணெய் எடுத்துண்டு போவாளாம். காலம்பற மறந்து போய்..’’

மீண்டும் அவளைச் சந்திக்கும்போது, நம் கைகளைப் பிடித்துக் கொண்டு குழைவாள்.. ‘‘நீ சொல்றதுக்கு ஏத்தாப்ல ஆயிடறதுப்பா. எங்க அம்மா உயிரோட இருக்கிறவரைக்கும் அதுலதான் கோயிலுக்கு எண்ணெய் எடுத்துண்டு போவா. அதனால ஒரு சென்டிமென்ட் வேல்யூ.. தப்பா நினைக்காதே..’’

ஆனால், இத்தனையும் அவள் கொடுக்கும் பாத்திரங் களுக்குத்தான்.. நம்முடையது டப்பாவோ, தூக்குப் பாத்திரமோ கிழங்கு மாதிரி எது அவள் வீட்டுக்குப் போனாலும், அந்தக் குடும்பத்துடன் ஐக்கியமாகி

விடும்.

''மீனா.. அன்னிக்கு வெங்காய சாம்பார் போட்டு ஒரு உசர டப்பா எடுத்துண்டு போனியே.. அது..''

''ஆமா. அதை அப்பவே என் பையன்கிட்ட திரும்பக் கொடுத்து விட்டுட்டேனே..''

''இல்லையே..''

''நோ.. நோ.. நன்னாத் தேடிப் பாரு. உன்னால முடியலையின்னா சொல்லு.. நான் வந்து தேடி எடுத்துத் தர்றேன். இரு.. இரு.. அந்த டப்பாவைக் கொடுத்த அன்னிக்கு சங்கடஹர சதுர்த்தி. நான் இப்படி கோயிலுக்குப் போறப்ப தான் அவன்கிட்ட கொடுத்து அனுப்பினேன்..''

இதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்?
- ஜொலிப்பார்கள்..



பிரியா.. இல்லை.. இல்லை.. 'கரகர'பிரியா நொறுக்குகிற தீனிக்கு இத்தனை நாள், ரூபாய் நோட்டில் சிரிக்கும் காந்தித் தாத்தாவை விடவும் கவர்ச்சிகரமாகச் சிரித்திருப்பாள். ஆனால், ஒழுங்காகப் பல் தேய்த்து விடுவதாலோ என்னவோ, அத்தனை பல்லும் கெட்டி!

வயதென்னவோ முப்பத்தியைந்துதான். அவள் உடம்பு இருக்கிற கனத்துக்கு புடவை கட்டி சாத்தியப் படவில்லை. பைஜாமா சுடிதார்தான். கொத்துமல்லிக் கட்டு மாதிரி ஒரு சின்ன போனி டெய்ல்தான்.

ஆனால், 'சிரிக்கும் புத்தர்' என்று சொல்வார்களே.. ஒரு குண்டு மனிதர், கையில் பணமூட்டையுடன் சந்தோஷ மாக சிரிப்பாரே.. அதுபோல, எப்பொழுதும் கையில் ஒரு பிக் ஷாப்பர் பை.. அதில் முறுக்கு, சிப்ஸ், மிக்ஸ்சர், பொரிகடலை, காரக்கடலை, காராசேவு, பாப்கார்ன், இத்யாதி, இத்யாதி.. எப்போதும் இருக்கும் ('கரகர' பிரியாவின் அர்த்தம் புரிந்திருக்குமே!).

சமீபத்தில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து, ''சினிமா வுக்குப் போகிறோம்.. நீயும் வர்றியா பிரியா?'' என்று ஒரு பேச்சுக்குக் கேட்டது, தப்பாகப் போய் விட்டது.

''ஓ.. வர்றேனே..''

ஜாலியாகக் கிளம்பி விட்டாள்.

அடையாறு சிக்னலில் இவளையும் காரில் ஏற்றிக் கொள்வதாகப் பேச்சு. இவள் என்னடாவென்றால், பெரிய பையை.. சீச்சீ.. அதைப் பை என்று

சொல்வது அதற்கு அவமானம்.. மூட்டையைச் சுமந்து கொண்டு, 'ஹேய்' எனக் கையாட்டுகிறாள்.

''அதோ.. அந்த மூட்டையோட நிக்கறாங்களே..அவங்க பக்கத்துல வண்டிய நிறுத்துப்பா..''

- சொல்லும்போதே, எனக்கு சுருதி இறங்கி விட்டது. டிரைவர் அவளுக்காக கார் கதவைத் திறப்பதற்கு முன், காரின் டிக்கியைத் திறந்து விட்டார்.

‘‘நோ.. நோ.. இந்த லக்கேஜ் என் கூடவேதான் வரும். நான் அட்ஜஸ்ட் பண்ணி வச்சுக்கறேன்..’’

எங்கே அட்ஜஸ்ட் செய்வது.. நாங்களே நாலு பேர்.. டிரைவரோடு சேர்த்து இவள் ஆறாவது. நாங்கள் எல்லோரும் தியாக மனப்பான்மையுடன், டிரைவருக்குப் பக்கத்தில், முன் ஸீட்டை இவளுக்கு ஒதுக்கினால், இவள் இப்படி மூட்டை முடிச்சுடன் ஏறினால்?

கார் தியேட்டரை அடைவதற்குள் ‘கரமுர’வென எதையோ வாயில் போட்டு நொறுக்கல். போதாக்குறைக்கு, எங்களுக்கு வேறு உபசாரம்..

‘‘ஆன்ட்டீ.. குர்குரே வேணுமா.. செம தூள்..’’

‘‘வேணாம்ப்பா..’’

‘‘ட்ரை பண்ணனும் ஆன்ட்டீ.. நேத்து இப்படித்தான் ஃபுட் ப்ளாசாவுக்குப் போனேனே.. புதுசா ஒரு சிப்ஸ் வந்திருந்தது. முதல்ல வாயில போட்டவுடனே ஸ்வீட்டா இருக்கும்.. முழுங்கறப்ப காரமா இருக்கும்..’’

‘‘தெரியும். உள்ள போனவுடனே கலக்கலா இருக்கும்..’’

- இது என் தங்கை.

இவளது மூட்டையை, தியேட்டர் மானேஜர் சந்தேகத்துடன் பார்த்தபடி சுற்றிச் சுற்றி வந்தார். எங்கள் அத்தனை பேரையும் கூர்ந்து பார்த்தார். தலையை ஆட்டிக் கொண்டார். அப்புறம், செல்லில் யாருக்கோ போன் செய்தார்.. அடுத்த ஐந்தாவது நிமிடம் மோப்ப நாயை இழுத்துக் கொண்டு, மஃப்டியில் போலீஸ். வந்த நாய் என்னவென்றால், இவளையும் இவளது மூட்டை களையுமே சுற்றிச் சுற்றி வந்தது. எனக்கு விதிர் விதிர்த்து விட்டது.

‘‘பிரியா.. நீ ஏதோ பாம், அது இதுனு வச்சிருக்கியோனு போலீஸ் சந்தேகப்படுற மாதிரி தெரியுது. பையைத் திறந்து காமிச்சிடு..’’

‘‘ஓ.. திஸ் இஸ் எ வெரி பிக் இன்ஸல்ட் ஃபார் மீ.. இப்பிடி அவமானப்படுத்து றாங்களே..’’

- பிரியா சின்னப் பிள்ளையாக குலுங்கிக் குலுங்கி அழுததும் அந்தத் தருணத்தில் மோப்ப நாய், இவளது நொறுக்ஸ் பையை லபக்கிக் கொண்டு ஓடியதும் தனிக் கதை.

தியேட்டருக்கே இப்படி என்றால், வெளியூர் கிளம்பினால்..! அதுவும் கிளம்பினோமே ஒரு நாள் அவளையும் அழைத்துக் கொண்டு!

‘‘ஏய்! இந்த பிஸ்கெட், சிப்ஸ், கடலை உருண்டை இதெல்லாம் கோயமுத்தூர்லே கிடைக்காதா.. நாம போறது கல்யாணத்துக்கு.. அங்கே போய் இறங்கினதும் மாப்பிள்ளை அழைப்பு, டிபன், டின்னர்.. காலையில டிபன், முகூர்த்தச் சாப்பாடு.. கிளம்புறப்போ முறுக்கு, அதிரசம் எப்படியும் தருவாங்க..’’

‘‘சொல்ல முடியாது. ஒருவேளை முறுக்கு, அதிரசம் கொடுக்க மறந்துட்டா, நாம போறது மெயின் கோயமுத்தூர் இல்லே.. வடவள்ளியினு ஒரு இடமாம். ‘டெஸர்ட்’ மாதிரினு நினைக்கிறேன். எனக்கு காபி வாய்க்கு நொறுக்ஸ் வேணும்ப்பா..’’

இவள் உபயத்தில் அருகில் இருந்த எங்கள் பைகளிலும் புடவைகளிலும் எறும்புகள் ஏறி, நாளெல்லாம் ஒரு ‘உதறலோடு’ நாங்கள் திரிந்தது தனிக் கதை!

இப்படி அடம்பிடிக்கிறவள், ‘ஏதுடா கல்யாணத்துக்குப் போகி றோமே.. அங்கேயிருந்து ஊட்டி, அது இது.. என்று என்னென்னவோ டூர் புரோக்ராம் இருக்கே.. ரெண்டு புடவை கூடுதலாக எடுத்துக் கொள்ளலாம்’ என நினைப்பாளா? மாட்டாள்.

கேட்டால், அப்போது மட்டும் கூலாகச் சொல்லுவாள்..

''இப்ப என்ன.. நாம கடை கண்ணியே இல்லாத காட்டுக்கா போறோம்? கோயம்புத்தூர்லே இல்லாத ஜவுளியா..''



**வி.**ஐ.பி.க்கள் வீட்டு விசேஷங்களில் விமலா நிச்சயமாக இருப்பாள். வெறும் விமலா என்றால் அவளுக்குப் பொறுக்காது. 'வைர நெஞ்சம் விமலா' என்று கூப்பிட்டுப் பாருங்கள்.. முகமே கோஹினூர் வைரம் மாதிரி ஜொலிக்கும்!

'அதென்னங்க வைர நெஞ்சம் விமலா.. அந்த அளவுக்கு திடமான மனசா?' என்று யோசிக்கிறீர்களா? வை.நெ.விமலா, எந்தப் பெண்மணியுடனாவது பேசிக் கொண்டிருக்கிறாள் என்றால், அந்தப் பெண்மணி குறைந்தது ஒன்றரை கேரட் வைரத் தோடாவது போட்டிருக்க வேண்டும். வைரம் போடாத அம்மணிகளை விமலா தன் சுண்டு விரல் நக நுனி அளவுக்குக்கூட மதிக்க மாட்டாள்.

இவள் ஐந்தாறு கேரட் வைரத் தோடு போட்டு ஜொலிஜொலிப்-பாள்.. தப்பித் தவறி, ''இவ்ளோ பெரிய தோடை எங்கே வாங்கினீங்க மேடம்..?'' - இப்படி யாராவது கேட்டு விட்டால் போச்சு!

''இது, எங்க பரம்பரைச் சொத்து. எங்க பாட்டிக்கு அவங்க அம்மா வழியில சீதனமா வந்தது. ஆக்சுவலா, அபிராமி பட்டர் அமாவாசை அன்னிக்கு நிலா வரும்னு சொல்லிட்டு, ராஜாகிட்ட மாட்டிக்கறாரோல்லியோ.. அப்பத்தானே அபிராமி மேல பாட்டுப் பாடறார்.. அப்ப, அம்பாளே மனசிரங்கி, தன்னோட புளூ ஜாகர் தோடுல ஒண்ணை விட்டெறிஞ்சதா சொல்லுவாங்களே.. அந்த ஒண்ணுதான் இது.''

''அப்ப இன்னொண்ணு?''

''அது.. அது.. அபிராமி பட்டர் அம்பாளைக் கேட்டதுக்கு அப்புறம் கிடைச்சது. 'அம்மா அபிராமி.. ஒத்தைத் தோட்டை எடுத்துட்டு வீட்டுக்குப் போனா, என் சம்சாரம் என்னைக் கோவிச்சுக்க மாட்டாளா'னு அழுதிருக்கார். பக்தன் அழுதா, அம்பாள் சிரிச்சிட்டிருப்-பாளா.. 'இந்தாடாப்பா, இதையும் வச்சுக்கோ'னு கழட்டிக் கொடுத்துட்டா..''

''அபிராமி பட்டருக்குக் கல்யாணம் ஆச்சா என்ன.. அவர்தான், தெய்வமே கதின்னு, பித்துப் பிடிச்சாப்பல..'' - மேலும் விடாமல் கேட்டால், வை.நெ.விமலாவுக்கு மூக்கு, மிளகாய்ப் பழம் போலச் சிவந்து விடும்.

''நானென்ன பொய்யா சொல்றேன்.. விஷயம் தெரியாதவங்க அப்படிச் சொல்வாங்களாயிருக்கும். என் பாட்டியோட மாமியாரோட அம்மாதான் அபிராமி பட்டரோட சம்சாரம்.. இதெல்லாம் சுவடியில தேடினா கிடைக்காது. வழி வழியா வந்த செய்தியாக்கும்..''

இப்படிச் சொல்லிவிட்டு டக்கென்று தன் பட்டுப் புடவையால் வைரத் தோட்டைத் துடைத்து விட்டபடி, ஸ்டைலாக அங்கிருந்து நகர்ந்து போவாள். 'பாட்டியுடைய அம்மா வழியில் வந்ததாக அல்லவா முதலில் சொன்னாள்.. இப்போது எப்படி பாட்டியின் மாமியார் வழி?' என்று நாம் யோசித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்!

அத்தனாம் பெரிய தோடு, கனம் தாளாமல் காது இழுக்கிறது என்பதால், ரயில்வே தண்டவாளம் சைஸுக்கு மாட்டல்கள், தவிர, கழுத்தில் வைர அட்டிகை, வைர முகப்பு வைத்த இரட்டை வடச் சங்கிலி, கைகளில் வைரக்காப்பு.. சும்மா 'ஜிலுஜிலு'வென நடந்து வருவாள் பாருங்கள்.. அவள் பின்னாலேயே, கணுக்கால் தெரிகிற மாதிரி நாலு முழம் வேட்டியும், முக்கால் கை வைத்த கதர்ச் சட்டையும், பளபளக்கும் வழுக்கையுமாக வருவதுதான் அவள் கணவர். மனைவிக்கு வைரத்தாலேயே இழைத்து விட்டு, தான் மட்டும் காவி கட்டாத சிவனடியார் மாதிரி இருப்பார்.

சுற்று வட்டாரக் கோயில்களில் எல்லாம், அம்பாள் வீதி உலா வரும் சமயங்களில் இங்கிருந்துதான் வைர ஆபரணங்கள் இரவல் போகும். அப்போதெல்லாம் இவளைப் பார்க்க வேண்டுமே..

ஒரு பக்கம் மண்டை கொள்ளாத பெருமை. இன்னொரு பக்கம், நகையை யாராவது அபேஸ் பண்ணிவிடப் போகிறார்களே என்கிற பயம். கிட்டத்தட்ட, அம்பாள் இருக்கும் பீடத்திலேயே ஏறி நிற்காத குறைதான்! இப்போதுதான் பலரும் சொல்லிச் சொல்லி, நகைகளைக் கண்காணிக்க பெண் போலீஸ்களைப் போட்டிருக்கிறாள்.

''யம்மாடீ.. பராக்கு பார்க்காதேம்மா.. அந்த ரிப்பன், வளையல் கடையெல்லாம் நீ பார்க்காததா? அம்மனைப் பாரும்மா.. எப்படி மின்னறா பாரு.. பளபளன்னு! கழுத்துல இருக்கே அட்டிகை.. இன்னிக்கு தேதிக்கு அஞ்சு லட்சம் பெறும். அதைப் பார்த்துக்கத்தான் உனக்கு ஸ்பெஷல் டூட்டி போடச் சொல்லியிருக்கேன்..''

''ஏன் பெரீம்மா.. இத்தனை பயப்படறவங்க எதுக்காக இரவல் கொடுக்கறீங்க?'' - ஒரு பெண் போலீஸ் இப்படி எகிறாமல் இல்லை.

''நானா.. நானா கொடுத்தேன்? இந்த ஏரியாவுலயே என் ஒருத்தி கிட்டத்தானே இது மாதிரி வைர நகையெல்லாம் இருக்கு.. சாமி கேட்டு, தரலைனு சொல்ல முடியுமா?''

இருபது வருடங்களாக, வை.நெ.விமலாவின் இரவல் நகைகளோடுதான் அம்பாள் ஊர்வலம் நடக்கிறது. இதுவரையில் அவள் ஒரு நாளும், அம்பிகையின் முகத்தையே பார்த்ததில்லை.

''பாரு.. கற்பூரம் காட்டறார் பாரு. தெரியறதா.. எப்படி ஜொலிக்கிறது பாரு! அடடா.. அடடா!''


'பட்பட்'டெனக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் விமலா இப்போது சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் இருக்கிறாள்.

நகைகள் திருடு போய்விட்டதா என்று கேட்கிறீர்களா.. அதெல்லாம் இல்லை. அவளின் பேரன் ஒருவன் பிஹெச்.டி படிக்கிறான். அவன் சொல்லியிருக்கிறான்..

''பாட்டீ, வைரம்ங்கறது என்ன தெரியுமா? ஜஸ்ட் கரிதான். மண்ணுக்குள்ளே ரொம்ப காலமா புதைஞ்சு கிடக்கற மரமெல்லாம் நிலக்கரி ஆகுது. அதை விடவும் அதிக காலம் புதைஞ்சு கிடந்தா வைரமாகுது..''

இதுதான். இவ்வளவுதான். வைர நெஞ்சம் விமலாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து படுத்திருக் கிறாள்.

இப்போது யார் அவளை பார்க்கப் போனாலும், 'வைரம், கரியில்லை' என்கிற தலைப்பில் தீஸிஸ் செய்து, கட்டுரை எழுதுகிற அளவுக்குப் பேசுகிறாளாம்!



இப்போது உங்களுக்கு நான் அறிமுகப்படுத்தப் போவது - கிருஷ்ண வேணியை.

இவளை, வெறுமனே கிருஷ்ணவேணி என்று அழைத்தால் பிடிக்காது. 'கிச்சன் கில்லாடி கிருஷ்ணவேணி' என்றால்தான் இவள் முகம் பூசணிப்பூ மாதிரி மலரும்.

கிருஷ்ணவேணிக்கு தினமும் டிவி-யில் சமையல் பகுதிகளில் எல்லாம் வலம் வர வேண்டும் என்கிற ஆசை கழுத்து மட்டும் இருக்கிறது. ஆனால், பாவம்.. இவளது 'ரெசிபீஸ்' எல்லாம் டிவி டைரக்டர்களையே அலற வைப்பதாக இருப்பதால்.. இவள் பெயரைக் கேட்டாலே ஒவ்வொருவரும் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடி விடுகிறார்கள்.

''இந்த ரேவதி சண்முகம், மெனுராணி செல்லம், மல்லிகா பத்ரிநாத்.. இவங்கள்லாம் என்னத்தைப் பெரிசா கண்டுபிடிச்சு எழுதிட்டாங்கன்னு இவங்களைப் பத்திரிகைகளும், டிவி சேனல்களும் தலை மேல தூக்கி வெச்சுக் கொண்டாடறாங்கன்னுதான் எனக்குப் புரியல.. அன்னிக்கு நான் செஞ்ச ஜவ்வரிசி அல்வாவைச் சாப்பிட்டுப் பார்த்த என் மாமனார், கண்ணுல 'கரகர'னு தண்ணி விட்டார்னா பார்த்துக்க.. அதையே, டிவி சமையல் பகுதிக்கு எழுதி அனுப்பினேன்.. 'தலை சுத்துது மேடம்'னு சொல்லிட்டாங்க. இவங்களுக்கெல்லாம் பேர் வாங்கினவங்களா இருந்தா போதும்.. எதைக் கொடுத்தாலும் போட்டுடுவாங்க.''

கிருஷ்ணவேணி, இப்படிச் சொன்னதோடு மட்டும் நிறுத்திக் கொண்டிருந்தால், நமக்குமே, 'அய்யோ பாவம் கி.வேணி' என்றுதான் நினைக்கத் தோன்றியிருக்கும்.

ஆனால், கிருஷ்ணவேணியின் பிரிப ரேஷனைச் சாப்பிட்டோம் என்றால், 'உவ்வே..' என்று, வயிற்றைப் பிடித்தபடி, பாத்ரூம் தேடி ஓடியிருப்போம்.

ஜவ்வரிசி அல்வாவில் ஒரு பக்கம் தித்திப்பு.. இன்னொரு பக்கம் உப்பு.. கொஞ்சம் எலுமிச்சம் பழப் புளிப்பு.. பச்சைமிளகாய் அரைத்து விட்ட காரம்.. அடி நாக்கில் கசப்பு.. இது எல்லாம் போதாது என்று பெருங்காய நெடியும் ஏலக்காயின் அசட்டு வாசனையுமாக..

மாமனார்க்காரர் கரகரவென அழுத தன் காரணம் புரிந்திருக்குமே..!

''இப்படிப்பட்ட அதிநவீன அல்வாவை, அறுசுவை அரசு கூட செஞ்சதில்லையே கிருஷ்ணவேணி.. உனக்கு எப்படி தோணிச்சு?''

- நான் கேட்கவில்லை.. அந்த அளவுக்குப் பிறர் மனசை நோகடிக்க எனக்கு தைரியம் இல்லை. என் தங்கைதான் மிகச் சிரமப்பட்டு, அல்வாவை வெளியே

துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், வெகு நேரப் போராட்டத்துக்குப் பின், பல்லைக் கடித்துக் கொண்டே கேட்டாள்.

கிருஷ்ணவேணிக்கு இந்த வஞ்சப் புகழ்ச்சி அணியை எல்லாம் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு புத்தி விஸ்தீரணம் கிடையாது.

''பாரு.. நல்லாயிருக்கில்லே.. இதைத்தான் அன்னிக்கு அந்த டிவி-க்கு எழுதிக் கொடுத்தேன். போன்ல டைரக்டர்கிட்ட பேசி, 'அல்வாவை நேரா எடுத்துட்டு வரட்டுமா?'னு கேட்டேன். அன்னிக்கு சங்கடஹர சதுர்த்தியாம். 'உப்பு சேர்த்தது எதுவுமே சாப்பிட மாட்டேம்மா.. இன்னொரு நாள் பார்த்துக்கலாம்'னுட்டார்.

அப்புறம் அந்த லேடீஸ் மாகஸினுக்கு அல்வாவை எடுத்துட்டு நேரே போனேன். எடிட்டர் இல்ல. ஒரு பிளாஸ்டிக் டப்பாவுல போட்டு, டேபிள்லே வச்சிட்டு வந்தேன். மறுநாள்.. போன் பண்ணிக் கேட்டா, 'அது அல்வாவா..? லே-அவுட் ஆர்ட் டிஸ்ட், பேஸ்ட்டிங் கோந்துனு நினைச்சு எடுத்துட்டுப் போயிட்டாரும்மா.. மலிவான விலையில் இதுமாதிரி கோந்து செஞ்சு அனுப்ப முடியுமா.. கான்ட்ராக்ட் பேஸிஸ்ல, நாங்க தொடர்ந்து வாங்கிக்கறோம்'னு..''

- மேற்கொண்டு சொல்ல முடியாமல், 'விக் விக்'கென அழ ஆரம்பித்து விட்டாள் அவள். நான்தான் அவளைச் சமாதானப்படுத்தி, அல்வா பிறந்த கதையைக் கேட்டேன். உடனே மலர்ச்சி யாகி, ஆதியோடு அந்தமாக சொல்லத் தொடங்கி விட்டாள்.

''அதுவா.. 'சித்திரை மாசமாச்சே.. வடாம் போடலாம்'னு, ஜவ்வரிசியை வேக வச்சு, அதுல பச்சை மிளகா, பெருங்காயம், உப்பு எல்லாம் கலந்து கிளறிக் கிட்டே இருந்தேனா.. அந்த சமயம்பார்த்து என் மாமியார், இன்னொரு பக்க அடுப்புல காபி கலந்தாங்க.

சர்க்கரையப் போட டப்பாவை எடுத்தாங்க பார்த்துக்கோ.. அப்பனு பார்த்து ஒரு பல்லி, அவங்க தலையில விழுந்துடுச்சு, அவங்க அலறி அடிச்சு, கையில இருந்த சர்க்கரை டப்பாவை, நான் கிளறியிருந்த ஜவ்வரிசி

கூழ்ல போட்டுட்டாங்க. நல்லவேளை.. முழு டப்பாவும் உருகறதுக்குள்ளே, டப்பாவை எடுத்துட்டேன்னு வச்சுக்க.. சர்க்கரை கொட்டின ஜவ்வரிசியில வடாம் போட முடியாதுல்ல. அதான்.. ஏழெட்டு முந்திரிப் பருப்பை வறுத்துப் போட்டு, நெய்யை விட்டு, ஏலக்காயப் போட்டு..''

- மூச்சு வாங்கினாள் கிருஷ்ணவேணி. அல்வாவின் அடி நாக்குக் கசப்பு - பிளாஸ்டிக் சர்க்கரை டப்பா உருகின தால் உண்டானது..

''அந்தக் கசப்பு இருக்கிறதுனாலதான் மற்ற சுவை எல்லாம் பிரமாதமா தூக்கலாத் தெரியுது..'' - இப்படி அடித்துச் சொல்லும் கிருஷ்ணவேணியின் ஒரே ஆசை.. அகில உலக அளவில் பெரிய சமையல் ராணியாக வலம் வர வேண்டும் என்பது.

ஆனால், அவளுக்கு சாதாரணமாக ஒரு குருமா, ரசம், அப்பளம் இதெல்லாம் செய்யவே தெரியாது. தினமும் ஸ்பெஷல் அயிட்டம்தான். பிரண்டை புலாவ், குக்கும்பர் கூச் அல்வா என்று எதையாவது செய்து வைத்து விட்டு, வீடியோகிராஃபரை அழைப்பாள். இவளே 'குக்கரி சி.டி' போடப் போகிறாளாம். அதற்கு ரிஜிஸ்ட்ரேஷன், காபி ரைட், டீ ரைட் என ஏதோதோ வாங்கி..

புருஷன் என்று ஒரு அப்பாவி இருக்கிறானே.. பாஸ்கர் என்கிற வாயில்லாப் பூச்சி.. பத்து வயதில் புஜ்ஜூ என்று பிள்ளையும் உண்டு. இருவரும் 'கறிவேப்பிலை கொத்துமல்லி வாங்கி வருகிறேன்..' என்று கிருஷ்ணவேணிக்குப் பிடித்த மாதிரி எதையாவது சொல்லிவிட்டு வெளியே பறப்பார்கள் பாருங்கள்.. அடடா!

'எங்கே போகிறார்கள்' என்கிறீர்களா?

சரவணபவனுக்குத்தான்.. வேறெங்கே?!



''**வா**ம்மா கொயந்தே.. எப்படிக் கீறே? இன்னா நீ.. மாவடு சீஸன் ஆரம்பிச்சு மூணு வாரமாச்சு.. இந்தத் தபா எல்லாம் பிஞ்சு பிஞ்சா.. சலங்கை மாதிரி அது இன்னா வடு.. வர்ற காட்டியும் பறந்துப் பூடுச்சு. நீ ஆடி அசஞ்சு இப்ப வந்து, பையும் கையுமா கீறே! உன் மாமியார் வந்தா, நேரா என்னோட கடை யாண்டைதான் வந்து நிப்பாங்க..'' - மங்காத்தா பேசிக் கொண்டே, மொக்கை மொக்கையாய் மாவடுவைப் படியில் அளந்து போடுவதில் கில்லாடி.

''மங்காத்தா.. எனக்கு ஏது மாமியார்?''

''பின்னே.. உன் கூடவே வருமே.. அதாரு..?''

''என் கூட என் தங்கச்சிங்கதான் வருவாங்க.. என் சின்ன வயசுல என்னோட பாட்டி வந்திருக்காங்க.. அவ்வளவுதான். நீ படியைக் குலுக்கிப் போடு..'' ''கண்ணு.. இந்த மங்காத்தாவோட நேர்மைய நீ உன் பாட்டிகிட்ட கேட்டுப் பாரு. மவராசி.. பத்தப் பத்த மஞ்சப் பூச்சும், வைரத் தோடும், பட்டுப் புடவை யுமா.. கற்பகாம்பா கணக்கா வந்து நிப்பாங்களே..''

அவ்வளவுதான்! குத்துமதிப்பாக மங்காத்தா கூறும் வர்ணனையால், மனசு என்றோ பரலோகம் போய் விட்ட பாட்டியின் பின்னால் போய்விடும். அந்தக் கண் சிமிட்டும் நேரத்துக்குள் ஜகஜ்ஜால வித்தை செய்து விடுவாள்.

''கண்ணு.. ஏண்டா கறுத்துப் போயிட்டே..? வெயில்லே அலையாதே. தா.. இப்படி வந்து குந்து.. கலரு, ஜோடா எதனாச்சும் குடிக்கிறியா..?''

மங்காத்தாவை, என் பதினைந்து வயதிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். கட்டக்கரேல் தேகம். நெற்றியில் பயமுறுத்துகிற அளவுக்குப் பெரிய குங்குமப் பொட்டு. தலைமுடி வெள்ளையும் கருப்புமாக

*‘பம்’மெனப் பறந்து கிடக்கும் இமிடேஷன் நகைகள். சப்பை மூக்கில் நழுவும் தேசல் மூக்குக் கண்ணாடி, எம்ஜி.ஆர் கையால் மாட்டி விட்டதாம். குளிக்கும் சமயத்தைத் தவிர, வேறு எப்போதும் அதைக் கழற்ற மாட்டாள்.*

*மாவடு, மாங்காய் சீஸனில் இவள்தான் மயிலாப்பூர் மாடவீதியின் ராணி. துணியால் ஒரு எமர்ஜென்ஸி கூடாரம் போட்டு, உள்ளே பெரிய அலுமினியம் குண்டானைக் கவிழ்த்துப் போட்டு, அதன் மீது உட்கார்ந்திருப்பாள். கூடாரத்தின் உச்சியிலிருந்து ஆங்காங்கே மல்கோவா, ருமானி, பெங்களூர் மாங்காய்கள் தோரணமாகத் தொங்கும் (இன்டீரியர் டெகரேஷன்)!*

*‘சட்’டெனப் பார்த்தால், என் தெலுங்கு சிநேகிதி வீட்டை ஞாபகப்படுத்தும். வரலட்சுமி நோன்புக்கு, ஒரு மர ஸ்டூலை கவிழ்த்துப் போட்டு, மேலே தாவணியால் கூடாரம் போட்டு, இப்படித்தான் மாம்பழம், திராட்சைக் குலை, சாத்துக்குடி என்று தொங்க விட்டிருப்பார்கள். அதாவது அம்மன் வசந்த மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறதாகச் சம்பிரதாயமாம். அசப்பில் மங்காத்தா உட்கார்ந்திருப்பதும் அது மாதிரிதான் இருக்கும். இவள் மட்டும், எம்.பி.ஏ. படித்திருந்தால், இன்றைக்கு ‘ஏர் டெல்’, ‘ஹட்ச்’ என்று எதிலாவது ‘சீனியர் மார்க்கெட்டிங் மேனேஜர்’ லெவலில் இருந்திருப்பாள். பிரம்மா அவளது அத்தனை சாமர்த்தியத்தையும் மாங்காய் விற்பதில் காட்டும்படி அநியாயம் செய்து விட்டார்.*

*இப்போது வயது எழுபதுக்கும் மேல் இருக்கும். மறதி வந்து விட்டது. ஆனாலும், காட்டிக் கொள்ள மாட்டாள். எல்லோரையும் பொத்தாம் பொதுவாகப் பார்த்து காவிப் பற்கள் தெரிய, நடுவில் ஓரிரு தங்கப் பற்களும் தெரிய அகலமாக சிரிப்பாள்.*

*இந்தத் தடவை நான் ஆவக்காய் போடுகிற உத்தேச மில்லை. அதற்கு அரை நாள் மெனக்கிட வேண்டும். லிட்டர் லிட்டராக எண்ணெயையும் காரத்தையும் கொட்டி ஊறுகாயைப் போட்டு விட்டு, அதை வெறுமே கண்ணால் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்.*

*இந்த வயிற்றெரிச்சல் புரியாமல், வீட்டுக்கு வருகிறவர்கள் எல்லாரும், வேடு கட்டி வைத்திருக்கிற ஜாடிகளைப் பார்த்து விட்டு, ‘அனு.. உனக்கு பிரஷர், ஷுகர், எல்லாம் இருக்கு இல்லையோ.. ஆவக்கா சாப்பிடறயா?’ என்று பிரியமாக விசாரிப்பார்கள். அவர்களிடம், ‘இல்லையில்லே.. சும்மா, கற்ற வித்தை மறந்திடாம இருக்கத்தான்..’’ என்று வழிய வேண்டும். ‘வீட்டுல போட்ட ஆவக்கான்னா எனக்கு ரொம்ம்ம்ப இஷ்டம்..’ - இப்படி எவளாவது சொன்னால், தாட்சண்யத்துக்காக கொஞ்சம் கொடுத்து அனுப்ப வேண்டும்.*

*இதெல்லாம் தேவையா என்று, இந்த வருடம் மாவடு, ஆவக்காய் பக்கமே போவதில்லை என்கிற திட சித்தாந் தத்துடன், மயிலாப்பூர் தெற்கு மாடவீதியில் பிஞ்சுப் புடலங்காயை பேரம் பேசாமல் (எனக்கு பேரம் பேசவே தெரியாது) வாங்கிக் கொண்டிருந்தேன்.*

*பக்கத்தில் மங்காத்தாவின் மாங்காய் ஷோ ரூம்!*

*‘‘கண்ணு.. நல்லாயிருக்கியா..?’’*

*‘‘.......’’*

*‘‘உன்னைத்தான் கண்ணு... நல்ல ருமானி காய்... வெட்டித் தர்றேன்..’’ என்றாள்.*

*‘‘இல்ல மங்காத்தா..’’ என்று நான் சொல்லி முடிக்கும் முன், ‘‘நீ வூட்டுல போய் கடுகு, மொளகா எல்லாம் மிஷின்ல கொடுத்து அரைக்க வேண்டிய வேலை கூட இல்லே..! தா பார்த்தியா.. இது ஆவக்காவுக்கான ரெடிமேட் பவுடர்.. இது மாவடுவுக்கான பவுடர். வாங்கிட்டுப் போய் எண்ணெய் விட்டு வச்சிட்டு, நிம்மதியா சீரியல் பார்க்கலாம்..’’*

*நடுவில், பக்கத்திலே வாயைப் பிளந்து, பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கணவனை ஒரே அதட்டு..*

*‘‘தா.. வாயைப் பார்க்காதே! இருபத்தஞ்சு ருமானி சிறு துண்டமா வெட்டு. அம்மாவுக்கு பெரிசாத் துண்டம்*

பிடிக்காது. தா.. இப்பகூட ஜோதிகா பொண்ணுக்காக சிவகுமார் சம்சாரம் காரைப் போட்டுட்டு வந்து வாங்கிட்டுப் போறாங்க..''

நான் பிரமித்து நின்றேன்..

''இருபத்தஞ்சு காய். எல்லாத் துண்டங்கள்லேயும் கொட்டை வர்ற மாதிரி வெட்டியிருக்காரு என் புருஷன். மாங்கா ஒரு இருநூத்தியம்பது ரூவா. வெட்டற கூலி ஒரு அம்பது.. வேணாம், நீ நம்ம கொயந்தை.. நாப்பது தா.. போதும். ஆவக்கா பவுடர் வாங்கிக்கறியா..?''

வேறு வழியில்லை. பை நிறைய மாங்காய்த் துண்டுகளோடு, மயிலாப்பூரில் தெற்கு மாட வீதியில் முழி பிதுங்கி நிற்கிற என்னை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்.. மந்திரித்து விட்ட ஆடு மாதிரி!

- ஜொலிப்பார்கள்..



**ஆ**டி மாதம் வருகிறதா.. தனலட்சுமியை நீங்கள் தி.நகர் ரங்கநாதன் தெரு, பாண்டி பஜார் துணிக்கடைகளில்தான் பார்க்க முடியும்.

'ஆடிக் கழிவு' - இப்படி தினசரிகளிலும், டி.வி-யிலும் விளம்பரம் வரத் தொடங்கி விட்டாலே, தனலட்சுமியின் கணவர் கோட்டீஸ்வரனுக்கு வயிற்றைக் கலக்கத் துவங்கி விடும்.

எங்கே தள்ளுபடி என்றாலும் பாய்ந்து விடுவாள் தனம். அதுவும் எப்படி.. காலையில் ஒரு காபியைக் குடித்துவிட்டு, கணவரையும் குழந்தைகளையும் 'கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்குங்கப்பா' என்று முகவாயைப் பிடித்து கொஞ்சி விட்டுக் கிளம்பினாள் என்றால், இரவு பத்து மணிக்கு அவளே தள்ளுபடியில் தள்ளப்பட்ட நைந்து போன சேலை மாதிரிதான் வீடு திரும்புவாள்.

''உஸ்.. அப்பப்பா! அது என்ன கூட்டம்.. அப்படியே அம்முது. 'அம்பது பர்ஸன்ட் ரிடக்ஷன்'னா அவளவளுக காரைப் போட்டுட்டு வந்துடுவாளுகளே! இதுக்குன்னே காத்திட்டிருப்பாளுக போலருக்கு.''

கோட்டீஸ்வரனுக்கு தொண்டைக்-குள் கேள்வி சிக்கிக் கொண்டு இம்சிக்கும்.

எங்கே..? அவன் கேட்கும் முன்பே, தனலட்சுமி தனது ஞான திருஷ்டியால் அவனது கேள்விகளை ஊகித்து 'படபட'வெனப் பொரிந்து தள்ளி விடுவாள்.

''பெரிய பணக்காரங்க வீட்டுப் பொம்பளைங்-களுக்காகத்தான் புதுசு புதுசா டிசைனர் ஸாரீஸ் எல்லாம் வருதே.. தள்ளுபடிக்-கும் ஏன் வந்து விழணும்ங்கறேன். அதெல்லாம் நம்மளைப் போல மிடில் கிளாஸ் ஃபேமிலிக்குத்-தானே..''

''அதில்லே.. வந்து.. நீயும் கார்லதான் போறே.. சொந்தக் கார்லே இல்லையின்னாலும்..'' கோட்டி மிடறு விழுங்கும் அந்த கொஞ்ச நேரத்துக்குள் இடையில் புகுந்து வெட்டுவாள்.

''அது சரி.. ஏதோ ஒரு நாளைக்கு வாடகை கார்ல புடவைக் கடைங்களுக்குப் போயிட்டு வர்றதும், சொந்த கார்ல சொகுசாப் போறதும் ஒண்ணா..? அங்க வந்து பாருங்க.. வாடகை கார், ஆட்டோ ஏதானாலும் பாண்டி பஜார் முனையிலயே நிறுத்திடறான். தள்ளுபடி கூட்டத்துல கார் போகாதாம்.. இதே, சொந்த கார் வச்சிருந்தா மரியாதையே தனிதான். எனக்குத் தெரியாது.. வர்ற தீபாவளிக்குள்ள தள்ளுபடியில் ஒரு புது கார் வாங்கிடுங்க.''

''அதுக்கெல்லாம் ஏது பணம்..? போன தள்ளுபடியில நீ வாங்கின புடவை, துணிமணிகளுக்கான பணத்தையே இப்பதான் கட்டி, கிரெடிட் கார்டை ஒரு மாதிரி பார்க்க கௌரதையாக்கியிருக்கேன்.

மறுபடியும்னா..''

அவ்வளவுதான்.. தனலட்சுமியின் கண்கள் குளமாகிவிடும். அழுவதற்கென்றே பெயர் பெற்ற நடிகைகளான விஜயகுமாரி, சௌகார் ஜானகி, இன்னும் பெயர் தெரியாத பல சீரியல் நடிகைகளே பிரமிக்கும் அளவுக்கு விசும்பி விசும்பி அழுவாள்.

''நான் எனக்காகவா வாங்கறேன்.. நீங்க இப்பத்தான் தக்கிமுக்கி மாசம் அறுபதா-யிரம்(!) வாங்கறீங்க. ஆனா, நீங்க இருபதா-யிரம் ரூபா சம்பளம் வாங்கிட்டு இருக்கறப்-பவே, என்னை எங்கப்பா, கொஞ்சம் கூட யோசிக்காம உங்களுக்குக் கட்டி வச்சார். சம்பளத்தை மட்டும்தான் பார்த்தாரே தவிர உங்க ஃபேமிலி பேக்கிரவுண்டைப் பார்த்தாரா? அஞ்சு தங்கச்சிங்க.. நாலு சின்ன மாமியார். சர்ர்ர்ர்ர்..''

கடைசி 'சர்ர்ர்ர்' மூக்கு உறிஞ்சல்.. உண்மையில் கோட்டீஸ்வரனுக்குப் பெரிய குடும்பம்தான். ஆனால், ஒருவரும் இவர்கள் கையை எதிர்-பார்த்து வாழவில்லை. லண்டனி-லும் அமெரிக்காவிலும் அமர்க்கள-மாக வாழ்கிறார்கள். இந்தியா--விலேயே இருக்கும் இரண்டு மாமியார்-களுக்கும் ஏகமாக சொத்துக்கள் இருக்கின்றன.

அப்படியானால், தனத்தின் உருக்கம் எல்லாம்..? 'ச்ச்ச்சும்மா! தள்ளுபடி மேனியாவால்-தான்!

சில சமயங்களில் தள்ளுபடி விற்பனையாம் என்று டவுனிலுள்ள கோடவுன் தெரு, கந்தசாமி தெரு, கோவிந்தப்ப நாயக்கன் தெரு என்று போய் விடுவாள்.

''வெளில வாங்கினா ஐந்நூறு ரூபாய் புடவை.. இங்கே இருநூறுதான். என்ன, ஃபேக்டரி ஹோல் சேல் விலை. எங்கேயாவது கொஞ்சூண்டு டாமேஜ் ஆகியிருக்கும்.. ஆனா, அதெல்லாம் கண்ணுக்குத் தெரியாது. சொன்னால்தான் தெரியும்..''

இப்படி 'டேமேஜ்' புடவைகளில் ஒரு டஜன் வாங்கி காசை மிச்சம் பிடிப்பதாகச் சொல்லிவிட்டு, டவுனில் பார்க்கிற சாமான்களை எல்லாம் வாங்கி வருவாள் பாருங்கள்.. லிஸ்ட் போட்டால் அசந்தே போய்விடுவீர்கள்.

''ஸேஃப்டி பின் கொத்து 20..?''

''வேண்டாமா.. குரங்குங்க. தினமும் நாலு பின் தொலைக்கறதுங்க..''

''பாச்சை உருண்டை 50 பாக்கெட்டா..?''

''ஆமா. ஏற்கெனவே கடைக்காரர் 'டேமேஜ்'னு சொல்லி புடவையை விக்கிறாரு.. நாம நல்லபடியா வச்சுக்கிட்டாதானே கொடுத்த காசுக்கு கொஞ்ச நாளாவது புடவை புதுசா இருக்கும்? புடவை வாங்கிட்டாப்பல ஆச்சா.. ஒழுங்கா பிரிஸர்வ் செய்ய வேண்டாமா?''

''இது என்னது தனம்.. துணி உலர்த்த கிளிப் டஜன் டஜனா.. போதாக்குறைக்கு ஹேங்கர் வேற அம்பது.. இது சோப்புத் தூளா.. எதுக்கு? நாமதான் ஏற்கெனவே..''

கோட்டி வாயைத் திறந்து கேட்டு விடக் கூடாது.. வேலைக்காரி கிளிப்பை முழுங்கி விடுவதாகவும், புடவைகளை ஹேங்கரில் மாட்டினால்தான் வேண்டிய-போது எதையும் கலைக்காமல், தேவையானதை மட்டும் உருவ முடியும் என்றும் சொல்லுவாள். இந்த சோப்புத் தூள்.. ஒன்று வாங்கினால் ஒன்று இனாமாம்.

சரி.. என்னவோ தன் புகுந்த வீட்டு மனிதர்களுக்காக புடவை, துணிமணியைத் தேடித் தேடி வாங்குவதாக அடிக்கடி சொல்கி-றாளே.. அது என்ன சங்கதி? என்கிறீர்களா..

கொடுப்பாள்.. அதெல்லாம் தனத்துக்கு தாராள மனசு. அதற்கென்றே பொங்கல், தீபாவளி, ஆடி வெள்ளி, தை வெள்ளி போன்ற நாட்களில் 'ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்' என்ற ரீதியில் வாங்கிய

புடவைகளை அள்ளிக் கொடுப்பாள்.

''அத்தை, இந்த மஞ்சளைப் பார்த்தவுடனேயே இது உங்களுக்குத்தான்னு எடுத்து வச்சிருக்கேன்..''

''சின்னத்தை, உங்களுக்கு இந்த காபிப் பொடி கலர் எடுப்பா இருக்கும். பெரிய அத்தைக்குக்கூட இதும்மேல ஒரு கண்ணுதான். நான்தான் இது சின்ன அத்தைக்குனு சொல்லிட்டேன். யார் என்ன வேணா நினைச்சுக்கட்டும்.''

இவள் கட்டும் புடவை மட்டும் புத்தம் புதிய டிஸைனாக இருக்கும்.

'இது நல்லாயிருக்கே..' - இப்படி யார் கேட்டாலும், ''என்னமோ போங்க.. எங்கம்மாதான் சொல்லச் சொல்லக் கேட்காம, காசைக் கொண்டு போய் புடவையில போடறாங்க.. த்சி!'' என்பாள்.

அந்தப் புடவையின் விலையும், வாங்கிய கடை பெயரும் கோட்டீஸ்வரனுக்குத்தான் தெரியும். அவன் பார்க்க வேண்டாம் என்றாலும் கிரெடிட் கார்ட் சொல்லித் தொலைக்கிறதே!



**சூ**டாமணியை நான் டிசம்பர் சங்கீத சீஸன்களில் மட்டும்தான் பார்த்திருக்கிறேன். மற்ற நாட்களில் அவள் எங்கே இருக்கிறாள், என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்றே தெரியாது.

ஒல்லியாக, உயரமாக இருப்பாள். அலங்காரத்தில் எல்லாம் அதிகம் அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டாள். முப்பத்தைந்து வயசுக்கு அந்த பன் கொண்டையும், கனமான மூக்குக் கண்ணாடியும் சேர்ந்து, பத்து வயசை தாராளமாகக் கூட்டிச் சொல்லும். காலில் ரப்பர் செருப்பு. தோளில் துணிப்பை. அதில் எந்தெந்த சபாவில், யார் யார் எத்தனை மணிக்குப் பாடுகிறார்கள் என்கிற குறிப்புப் புத்தகம். தவிர ராகங்கள், கீர்த்தனைகள் பற்றிய டைஜஸ்ட் போல் ஒரு புத்தகம்.

'சரி, எத்தனையோ பேருக்கு சங்கீதத்தில் அளவுகடந்த ஆர்வம் இருக்கும். அவர்களுக்குத்தானே சீஸனே இருக்கிறது.. பின்னே, உன்னைப் போன்ற ஞான சூன்யங்களுக்காகவா?' என்று கேட்கிறீர்கள்-தானே.. நியாயமான கேள்வி.

சூடாமணி மாதிரி சங்கீத சமுத்திரத்தில் நீந்துகிற ரகமெல்லாம் இல்லை நான். என்றாலும் எப்போதாவது கச்சேரிகளுக்குப் போவேன். அப்படிப் போகும்போது, அக்கம் பக்க நாற்காலி-களில் எங்கேயாவது சூடாமணி இருந்து தொலைக்கப் போகிறாளே என்று கிலியுடன் திரும்பி பார்த்தபடிதான் உட்காருவேன். என் அதிர்ஷ்டம், நான் போய் உட்கார்ந்ததும் என் பக்கத்து ஸீட் அம்மணிக்கு கேன்டீனில் இத்தனை நேரத்துக்கு சுடச்சுட போண்டா போட்டிருப்பது நினைவுக்கு வந்து தொலைக்கும்.

''அப்பப்போ ஏதாவது சாப்டுட்டே இருக்க சொல்லி இருக்கார் டாக்டர்'' - இப்படிப் பொத்தாம் பொதுவாக சொல்லியபடியே கிளம்பிவிடுவார். அந்த நாற்காலியில், மரப்பல்லி மாதிரி எங்கிருந்தோ 'சொத்'தென வந்து விழுவாள் சூடாமணி.

''எத்தனை உருப்படி போச்சு?''

''எ.. எது.. இப்பத்தான் ஒரு அம்மா எழுந்து போயிருக்கா''

''நான் அதைக் கேட்கலே.. கச்சேரியில இது எத்தனாவதுன்னு.. த்ச்.த்ச்.. பாரதீய வித்யாபவன்லே

சௌம்யா.. அதை முடிச்சுண்டு இங்கே வர்றதுக்குள்ள போச்சு..''

''போனாப் போறது.. இதுல இருந்து கேட்கலாமே..''

''நோ.. நோ.. அப்படி லேசா விட்டுடக் கூடாது நீங்க. டி.வி. சங்கர நாராயணன்னா ரெண்டாவது அயிட்டம் முகாரி.. பிரமாதமா இருக்கும். அருணா சாய்ராம்னா ரெண்டாவது பூர்வி கல்யாணியோ ஸ்ரீராகமோ இருக்கும். அதுல என்ன ஸ்பெஷல்னா..''

சூடாமணி, கிட்டத்தட்ட என் பக்கமே திரும்பி உட்கார்ந்து, ஏதோ எட்டாம் கிளாஸ் மாணவிக்கு டியூஷன் எடுப்பது போல எடுக்கத் தொடங்கி விடுவாள்.

எதிரே கச்சேரி மேடையை நான் ஒரு கணம் கூட திரும்பிப் பார்க்க முடியாது. அப்படியே மீறி நான் திரும்பினாலும் ரகசியமாக ஒரு அதட்டல் போடுவாள் - ''ஒண்ணும் சுகமில்லே. இதைப் போய் சிரத்தையாகக் கேட்கறீங்களே.. இதே கீர்த்த-னைய நீங்க எம்.எல்.வி பாடிக் கேட்கணும்..''

'மனசுக்குள்ள என்ன சேஷகோபாலன்னு நினைப்பா.. ஒரு வர்ணம் விஸ்தாரமாப் பாடத் துப்பில்லே..' 'மல்லிப் பூவை எம்.எஸ் மாதிரி வளைச்சு வச்சுட்டா மாத்திரம் போதாது, அந்தக் குரல் எங்கே.. இந்த இழைப்பு எங்கே..'

- சூடாமணியின் ரன்னிங் காமென்ட்ரி-யில் நமக்கு ஒரு பாட்டும் காதில் விழாது. சரி, அதுவாவது தொலைகிறது.. நம்மைச் சுற்றி இருப்பவர்கள் மத்தியில் நமக்கு நல்ல பேராவது உண்டா என்றால், அதுவும் இல்லாமல் பண்ணி விடுவாள் மகராசி.

இப்படித்தான் ஒருமுறை கச்சேரியில் பிரமாதமாகப் பாடிக் கொண்டிருந்தார் ஒரு பாடகர். நடுநடுவே, முன் வரிசையி-லும், பின் வரிசையில் எங்களுக்குப் பக்கத்தில் இருந்தவர்களையும் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டு, கண்களை மூடிக் கண்ணீர் தளும்ப உருக்கமாக பாடினார்.

''இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லே!'' - சூடாமணியின் சூடான விமர்சனம் இது.

''பின்னே என்ன.. சுருதி ஒரு இடத்துல நிற்க மாட்டேங்கறது. தேவ காந்தாரியைப் பாடுறேன்னு தேம்பித் தேம்பி அழுவானேன்.. இந்தப் பாட்டைக் கேட்டுட்டு, நாம இல்லே அழணும்..''

இரைச்சலாகச் சொன்னது இவள்.. பக்கத்தில் இருந்து தொலைத்ததைத் தவிர நான் ஒரு பாவமும் அறியேன்.

ஆனால், எனக்கு முன்னாலும், பக்கத்திலும், பின்னாலும் மொத்தமாக சொல்வதானால், எங்களைச் சுற்றிலும் பாடகரின் மனைவி, மாமனார், மாமியார், மச்சினர், பந்து மித்ரர்கள்..

அத்தனைப் பேருக்கும் என்னுடைய பூசனிக்காய் முகம்தான் பளிச்சென்று தெரிந்தது போல..

இதற்குப் பிறகு அந்த பாடகரோ, அவரைச் சேர்ந்தவர்களோ - என்னை எங்கே பார்த்தாலும் ஏதோ, த்ரிஷாவை மிரட்டும் பிரகாஷ்ராஜைப் போல முறைத்தார்கள்!

''அய்யா, அம்மா.. நான் ரொம்ப ரொம்ப அப்பாவி. எனக்கு கர்நாடகா காவேரி-யைக் கூடத் தெரியாது. கர்நாடக தேவகாந்தாரியைக் கண்டு கொள்வதெல்லாம் அடியேனுக்கு சாத்தியமே இல்லாத மேட்டர். ஆனால், என் பக்கத்தில் ஒரு விஷ ஜந்து.. ஜோல்னா பை சகிதம் வந்து உட்காருகிறா-ளே.. எல்லாம் அவள் செய்த சங்கீத கலவரம். அவள் பேசின பேச்சுக்கெல்லாம் நான் ஜவாப்தாரி இல்லை. இதை எங்கே, யார் தலை-மீது வேண்டுமானா-லும் சத்தியம் செய்ய தயார்..''

- இப்படி நானும் பார்வையாலேயே கெஞ்சியிருக்கிறேன். முடிந்தால் இந்த சங்கீத சூடாமணியை இழுத்து வந்து சொல்லச் சொல்லவும் தயாராக இருக்கிறேன்.


எங்கே..

இப்போதெல்லாம் ஏதாவது ஒரு சந்தில் அல்லது மரப் பொந்தில் ஒளிந்திருப்பாள்.

கரெக்ட்டாக சங்கீத சீஸனில், மூக்கிலிருந்து நழுவும் சோடாபுட்டி யைச் சரி செய்தபடி நேராக நான் உட்கார்ந்திருக்கும் இடம் பார்த்து வந்து உட்கார்ந்து -விடுவாள்.

''சௌக்கியமா..? என்னது இது.. கதனகுதூகலமா ஆரம்பிக்கிறார்?''

- இப்படிக் கேட்டு, என் குதூகலத்தையே அள்ளிக் கொண்டு போவாள் துரோகி!



ஆனந்தவல்லியை உங்களுக்குத் தெரியுமா? 'அஸ்ட்ரோ ஆனந்தி' என்றால், பெண்ணைப் பெற்று வைத்திருப்பவர்கள் மத்தியில் வெகு பிரசித்தம்..

''அது என்ன பெண்ணைப் பெற்றவர் களுக்கு மட்டும்தான் ஆனந்தியைத் தெரியுமா.. பிள்ளை வீட்டுக்காரர்களுக்குத் தெரியாதா?'' எனக் கேட்கிறீர்களா?

1967-ம் வருடம் முதல் பிறந்த பெண் குழந்தைகளின் வீடுகளில் எல்லாம், அஸ்ட்ரோ ஆனந்தியின் பிள்ளை சிரஞ்சீவி பிரகாஷின் ஜாதகம் வலம் வந்திருக்கும்.

1967-ல் பிறந்த பெண்களுக்கு இப்போது நாற்பது வயதாகியிருக்குமே.. அவர்களுக் கெல்லாம் கல்யாணமாகி, அவர்களுக்குப் பெண் குழந்தை இருந்தால், அதற்கே பதினெட்டு, இருபது வயதாகி இருக்குமே என்று கணக்குப் போடுகிறீர்கள்தானே..

கண்டிப்பாய்.. பிரகாஷை விசாரித்து வந்த வரன்கள் எல்லாவற்றுக்கும் கல்யாண மாகிவிட்டது. இவன் மட்டும்தான், வழுக்கை மண்டையைத் தடவிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்..

என்ன செய்யலாம்? ஆனந்தி எந்த ஜாதகத்தையும் அத்தனை லேசில் ஒப்புக் கொள்ள மாட்டாள். பத்துப் பொருத்தத்துக்கு பதினெட்டுப் பொருத்தம் பார்ப்பாள். இவளிடம் எந்த ஜோதிடரின் தர்க்கமும் பலிக்காது.

''அம்மா.. உங்க பையனுக்கும் செவ்வா தோஷம் இருக்கு. தோஷத்துக்குத் தோஷம் சரியாப் போச்சு..'' - இப்படி ஒரு ஜோதிடர் சொல்லப்போய், இவள், அவருக்கு நேரம் சரியில்லையோ என்னும்படியாகப் 'பிலுபிலு' என உலுக்கிவிட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

''அது எப்படி தோஷத்துக்குத் தோஷம் சரியாப் போகும்? இந்தப் பொண்ணுக்கு எட்டுல செவ்வா.. கடும் தோஷம். என் பையனுக்கு மைல்ட் தோஷம்தான். நீங்க எந்தப் பஞ்சாங்கத்தைச் சேர்ந்தவர்.. திருக்கணிதமா.. பாம்புப் பஞ்சாங்கமா.. ஏன் கேட்கறேன்னா..''

- இப்படி ஆரம்பித்து, மொத்தமாக நாட்டில் இருக்கிற எல்லாப் பஞ்சாங்கத்தையும் பக்கம் பக்கமாக அலசி, தீசிஸ் எழுதி, டாக்டரேட்டே வாங்கி விடுபவள் போலப் பேசுவாள்.

காலையில் எழுந்ததும் டி.வி-யில் ஒவ்வொரு சேனலிலும் எந்தெந்த ராசிக்கு என்னென்ன பலன்.. என்னென்ன கலரில் புடவை கட்டலாம்.. இப்படி ஆரம்பித்து, அன்றைய சூர்யோதயத்தைக் கணக்குப் பண்ணி, வாஸ்துப்படி எந்தப் பக்கம் காஸ் அடுப்பைப் பற்ற வைக்கலாம் எனப் பார்த்து விட்டுத்தான் சமையலையே ஆரம்பிப்பாள்.

''ஆனந்தி.. இட்லிக்கு சட்னி, மிளகாப்பொடி, சாம்பார் எதுவுமே இல்லாம எப்படிம்மா சாப்பிடறது..?'' வயசான மாமனார், அழமாட்டாத குறையாகக் கேட்பது காதில் விழுகிறதா..

''பரவாயில்ல. இன்னிக்கு ஒரு நாளைக்கு வெறும் இட்லி, வெறும் சாதம்தான் கடக ராசிக்கு. தேங்கா, மிளகா, எண்ணெய் எதுவும் கண்ணுல காட்டாம இருக்கறது நல்லதாம்..'' - இப்படி ஒரு போடு போடுபவள், தன் கணவரையும் பார்த்து, பரிவுடன் சொல்வாள்..

''இதப் பாருங்க.. இன்னிக்கு அரிசி, அரிசி சார்ந்த பொருள் எதுவுமே உங்களோட சிம்ம ராசிக்கு ஆகாது. சந்திரன் வக்ரத்துல போய் நீச்சமடைஞ்சிருக்கறதால, பால், மோர், தயிர் இதெல்லாமும் ஆகாது. பேசாம நாலு வாழைப்பழத்தை உரிச்சு வாயிலே போட்டுட்டுக் கிளம்புங்க.''

வீட்டுக்காரர், பெண்டாட்டி சொல்படிக் கேட்டுத்தான் தீர வேண்டும். மீறி நடந்துவிட்டு, சாயந்திரம் 'அக்சூ' என ஒரு தும்மல் போட்டால் கூட.. ''நான் சொன்னேனே.. கேட்டீங்களா.. சந்திரன் நீச்சமா இருக்கறப்ப சளி பிடிச்சா, அப்படியே மண்டையில போய் தண்ணி வச்சிடும்.. மூளை கூட கொஞ்சம் பிறண்டாப்பல ஆயிடும்..'' - இப்படி புலம்பத் தொடங்கி விடுவாள்.

ஆனந்தியின் மைத்துனன் ஒருத்தன்.. முப்பத்தாறு வயசு வரைக்கும் அண்ணியின் ஆணையை மீறாமல், ஏதேதோ கோயில்களுக்கும் பரிகார பூஜைகளுக்கும் பணத்தைத் தண்ணீராக செலவழித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட கோயில் குருக்கள் பெண், ''யாரையும் கேட்க வேண்டாம். ஸ்வாமி மேல பாரத்தைப் போட்டுட்டு, தாலியைக் கையில எடுங்க'' என்று அதட்டி கழுத்தை நீட்ட, பையன் இப்போது கல்யாணமாகி, அழகாக குடித்தனம் செய்கிறான்.

அதற்கே ஆனந்தி, அவனைத் திட்டிக் கொட்டிக் கொண்டிருக்கிறாள். அவனுக்கு ஜாதகப்படி சந்திர மங்கள யோகம் இருக்கிறதாம். கொஞ்சம் பொறுத் திருந்தால், பிரமாதமான இடத்தில் இருந்து பெண் வந்திருக்குமாம்.

கைரேகை, பெயர் ராசி, எண் கணிதம், மலையாள மாந்திரீகம், மைசூர் கம்பள ஜோசியம், சோழி குலுக்கிப் போட்டுப் பார்ப்பது, ஆரூடம், நிமித்தம், குடுகுடுப்பைக் காரன்.. இன்னும் என்னென்ன உண்டோ, அத்தனை பேரையும் இவள் வீட்டில் பார்க்கலாம்.. கிளி ஜோசியம், எலி ஜோசியம் கூட!

அன்றைக்கு எலி ஜோசியத்துக்குக்காக ஸ்மார்ட்டாக இரண்டு எலிகளைக் கொண்டு வந்திருக்கிறார் ஒரு ஜோசியர்.

ஜோசியம் சொல்ல வேண்டிய எலிகள், அவள் கணவர் செய்த மசால் வடை வாசனையினால் மதியிழந்து, சமையலறைக்குள் ஓடிப் போய் ஒளிந்து விட்டன. ஏற்கெனவே அவர்கள் வீட்டிலிருந்த எலிகளிலிருந்து இந்த ஜோடியைத் தனியே பிரித்துப் பார்த்து, கண்டுபிடிக்கவே முடியவில்லை. எலி ஜோசியக் காரருக்கு நஷ்ட ஈடாக எத்தனையோ ஆயிரங்களைக் கொடுத்தாளாம்.

ஆனாலும் இப்போதும் அந்த எலிகள், தங்கள் வீட்டுச் சமையறையில் இடம் பிடித்தது, தான் செய்த பாக்யமே பாக்யம் என்று பக்திப் பரவசத்துடன் சொல்லிக் கொண்டிருக்கிறாள். காலையில் ஒரு தம்ளர் காபியை பரண் மீது வைத்து, ''அப்பனே எலீஸ்வரா.. தாயே எலீஸ்வரீ.. வாங்க..'' - இப்படி அன்புடன் அழைத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள்.

ஆனால், முன்னைப்போல இல்லை அவள் பையன் பிரகாஷ். வீட்டுக் கூடத்திலேயே டேரா போட்டிருக்கும் இந்த ஜோதிடக்காரர்களுடன், தானும் ஒரு பாயை விரித்துப் போட்டுக் கொண்டு, விரல் தேய எண்ண ஆரம்பித்து விட்டான்.

ஆனந்திக்கு ரொம்பத்தான் பெருமை. இப்போதெல்லாம் யார் வீட்டுக்கு வந்தாலும், ''எங்க பிரகாஷ் ஒரு ஜாதகத்தைப் பார்த்துச் சொன்னா, அந்த பிரம்மாவே சொன்ன மாதிரி..'' - இப்படிப் பீற்றிக் கொண்டிருக் கிறாள்.

பையன், தனக்கான பெண்ணை, தானே தேடுவதில் இறங்கி விட்டான் என்பது ஆனந்திக்குத் தெரியாது.. பாவம்!

எங்கள் தோழிகள் வட்டாரத்தில் எல்லோரும் சேர்ந்து ஏதாவது டூர் கிளம்பினோம் என்றால், அத்தனை

பேரும் கோரஸாக ஒரே கேள்வியைத்தான் கேட்போம்.

''ஏம்பா.. லோச்சுகிட்ட எத்தனை மணிக்குக் கிளம்பணும்னு சொல்லியிருக்கீங்க?''

''இன்னிக்கு ராத்திரி கோவை எக்ஸ்பிரஸ்னு சொல்லியிருக்கு. யாராவது, நாளைக்குத்தான்னு சொல்லி வச்சிடாதீங்க.'' நாங்களும் சர்வ ஜாக்கிரதையாக அத்தனை பேர் காதிலும் விழும்படியாகக் கிசுகிசுப்போம். யார் காதில் விழுந்தால் என்ன.. லோச்சு காதில் விழாமல் இருந்தால் சரிதான். 'லேட்' என்றால் அரை மணி, ஒரு மணி தாமதமாக எல்லாம் புறப்பட மாட்டாள் லோச்சு. நாங்களெல்லாம் 'சிவாஜி' பார்த்து விட்டோம். இன்னமும் அவள் 'சந்திரமுகி' படத்துக்கே கிளம்பியபாடில்லை! அவ்வளவு லேட்!



ஒருமுறை அப்படித்தான் மதுரையில் ஒரு கல்யாணம் என்று கிளம்பினோம்..

''ஏய், என்னப்பா.. அதுக்குள்ளேயா.. ராத்திரி எட்டரைக்குத்தானே டிரெயின்?''

''இப்ப மணி என்ன?''

''எட்டேகால்.. இன்னும் பதினஞ்சு நிமிஷம் இருக்கே. திருவான் மியூர்லே இருந்து எக்மோர் போயிட முடியாது..?''

முட்டைக் கண்களை உருட்டி பாவம்போல கேட்பாள். எத்தனைதான் அவகாசம் கொடுத்தபோதிலும், கடைசி நிமிஷத்தில் பி.டி.உஷா, ஷைனி வில்ஸன் மாதிரி அரக்கப் பரக்க ஓடி வருவாள் பாருங்கள்.. தலைமுடியில் சீப்பு சிக்கியபடி இருக்கும். ஒரு காலில் தன் செருப்பும் இன்னொரு காலில் மாமியார் செருப்புமாக மாட்டியிருப்பாள். காதில் ஒன்றில் ஜிமிக்கி, இன்னொன்றில் வளையம்..

''வீட்டுல எல்லாத்தையும் முடிச்சிட்டு கிளம்பி வர்றதுன்னா லேசான காரியமா.. இதுவே, பேக்கிங் எல்லாம் என் ஹஸ்பண்ட் செஞ்சாராக்கும்..'' - இப்படிப் பெருமையாகப் பேசியவள், மறுநாள் முகூர்த்த நேரத்தில் என் முதுகைச் சுரண்டினாள்..

''என்ன.. நீ இன்னும் குளிக்கலே?''

''அதுக்குத்தான் போனேன். சூட்கேஸைத் திறந்தேனா.. ஒரே ஷாக் இவளே.. பொட்டிய அவசரத்துல மாத்தி எடுத் துட்டு வந்துட்டேன்.. இது முழுக்க, பழைய பாத்திரக்காரனுக் காக எடுத்து வச்ச துணிமணிங்க.. கடைசி நிமிஷ அரிபரி யில..''

''என்ன கடைசி நிமிஷம்? கல்யாணத்துக்குப் போகப் போறதா ஒரு மாசம் முன்னாடியே தீர்மானம் பண்ணியாச்சு. 'ரெண்டு நாள் வீட்டை விட்டு நகர்றதுன்னா வீட்டுல இருக்கறவங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாங்க'னு முனகினே.. நான் புளிக்காய்ச்சல் செஞ்சு கொடுத்தேன். உமா, மாங்காத் தொக்கு போட்டுக் கொடுத்தா.. உங்க மாமியார், 'பரவாயில்ல, நீ கவலைப்படாம போயிட்டு வா.. ரெண்டு நாளைக்காவது என் பையன் காபி நேரத்துல லஞ்ச், லஞ்ச் நேரத்துல பிரேக்ஃபாஸ்ட்னு பைத்தியம் பிடிச்சுத் திண்டாடாம ஒழுங்கா நேரத்துக்குச் சாப்பிட்டட்டும்'னு நக்கலா சொன் னாங்கனு ஒரு பாட்டம் அழுது ஓய்ஞ்சே. ஏய்.. இரு.. இரு.. இப்ப எதுக்கு திருப்பி அழ ஆரம்பிக்கறே?''

''பின்னே என்ன.. நானே கிழிஞ்ச துணிய எடுத்துட்டு வந்துட்டு, குளிச்சிட்டு எதைக் கட்டிக்கறதுனு தெரியாம உன்னை ஐடியா கேக்க வந்தா, திட்டறியே.. இதுக்குத்தான் நான் உங்களோட எல்லாம் சேர்ந்து ஒரு இடத் துக்கும் வர மாட்டேன்னு சொல்றது..''

அந்த ஒரு நிமிடத்தில் அவளுடைய முட்டைக் கண்கள் வெளியே பிதுங்கி விடுவதுபோல அழுவதைப் பார்க்கும் போது, மனம் கரைந்து போய்விடும்.

*‘‘இப்ப என்ன.. என்கிட்ட இன்னொரு எக்ஸ்ட்ரா புடவை இருக்கு. கட்டிக்க..’’*

*‘‘தாங்க்ஸ் இவளே.. ஆனா ரவிக்கை? உன் ரவிக்கை எனக்கு ரொம்ம்ம்ப லூஸா இருக் குமே..’’*

*‘‘ஆமா.. இதை இன்னும் பெரிசா, கல்யாண மண்டபம் முழுக்கக் கேக்கற மாதிரி மைக் வச்சுக் கத்து..’’*

*‘‘நான் இப்ப என்ன சொல்லிட்டேன்? என்னை விட நீ பதினோரு கிலோ ஜாஸ்தி.. இல்லியா?’’*

*‘‘மென்னிய முறிச்சிடுவேன். அப்படியே ‘பெட்டி கோட்’டோட ரூம்ல நிக்க வச்சு, கதவைப் பூட்டிட்டுப் போயிடுவேன். உனக்கு என்ன இப்ப.. ரவிக்கைதானே வேணும்? நான் ஜெயந்திகிட்ட இருந்து வாங்கித் தர்றேன்..’’*

*‘‘இந்தப் புடவைக்கு மேட்ச்சா கிடைக்குமா?’’*

*‘‘இது ரொம்ப ஓவரா தெரியல? ஏதோ ஒரு ரவிக்கை.. அடக்கவொடுக்கமா போர்த்திட்டே இரு..’’*

*ஆள் ஆளுக்குக் கத்துவோம். ஆனால் அவளோ, எதற்குமே அலட்டிக் கொள்ளாமல் என்னிடமிருந்து புடவை, ஜெயந்தியிடமிருந்து ரவிக்கை, இன்னொருத்தி யிடமிருந்து பவுடர், டூத் பேஸ்ட் இப்படி ‘பவதி பிட்க்ஷாந் தேஹி’ என்று ஒரு ரவுண்டு புறப்பட்டுப் போவாள். எல்லாம் முடிந்து, இவள் கல்யாண மண்டபத்துக்குள் பிரவேசிக்கும்போது நாங்கள் டைனிங் ஹாலில்..*

*‘‘என்னை விட்டுட்டு சாப்பிட வந்துட்டீங்க. என்னது இது.. காலம்பற டிபன்னா ஒரு இட்லி, பொங்கல், கல்கண்டு பாத், வடை.. இப்படிப் போடாம, பருப்பு, பாயசம், சாதம்னு பரிமாறுறாங்க..’’*

*நாங்கள் அத்தனை பேரும் முறைத்தாலும் சாம்பலா காமல் இருக்கிறாளே.. அதிசயம்!*

*‘‘ஏய்.. நீ சீவி முடிச்சு சிங்காரிச்சு வர்றதுக்குள்ள டிபன் கடை முடிஞ்சு, முகூர்த்தம் முடிஞ்சு, சாப்பாடு.. இது கடைசி பந்தி. இன்னும் லேட்டாக்கியிருந்தே.. அண்டா, குண்டானை வழிச்சுப் போட வேண்டி வந்திருக் கும்..’’*

*கல்யாணம் முடிந்து, இரவு ரயிலேறும் போதும் லேட்தான். சாவகாசமாக, பட்சணப்பையில் போட்டுத் தந்த முறுக்கை எடுத்து, ‘திருநெல்வேலி சுத்தே அலாதிதான். பாரு.. ஒவ்வொரு இழையும் தாம்புக் கயிறு வடம் மாதிரி..’ - இப்படி சிலாகித்த வண்ணம், சாவகாசமாக இவள் வந்து உட்காரவும், ரயில் புறப்படவும் சரியாக இருக்கும்.*

*‘‘கரெக்ட் டயத்துக்கு வந்துட்டேனில்ல?’’ முகத்தில் பரவசப் புன்னகை.*

*‘‘முறுக்கு சாப்பிடறியா?’’*

*‘‘இருக்கட்டும்.. காலம்பற கட்டிக் கறதுக்கு பட்டுப் புடவை கொடுத்தேனே.. எங்கே?’’*

*‘‘அச்சச்சோ!’’*

*‘‘என்ன.. என்ன ஆச்சு?’’*

*‘‘அது உன் புடவையா..? அங்கே மண்டபத்துல சிவப்பா, உயரமா ஒரு ஆன்ட்டி இருந்தாங்களே.. அதாம்பா நம்ப சங்கரியோட மாமியார். நான் அவங்களோடதாக்கும்னு.. இதுக்குத்தான் என்னை, ‘கிளம்பு, கிளம்பு’னு அவசரப் படுத்தாதீங்கன்னு முட்டிக்கறேன்.. கேட்டாத் தானே..! அந்த ஆன்ட்டிகூட ஏதோ சொல்ல வந்தாங்க. நான்தான், ‘ஏற்கெனவே ரயிலுக்கு நேரமாச்சுனு ஒவ்வொருத்தியும் கத்திட்டிருக்காங்க ஆன்ட்டி..’னு.. ஏய்.. ஏய்.. ஏம்பா இப்படி முறைக்கறே..?’’*

மறுபடியும் லோச்சுவின் முட்டைக்கண் வெளியே பிதுங்கும் கண்றாவியை விவரிக்க வேறு வேண்டுமா?



உங்களுக்கு ஏதாவது உதவி.. அதாவது கைக்கு ஒத்தாசையாக கருவடாம் போடுவது.. முறுக்கு சுற்றுவது இதற்கெல்லாம் ஆள் வேண்டுமா?

உங்கள் வீட்டு வால்களை.. வயசான மாமனார், மாமியாரைப் பார்த்துக்கொள்ள வேண்டுமா.. கூப்பிடுங்கள் தாட்சா-யிணியை!

யாரது தாட்சாயிணி என்கிறீர்களா?

இவளும் எங்களது நட்பு வட்டத்தைச் சேர்ந்த--வள்தான். என்ன செய்வது.. ஒவ்வொருத்- தரைப் போல, அடிக்கடி இவள் எங்கள் கும்பலில் கலந்துகொள்ள மாட்டாள்..

நவராத்திரி, வரலட்சுமி நோன்பு இப்படி எதற்கு அழைத்தாலும் ஒரே பதிலைத்தான் சொல்வாள்.

''கோவிச்சுக்காதேப்பா.. எங்க மாமனாரோட அக்காவும் அவங்க வீட்டுக்காரரும் வந்திருக்-காங்க. அவருக்கு பைபாஸ் ஆபரேஷன். எங்க வீட்டுலதான் தங்கியிருக்காரு..''

''மாமனாரோட அக்காவோட வீட்டுக்--காரருக்கு பைபாஸ்ஸா.. அதான் ஏற்கெனவே அவங்க பையன் ஒருத்தனை உன் வீட்டுல வச்சுப் படிக்க வச்சிட்டிருக்கே. உங்க வீட்டுல இவங்களோட சேர்த்து மொத்தம் எத்தனை பேர்?''

பதில் சொல்லத் தெரியாது தாட்சாவுக்கு. இத்தனைக்கும் அவள் கணவர் பாதி நாள் பறந்து கொண்டிருப்பார். வசதியான குடும்பம்--தான். ஆனாலும், எத்தனை பணக்கார வீட்டுப் பெண்மணிகள் இப்படி, கப்பும் கிளையுமாகப் படர்ந்து குடும்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்?

மாமியார், மாமனாரே அதிகம் என முனகுகிறவர்களின் மத்தியில் தாட்சாயிணி பொறுமையின் பூஷணிதான். (பூசணியா.. பூஷணியா.. அட, எதைச் சொன்னாலும் தாட்சா கோபித்துக் கொள்ளவேமாட்டாள். அப்படியொரு எருமை மாட்டுப் பொறுமை!)

ஏற்கெனவே இவளுடைய மைத்துனர்-களோ, நாத்திகளோ, தங்கள் பெற்றோரை கண்டுகொள்வதே இல்லை.. ''எங்க அண்ணி, தங்கமா பார்த்துக்--குவாங்க..'' என்று தலையைத் தடவி விட்டுப் போய்விட்டார்கள்.

மாமனார்காரர் நான் பார்த்த காலத்திலிருந்து (பதினைந்து வருடமாகப் பார்க்கிறேன்) படுத்த படுக்கைதான். அவரைத் தூக்கி உட்கார வைத்து, அவரோடு கொஞ்சம் பேச்சு கொடுக்க ஒரு ஆளைப் போட்டிருக்கிறாள் தாட்சா. மணி என்று பெயர். அறுபது வயதிருக்கும். தினமும் தாட்சாவின் எண்பது வயது மாமனாருக்கு கோளறு பதிகம், கந்த சஷ்டி கவசம் வாசித்து சொல்லுவார். மிச்ச நேரத்தில் எப்போதா செத்துப்போன தன் மனைவியின் பெருமையைச் சொல்லிச் சொல்லி மாய்ந்துப்போவார்.

''அவ புளி அவல் செஞ்சு சாப்பிடணும் சார்.. தேவாமிருதம்! போயிட்டாளே.. என்னைத் தவிக்க விட்டுட்டு..''

மணி மூட் அவுட் ஆகிவிட்டால், மாமனா-ருக்கு யார் பணிவிடை செய்வது.. ஆதலால் தாட்சா, புளி அவல் செய்துதான் தீர வேண்டும்!

தவிர, தாட்சாவின் மாமியார் பங்காரம்-மாவுக்கு தினமும் வேப்ப எண்ணெய் தேய்த்து உருவிவிட, தனபாக்யம் என்றொரு பெண்மணி.. ஒருபக்கம் மாமியாரின் காலை உருவிக்-கொண்டே, தாட்சாவிடம் தன் குடும்பச் சண்டையை சொல்லியே தீர வேண்டும் அவளுக்கு.

*‘‘என் பேத்தி, சமைஞ்ச சேதி போனா, தாய்-மாமங்காரன் பச்சை ஓலை போட்டு, வரிசை வைக்க வாணாமா. வரல்ல.. விடுவேனா நானு.. தே, என்ன முழிக்கறே.. விடுவேனா நானு..’’*

*‘‘பின்னே, விட முடியுமா..’’*

*‘‘ஆ.. அப்படிச் சொல்லு.. அம்மாடி, நேத்து சாம்பார்லே பருப்பு ஜாஸ்தி. கொஞ்சம் குறைச்சே போடு. வாய்வு கண்டுக்கறது..’’*

*தனபாக்யத்தின் வாய்வு பிடிப்புக்கு பூண்டு தட்டிப் போட்டு ரசம்..*

*இத்தனைக்கும் நடுவில் மாமனாரின் அக்காள். அவள் புருஷனோடு..*

*மாமனாரை எழுப்பி உட்கார வைக்க மணி என்றால், அத்தை வீட்டுக்காரரின் கை பிடித்து வாக்கிங் அழைத்துப்போக பிச்சுமணி என்கிற முப்பத்து இரண்டு வயசு வாலிபன். தாட்சாயிணியின் கணவருக்குத் தெரிந்தவன். சமீபத்தில்-தான் கல்யாணம்- ஆகியிருந்தது.*

*‘‘புருஷனையும் பெண்டாட்டியையும் பிரிச்சு வைக்கிறது மகா பாவம்..’’*

*இப்படி வீட்டிலுள்ள கிழங்களில் யாரோ சொல்லித் தொலைக்க.. பிச்சுமணி, தன் தர்மபத்தினி செல்லத்துடன் தாட்சா வீட்டிலேயே குடித்தனம்.*

*இதனால் தாட்சாவுக்கு ஏற்பட்ட நெருக்கடி என்னவென்றால், சொந்த வீட்டுக்குள்ளேயே எந்த அறைக்குப் போக வேண்டுமானாலும் கையில் ஒரு கரண்டியையும் தட்டையும் வைத்துத் தட்டிக் கொண்டே போகவேண்டும். ‘எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ’ என்பது போல எந்தக் கதவிடுக்கில் பிச்சுமணியும் செல்லமும் ரொமான்ஸ் ரகசியங்களை அரங்கேற்றிக் கொண்டிருப்-பார்களோ தெரியாது.*

*பெரிசுகளுக்கெல்லாம் பத்திய சமையல். நடுவே தாட்சாயிணியும் பெற்று வைத்திருக்கிறாளே.. அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் மாமனாரின் அக்காளின் கடைசி பையனுக்கும் தினமும் தோசை, சப்பாத்தி, உருளைக் கிழங்கு, தனபாக்கியத்துக்கு முருங்கைக் கீரை, பூண்டு ரசம்.. மணி, எப்போது மனைவியை நினைத்து கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தாலும் தவல வடை, போளி பால் கொழுக்கட்டை..*

*நடுநடுவே, ‘அவருக்கு ரவா தோசை சாப்பிட்டு ரொம்ப நாளாச்சாம் அக்கா’ - இப்படி வெட் கத்தில் முகம் சிவக்கச் சொல்லும் செல்லத் தின் விருப் பத்துக்கு இணங்க ரவா தோசை, கெட்டி சட்னி..*

*சமீபகாலமாக செல்லத்துக்கு மசக்கையாம். எங்கேயாவது அடுப்பு சாம்பல் கிடைக்-குமா என்று சிநேகிதிகள் ஒவ்வொருத்தி யிடமும் அழ மாட்டாத குறையாகக் கெஞ்சிக் கொண்டிருக்-கிறாள் தாட்சா.*

*‘‘எல்லாரும் எலெக்ட்ரிக் ஸ்டவ், காஸ் அடுப்பு வச்சிட்டு-ருக்கற காலத்துல அடுப்பு சாம்பலுக்கு எங்கே போறது.. ‘கிடைக்கலே’--யின்னு சொல்-லேன்..’’*

*இப்படி நாங்கள் சொன்னதுக்கு தாட்சாயிணி பரிதாபமாக விழித்தாள்.*

*‘‘அப்படியெல்லாம் சொல்ல முடியாது இவளே.. சாம்பல் இல்லையின்னா செல்லம் மூட் அவுட்டாயிடுவா.. அப்புறம் பிச்சுமணி முகம் பார்க்க சகிக்காது. அவன் சரியா நடந்துக்-கலைன்னா அத்தை வீட்டுக்காரர் கடுப்படிப்பார். அவர் சத்தம் போட்டா, ஹார்ட்டுக்கு ஏதாவது ஆகிடப் போறதேயின்னு அத்தை அழுவா.. இதைப் பார்த்துட்டு மணி, தன் செத்துப் போன பெண்டாட்டியும் இப்படித்-தான் செங்கல் பொடி கேட்டுட்டு செத்துப் போனானு சொல்லி மூஞ்சை ‘உம்’முனு வச்சிட்டு மோட்டு வளையப் பார்ப்பார்.. அவர் அப்படி உட்கார்ந்துட்டா.. எங்க மாமனார்..’’*

*‘‘போதும்மா.. உன் பேரை ‘தாட்சாயிணி’-ங்கறதுக்கு பதிலா ‘தாட்சண்யாயிணி’ன்னு மாத்திக்க..’’*

நான் சொல்ல, அதைக் காதில் வாங்கக் கூட நேரமின்றி ஓடுகிறாள் பாருங்கள்.

---

## அனுராதா ரமணன்



**ஆ**டி மாதம் வருகிறதா.. தனலட்சுமியை நீங்கள் தி.நகர் ரங்கநாதன் தெரு, பாண்டி பஜார் துணிக்கடைகளில்தான் பார்க்க முடியும்.

'ஆடிக் கழிவு' - இப்படி தினசரிகளிலும், டி.வி-யிலும் விளம்பரம் வரத் தொடங்கி விட்டாலே, தனலட்சுமியின் கணவர் கோட்டீஸ்வரனுக்கு வயிற்றைக் கலக்கத் துவங்கி விடும்.

எங்கே தள்ளுபடி என்றாலும் பாய்ந்து விடுவாள் தனம். அதுவும் எப்படி.. காலையில் ஒரு காபியைக் குடித்துவிட்டு, கணவரையும் குழந்தைகளையும் 'கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்குங்கப்பா' என்று முகவாயைப் பிடித்து கொஞ்சி விட்டுக் கிளம்பினாள் என்றால், இரவு பத்து மணிக்கு அவளே தள்ளுபடியில் தள்ளப்பட்ட நைந்து போன சேலை மாதிரிதான் வீடு திரும்புவாள்.

''உஸ்.. அப்பப்பா! அது என்ன கூட்டம்.. அப்படியே அம்முது. 'அம்பது பர்ஸன்ட் ரிடக்ஷன்'னா அவளவளுக காரைப் போட்டுட்டு வந்துடுவாளுகளே! இதுக்குன்னே காத்திட்டிருப்பாளுக போலருக்கு.''

கோட்டீஸ்வரனுக்கு தொண்டைக்-குள் கேள்வி சிக்கிக் கொண்டு இம்சிக்கும்.

எங்கே..? அவன் கேட்கும் முன்பே, தனலட்சுமி தனது ஞான திருஷ்டியால் அவனது கேள்விகளை ஊகித்து 'படபட'வெனப் பொரிந்து தள்ளி விடுவாள்.

''பெரிய பணக்காரங்க வீட்டுப் பொம்பளைங்-களுக்காகத்தான் புதுசு புதுசா டிசைனர் ஸாரீஸ் எல்லாம் வருதே.. தள்ளுபடிக்-கும் ஏன் வந்து விழணும்ங்கறேன். அதெல்லாம் நம்மளைப் போல மிடில் கிளாஸ் ஃபேமிலிக்குத்-தானே..''

''அதில்லே.. வந்து.. நீயும் கார்லதான் போறே.. சொந்தக் கார்லே இல்லையின்னாலும்..'' கோட்டி மிடறு விழுங்கும் அந்த கொஞ்ச நேரத்துக்குள் இடையில் புகுந்து வெட்டுவாள்.

''அது சரி.. ஏதோ ஒரு நாளைக்கு வாடகை கார்ல புடவைக் கடைங்களுக்குப் போயிட்டு வர்றதும், சொந்த கார்ல சொகுசாப் போறதும் ஒண்ணா..? அங்க வந்து பாருங்க.. வாடகை கார், ஆட்டோ ஏதானாலும் பாண்டி பஜார் முனையிலயே நிறுத்திடறான். தள்ளுபடி கூட்டத்துல கார் போகாதாம்.. இதே, சொந்த கார் வச்சிருந்தா மரியாதையே தனிதான். எனக்குத் தெரியாது.. வர்ற தீபாவளிக்குள்ள தள்ளுபடியில் ஒரு புது கார் வாங்கிடுங்க.''

''அதுக்கெல்லாம் ஏது பணம்..? போன தள்ளுபடியில நீ வாங்கின புடவை, துணிமணிகளுக்கான பணத்தையே இப்பதான் கட்டி, கிரெடிட் கார்டை ஒரு மாதிரி பார்க்க கௌரதையாக்கியிருக்கேன். மறுபடியும்னா..''
அவ்வளவுதான்.. தனலட்சுமியின் கண்கள் குளமாகிவிடும். அழுவதற்கென்றே பெயர் பெற்ற நடிகைகளான விஜயகுமாரி, சௌகார் ஜானகி, இன்னும் பெயர் தெரியாத பல சீரியல் நடிகைகளே பிரமிக்கும் அளவுக்கு விசும்பி விசும்பி அழுவாள்.

''நான் எனக்காகவா வாங்கறேன்.. நீங்க இப்பத்தான் தக்கிமுக்கி மாசம் அறுபதா-யிரம்(!) வாங்கறீங்க. ஆனா, நீங்க இருபதா-யிரம் ரூபா சம்பளம் வாங்கிட்டு இருக்கறப்-பவே, என்னை எங்கப்பா, கொஞ்சம் கூட யோசிக்காம உங்களுக்குக் கட்டி வச்சார். சம்பளத்தை மட்டும்தான் பார்த்தாரே தவிர உங்க ஃபேமிலி பேக்கிரவுண்டைப் பார்த்தாரா? அஞ்சு தங்கச்சிங்க.. நாலு சின்ன மாமியார். சர்ர்ர்ர்ர்..''

கடைசி 'சர்ர்ர்ர்' மூக்கு உறிஞ்சல்.. உண்மையில் கோட்டீஸ்வரனுக்குப் பெரிய குடும்பம்தான். ஆனால், ஒருவரும் இவர்கள் கையை எதிர்-பார்த்து வாழவில்லை. லண்டனி-லும் அமெரிக்காவிலும் அமர்க்கள-மாக வாழ்கிறார்கள். இந்தியா--விலேயே இருக்கும் இரண்டு மாமியார்-களுக்கும் ஏகமாக சொத்துக்கள் இருக்கின்றன.

அப்படியானால், தனத்தின் உருக்கம் எல்லாம்..? 'ச்ச்ச்சும்மா! தள்ளுபடி மேனியாவால்-தான்!

சில சமயங்களில் தள்ளுபடி விற்பனையாம் என்று டவுனிலுள்ள கோடவுன் தெரு, கந்தசாமி தெரு, கோவிந்தப்ப நாயக்கன் தெரு என்று போய் விடுவாள்.

''வெளில வாங்கினா ஐந்நூறு ரூபாய் புடவை.. இங்கே இருநூறுதான். என்ன, ஃபேக்டரி ஹோல் சேல் விலை. எங்கேயாவது கொஞ்சூண்டு டாமேஜ் ஆகியிருக்கும்.. ஆனா, அதெல்லாம் கண்ணுக்குத் தெரியாது. சொன்னால்தான் தெரியும்..''

இப்படி 'டேமேஜ்' புடவைகளில் ஒரு டஜன் வாங்கி காசை மிச்சம் பிடிப்பதாகச் சொல்லிவிட்டு, டவுனில் பார்க்கிற சாமான்களை எல்லாம் வாங்கி வருவாள் பாருங்கள்.. லிஸ்ட் போட்டால் அசந்தே போய்விடுவீர்கள்.

''ஸேஃப்டி பின் கொத்து 20..?''

''வேண்டாமா.. குரங்குங்க. தினமும் நாலு பின் தொலைக்கறதுங்க..''

''பாச்சை உருண்டை 50 பாக்கெட்டா..?''

''ஆமா. ஏற்கெனவே கடைக்காரர் 'டேமேஜ்'னு சொல்லி புடவையை விக்கிறாரு.. நாம நல்லபடியா வச்சுக்கிட்டாதானே கொடுத்த காசுக்கு கொஞ்ச நாளாவது புடவை புதுசா இருக்கும்? புடவை வாங்கிட்டாப்பல ஆச்சா.. ஒழுங்கா பிரிஸர்வ் செய்ய வேண்டாமா?''

''இது என்னது தனம்.. துணி உலர்த்த கிளிப் டஜன் டஜனா.. போதாக்குறைக்கு ஹேங்கர் வேற அம்பது.. இது சோப்புத் தூளா.. எதுக்கு? நாமதான் ஏற்கெனவே..''

கோட்டி வாயைத் திறந்து கேட்டு விடக் கூடாது.. வேலைக்காரி கிளிப்பை முழுங்கி விடுவதாகவும், புடவைகளை ஹேங்கரில் மாட்டினால்தான் வேண்டிய-போது எதையும் கலைக்காமல், தேவையானதை மட்டும் உருவ முடியும் என்றும் சொல்லுவாள். இந்த சோப்புத் தூள்.. ஒன்று வாங்கினால் ஒன்று இனாமாம்.

சரி.. என்னவோ தன் புகுந்த வீட்டு மனிதர்களுக்காக புடவை, துணிமணியைத் தேடித் தேடி வாங்குவதாக அடிக்கடி சொல்கி-றாளே.. அது என்ன சங்கதி? என்கிறீர்களா..

கொடுப்பாள்.. அதெல்லாம் தனத்துக்கு தாராள மனசு. அதற்கென்றே பொங்கல், தீபாவளி, ஆடி வெள்ளி, தை வெள்ளி போன்ற நாட்களில் 'ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்' என்ற ரீதியில் வாங்கிய புடவைகளை அள்ளிக் கொடுப்பாள்.

''அத்தை, இந்த மஞ்சளைப் பார்த்தவுடனேயே இது உங்களுக்குத்தான்னு எடுத்து வச்சிருக்கேன்..''

''சின்னத்தை, உங்களுக்கு இந்த காபிப் பொடி கலர் எடுப்பா இருக்கும். பெரிய அத்தைக்குக்கூட இதும்மேல ஒரு கண்ணுதான். நான்தான் இது சின்ன அத்தைக்குனு சொல்லிட்டேன். யார் என்ன

வேணா நினைச்சுக்கட்டும்.''

இவள் கட்டும் புடவை மட்டும் புத்தம் புதிய டிஸைனாக இருக்கும்.

'இது நல்லாயிருக்கே.' - இப்படி யார் கேட்டாலும், ''என்னமோ போங்க.. எங்கம்மாதான் சொல்லச் சொல்லக் கேட்காம, காசைக் கொண்டு போய் புடவையில போடறாங்க.. த்சி!'' என்பாள்.

அந்தப் புடவையின் விலையும், வாங்கிய கடை பெயரும் கோட்டீஸ்வரனுக்குத்தான் தெரியும். அவன் பார்க்க வேண்டாம் என்றாலும் கிரெடிட் கார்ட் சொல்லித் தொலைக்கிறதே!



சூடாமணியை நான் டிசம்பர் சங்கீத சீஸன்களில் மட்டும்தான் பார்த்திருக்கிறேன். மற்ற நாட்களில் அவள் எங்கே இருக்கிறாள், என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்றே தெரியாது.

ஒல்லியாக, உயரமாக இருப்பாள். அலங்காரத்தில் எல்லாம் அதிகம் அக்கறை எடுத்துக்கொள்ள மாட்டாள். முப்பத்தைந்து வயசுக்கு அந்த பன் கொண்டையும், கனமான மூக்குக் கண்ணாடியும் சேர்ந்து, பத்து வயசை தாராளமாகக் கூட்டிச் சொல்லும். காலில் ரப்பர் செருப்பு. தோளில் துணிப்பை. அதில் எந்தெந்த சபாவில், யார் யார் எத்தனை மணிக்குப் பாடுகிறார்கள் என்கிற குறிப்புப் புத்தகம். தவிர ராகங்கள், கீர்த்தனைகள் பற்றிய டைஜஸ்ட் போல் ஒரு புத்தகம்.

'சரி, எத்தனையோ பேருக்கு சங்கீதத்தில் அளவுகடந்த ஆர்வம் இருக்கும். அவர்களுக்குத்தானே சீஸனே இருக்கிறது.. பின்னே, உன்னைப் போன்ற ஞான சூன்யங்களுக்காகவா?' என்று கேட்கிறீர்கள்-தானே.. நியாயமான கேள்வி.

சூடாமணி மாதிரி சங்கீத சமுத்திரத்தில் நீந்துகிற ரகமெல்லாம் இல்லை நான். என்றாலும் எப்போதாவது கச்சேரிகளுக்குப் போவேன். அப்படிப் போகும்போது, அக்கம் பக்க நாற்காலி-களில் எங்கேயாவது சூடாமணி இருந்து தொலைக்கப் போகிறாளே என்று கிலியுடன் திரும்பி பார்த்தபடிதான் உட்காருவேன். என் அதிர்ஷ்டம், நான் போய் உட்கார்ந்ததும் என் பக்கத்து ஸீட் அம்மணிக்கு கேன்டீனில் இத்தனை நேரத்துக்கு சுடச்சுட போண்டா போட்டிருப்பது நினைவுக்கு வந்து தொலைக்கும்.

''அப்பப்போ ஏதாவது சாப்டுட்டே இருக்க சொல்லி இருக்கார் டாக்டர்'' - இப்படிப் பொத்தாம் பொதுவாக சொல்லியபடியே கிளம்பிவிடுவார். அந்த நாற்காலியில், மரப்பல்லி மாதிரி எங்கிருந்தோ 'சொத்'தென வந்து விழுவாள் சூடாமணி.

''எத்தனை உருப்படி போச்சு?''

''ஏ.. எது.. இப்பத்தான் ஒரு அம்மா எழுந்து போயிருக்கா''

''நான் அதைக் கேட்கலே.. கச்சேரியில இது எத்தனாவதுன்னு.. த்ச்.த்ச்.. பாரதீய வித்யாபவன்லே சௌம்யா.. அதை முடிச்சுண்டு இங்கே வர்றதுக்குள்ள போச்சு..''

''போனாப் போறது.. இதுல இருந்து கேட்கலாமே..''

''நோ.. நோ.. அப்படி லேசா விட்டுடக் கூடாது நீங்க. டி.வி. சங்கர நாராயணன்னா ரெண்டாவது

அயிட்டம் முகாரி.. பிரமாதமா இருக்கும். அருணா சாய்ராம்னா ரெண்டாவது பூர்வி கல்யாணியோ ஸ்ரீராகமோ இருக்கும். அதுல என்ன ஸ்பெஷல்னா..''

சூடாமணி, கிட்டத்தட்ட என் பக்கமே திரும்பி உட்கார்ந்து, ஏதோ எட்டாம் கிளாஸ் மாணவிக்கு டியூஷன் எடுப்பது போல எடுக்கத் தொடங்கி விடுவாள்.

எதிரே கச்சேரி மேடையை நான் ஒரு கணம் கூட திரும்பிப் பார்க்க முடியாது. அப்படியே மீறி நான் திரும்பினாலும் ரகசியமாக ஒரு அதட்டல் போடுவாள் - ''ஒண்ணும் சுகமில்லே. இதைப் போய் சிரத்தையாகக் கேட்கறீங்களே.. இதே கீர்த்த-னைய நீங்க எம்.எல்வி பாடிக் கேட்கணும்..''

'மனசுக்குள்ள என்ன சேஷகோபாலன்னு நினைப்பா.. ஒரு வர்ணம் விஸ்தாரமாப் பாடத் துப்பில்லே..' 'மல்லிப் பூவை எம்.எஸ் மாதிரி வளைச்சு வச்சுட்டா மாத்திரம் போதாது, அந்தக் குரல் எங்கே.. இந்த இழைப்பு எங்கே..'

- சூடாமணியின் ரன்னிங் காமென்ட்ரி-யில் நமக்கு ஒரு பாட்டும் காதில் விழாது. சரி, அதுவாவது தொலைகிறது.. நம்மைச் சுற்றி இருப்பவர்கள் மத்தியில் நமக்கு நல்ல பேராவது உண்டா என்றால், அதுவும் இல்லாமல் பண்ணி விடுவாள் மகராசி.

இப்படித்தான் ஒருமுறை கச்சேரியில் பிரமாதமாகப் பாடிக் கொண்டிருந்தார் ஒரு பாடகர். நடுநடுவே, முன் வரிசையி-லும், பின் வரிசையில் எங்களுக்குப் பக்கத்தில் இருந்தவர்களையும் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டு, கண்களை மூடிக் கண்ணீர் தளும்ப உருக்கமாக பாடினார்.

''இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லே!'' - சூடாமணியின் சூடான விமர்சனம் இது.

''பின்னே என்ன.. சுருதி ஒரு இடத்துல நிற்க மாட்டேங்கறது. தேவ காந்தாரியைப் பாடுறேன்னு தேம்பித் தேம்பி அழுவானேன்.. இந்தப் பாட்டைக் கேட்டுட்டு, நாம இல்லே அழணும்..''

இரைச்சலாகச் சொன்னது இவள்.. பக்கத்தில் இருந்து தொலைத்ததைத் தவிர நான் ஒரு பாவமும் அறியேன்.

ஆனால், எனக்கு முன்னாலும், பக்கத்திலும், பின்னாலும் மொத்தமாக சொல்வதானால், எங்களைச் சுற்றிலும் பாடகரின் மனைவி, மாமனார், மாமியார், மச்சினர், பந்து மித்ரர்கள்..

அத்தனைப் பேருக்கும் என்னுடைய பூசனிக்காய் முகம்தான் பளிச்சென்று தெரிந்தது போல..

இதற்குப் பிறகு அந்த பாடகரோ, அவரைச் சேர்ந்தவர்களோ - என்னை எங்கே பார்த்தாலும் ஏதோ, த்ரிஷாவை மிரட்டும் பிரகாஷ்ராஜைப் போல முறைத்தார்கள்!

''அய்யா, அம்மா.. நான் ரொம்ப ரொம்ப அப்பாவி. எனக்கு கர்நாடகா காவேரி-யைக் கூடத் தெரியாது. கர்நாடக தேவகாந்தாரியைக் கண்டு கொள்வதெல்லாம் அடியேனுக்கு சாத்தியமே இல்லாத மேட்டர். ஆனால், என் பக்கத்தில் ஒரு விஷ ஜந்து.. ஜோல்னா பை சகிதம் வந்து உட்காருகிறா-ளே.. எல்லாம் அவள் செய்த சங்கீத கலவரம். அவள் பேசின பேச்சுக்கெல்லாம் நான் ஜவாப்தாரி இல்லை. இதை எங்கே, யார் தலை-மீது வேண்டுமானா-லும் சத்தியம் செய்ய தயார்..''

- இப்படி நானும் பார்வையாலேயே கெஞ்சியிருக்கிறேன். முடிந்தால் இந்த சங்கீத சூடாமணியை இழுத்து வந்து சொல்லச் சொல்லவும் தயாராக இருக்கிறேன்.

எங்கே..


இப்போதெல்லாம் ஏதாவது ஒரு சந்தில் அல்லது மரப் பொந்தில் ஒளிந்திருப்பாள்.

கரெக்ட்டாக சங்கீத சீஸனில், மூக்கிலிருந்து நழுவும் சோடாபுட்டி யைச் சரி செய்தபடி நேராக நான் உட்கார்ந்திருக்கும் இடம் பார்த்து வந்து உட்கார்ந்து -விடுவாள்.

''சௌக்கியமா..? என்னது இது.. கதனகுதூகலமா ஆரம்பிக்கிறார்?''

- இப்படிக் கேட்டு, என் குதூகலத்தையே அள்ளிக் கொண்டு போவாள் துரோகி!

**அனுராதா ரமணன்**



ஆனந்தவல்லியை உங்களுக்குத் தெரியுமா? 'அஸ்ட்ரோ ஆனந்தி' என்றால், பெண்ணைப் பெற்று வைத்திருப்பவர்கள் மத்தியில் வெகு பிரசித்தம்..

''அது என்ன பெண்ணைப் பெற்றவர் களுக்கு மட்டும்தான் ஆனந்தியைத் தெரியுமா.. பிள்ளை வீட்டுக்காரர்களுக்குத் தெரியாதா?'' எனக் கேட்கிறீர்களா?

1967-ம் வருடம் முதல் பிறந்த பெண் குழந்தைகளின் வீடுகளில் எல்லாம், அஸ்ட்ரோ ஆனந்தியின் பிள்ளை சிரஞ்சீவி பிரகாஷின் ஜாதகம் வலம் வந்திருக்கும்.

1967-ல் பிறந்த பெண்களுக்கு இப்போது நாற்பது வயதாகியிருக்குமே.. அவர்களுக் கெல்லாம் கல்யாணமாகி, அவர்களுக்குப் பெண் குழந்தை இருந்தால், அதற்கே பதினெட்டு, இருபது வயதாகி இருக்குமே என்று கணக்குப் போடுகிறீர்கள்தானே..

கண்டிப்பாய்.. பிரகாஷை விசாரித்து வந்த வரன்கள் எல்லாவற்றுக்கும் கல்யாண மாகிவிட்டது. இவன் மட்டும்தான், வழுக்கை மண்டையைத் தடவிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்..

என்ன செய்யலாம்? ஆனந்தி எந்த ஜாதகத்தையும் அத்தனை லேசில் ஒப்புக் கொள்ள மாட்டாள். பத்துப் பொருத்தத்துக்கு பதினெட்டுப் பொருத்தம் பார்ப்பாள். இவளிடம் எந்த ஜோதிடரின் தர்க்கமும் பலிக்காது.

''அம்மா.. உங்க பையனுக்கும் செவ்வா தோஷம் இருக்கு. தோஷத்துக்குத் தோஷம் சரியாப் போச்சு..'' - இப்படி ஒரு ஜோதிடர் சொல்லப்போய், இவள், அவருக்கு நேரம் சரியில்லையோ என்னும்படியாகப் 'பிலுபிலு' என உலுக்கிவிட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

''அது எப்படி தோஷத்துக்குத் தோஷம் சரியாப் போகும்? இந்தப் பொண்ணுக்கு எட்டுல செவ்வா.. கடும் தோஷம். என் பையனுக்கு மைல்ட் தோஷம்தான். நீங்க எந்தப் பஞ்சாங்கத்தைச் சேர்ந்தவர்.. திருக்கணிதமா.. பாம்புப் பஞ்சாங்கமா.. ஏன் கேட்கறேன்னா..''

- இப்படி ஆரம்பித்து, மொத்தமாக நாட்டில் இருக்கிற எல்லாப் பஞ்சாங்கத்தையும் பக்கம் பக்கமாக அலசி, தீசிஸ் எழுதி, டாக்டரேட்டே வாங்கி விடுபவள் போலப் பேசுவாள்.

காலையில் எழுந்ததும் டி.வி-யில் ஒவ்வொரு சேனலிலும் எந்தெந்த ராசிக்கு என்னென்ன பலன்.. என்னென்ன கலரில் புடவை கட்டலாம்.. இப்படி ஆரம்பித்து, அன்றைய சூர்யோதயத்தைக் கணக்குப் பண்ணி, வாஸ்துப்படி எந்தப் பக்கம் காஸ் அடுப்பைப் பற்ற வைக்கலாம் எனப் பார்த்து விட்டுத்தான் சமையலையே ஆரம்பிப்பாள்.

''ஆனந்தி.. இட்லிக்கு சட்னி, மிளகாப்பொடி, சாம்பார் எதுவுமே இல்லாம எப்படிம்மா சாப்பிடறது..?'' வயசான மாமனார், அழமாட்டாத குறையாகக் கேட்பது காதில் விழுகிறதா..

''பரவாயில்ல. இன்னிக்கு ஒரு நாளைக்கு வெறும் இட்லி, வெறும் சாதம்தான் கடக ராசிக்கு. தேங்கா, மிளகா, எண்ணெய் எதுவும் கண்ணுல காட்டாம இருக்கறது நல்லதாம்..'' - இப்படி ஒரு போடு போடுபவள், தன் கணவரையும் பார்த்து, பரிவுடன் சொல்வாள்..

''இதப் பாருங்க.. இன்னிக்கு அரிசி, அரிசி சார்ந்த பொருள் எதுவுமே உங்களோட சிம்ம ராசிக்கு ஆகாது. சந்திரன் வக்ரத்துல போய் நீச்சமடைஞ்சிருக்கறதால, பால், மோர், தயிர் இதெல்லாமும் ஆகாது. பேசாம நாலு வாழைப்பழத்தை உரிச்சு வாயிலே போட்டுட்டுக் கிளம்புங்க..''

வீட்டுக்காரர், பெண்டாட்டி சொல்படிக் கேட்டுத்தான் தீர வேண்டும். மீறி நடந்துவிட்டு, சாயந்திரம் 'அக்சூ' என ஒரு தும்மல் போட்டால் கூட.. ''நான் சொன்னேனே.. கேட்டீங்களா.. சந்திரன் நீச்சமா இருக்கறப்ப சனி பிடிச்சா, அப்படியே மண்டையில போய் தண்ணி வச்சிடும்.. மூளை கூட கொஞ்சம் பிறண்டாப்பல ஆயிடும்..'' - இப்படி புலம்பத் தொடங்கி விடுவாள்.

ஆனந்தியின் மைத்துனன் ஒருத்தன்.. முப்பத்தாறு வயசு வரைக்கும் அண்ணியின் ஆணையை மீறாமல், ஏதேதோ கோயில்களுக்கும் பரிகார பூஜைகளுக்கும் பணத்தைத் தண்ணீராக செலவழித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட கோயில் குருக்கள் பெண், ''யாரையும் கேட்க வேண்டாம். ஸ்வாமி மேல பாரத்தைப் போட்டுட்டு, தாலியைக் கையில எடுங்க'' என்று அதட்டி கழுத்தை நீட்ட, பையன் இப்போது கல்யாணமாகி, அழகாக குடித்தனம் செய்கிறான்.

அதற்கே ஆனந்தி, அவனைத் திட்டிக் கொட்டிக் கொண்டிருக்கிறாள். அவனுக்கு ஜாதகப்படி சந்திர மங்கள யோகம் இருக்கிறதாம். கொஞ்சம் பொறுத் திருந்தால், பிரமாதமான இடத்தில் இருந்து பெண் வந்திருக்குமாம்.

கைரேகை, பெயர் ராசி, எண் கணிதம், மலையாள மாந்திரீகம், மைசூர் கம்பள ஜோசியம், சோழி குலுக்கிப் போட்டுப் பார்ப்பது, ஆரூடம், நிமித்தம், குடுகுடுப்பைக் காரன்.. இன்னும் என்னென்ன உண்டோ, அத்தனை பேரையும் இவள் வீட்டில் பார்க்கலாம்.. கிளி ஜோசியம், எலி ஜோசியம் கூட!

அன்றைக்கு எலி ஜோசியத்துக்குக்காக ஸ்மார்ட்டாக இரண்டு எலிகளைக் கொண்டு வந்திருக்கிறார் ஒரு ஜோசியர்.

ஜோசியம் சொல்ல வேண்டிய எலிகள், அவள் கணவர் செய்த மசால் வடை வாசனையினால் மதியிழந்து, சமையலறைக்குள் ஓடிப் போய் ஒளிந்து விட்டன. ஏற்கெனவே அவர்கள் வீட்டிலிருந்த எலிகளிலிருந்து இந்த ஜோடியைத் தனியே பிரித்துப் பார்த்து, கண்டுபிடிக்கவே முடியவில்லை. எலி ஜோசியக் காரருக்கு நஷ்ட ஈடாக எத்தனையோ ஆயிரங்களைக் கொடுத்தாளாம்.

ஆனாலும் இப்போதும் அந்த எலிகள், தங்கள் வீட்டுச் சமையறையில் இடம் பிடித்தது, தான் செய்த பாக்யமே பாக்யம் என்று பக்திப் பரவசத்துடன் சொல்லிக் கொண்டிருக்கிறாள். காலையில் ஒரு தம்ளர் காபியை பரண் மீது வைத்து, ''அப்பனே எலீஸ்வரா.. தாயே எலீஸ்வரீ.. வாங்க..'' - இப்படி அன்புடன் அழைத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள்.

ஆனால், முன்னைப்போல இல்லை அவள் பையன் பிரகாஷ். வீட்டுக் கூடத்திலேயே டேரா போட்டிருக்கும் இந்த ஜோதிடக்காரர்களுடன், தானும் ஒரு பாயை விரித்துப் போட்டுக் கொண்டு, விரல் தேய எண்ண ஆரம்பித்து விட்டான்.

ஆனந்திக்கு ரொம்பத்தான் பெருமை. இப்போதெல்லாம் யார் வீட்டுக்கு வந்தாலும், ''எங்க பிரகாஷ் ஒரு ஜாதகத்தைப் பார்த்துச் சொன்னா, அந்த பிரம்மாவே சொன்ன மாதிரி..'' - இப்படிப் பீற்றிக் கொண்டிருக் கிறாள்.

பையன், தனக்கான பெண்ணை, தானே தேடுவதில் இறங்கி விட்டான் என்பது ஆனந்திக்குத் தெரியாது.. பாவம்!

### அனுராதா ரமணன்

எங்கள் தோழிகள் வட்டாரத்தில் எல்லோரும் சேர்ந்து ஏதாவது டூர் கிளம்பினோம் என்றால், அத்தனை பேரும் கோரஸாக ஒரே கேள்வியைத்தான் கேட்போம்.

''ஏம்பா.. லோச்சுகிட்ட எத்தனை மணிக்குக் கிளம்பணும்னு சொல்லியிருக்கீங்க?''

''இன்னிக்கு ராத்திரி கோவை எக்ஸ்பிரஸ்னு சொல்லியிருக்கு. யாராவது, நாளைக்குத்தான்னு சொல்லி வச்சிடாதீங்க.'' நாங்களும் சர்வ ஜாக்கிரதையாக அத்தனை பேர் காதிலும் விழும்படியாகக் கிசுகிசுப்போம். யார் காதில் விழுந்தால் என்ன.. லோச்சு காதில் விழாமல் இருந்தால் சரிதான். 'லேட்' என்றால் அரை மணி, ஒரு மணி தாமதமாக எல்லாம் புறப்பட மாட்டாள் லோச்சு. நாங்களெல்லாம் 'சிவாஜி' பார்த்து விட்டோம். இன்னமும் அவள் 'சந்திரமுகி' படத்துக்கே கிளம்பியபாடில்லை! அவ்வளவு லேட்!



ஒருமுறை அப்படித்தான் மதுரையில் ஒரு கல்யாணம் என்று கிளம்பினோம்..

''ஏய், என்னப்பா.. அதுக்குள்ளேயா.. ராத்திரி எட்டரைக்குத்தானே டிரெயின்?''

''இப்ப மணி என்ன?''

''எட்டேகால்.. இன்னும் பதினஞ்சு நிமிஷம் இருக்கே. திருவான் மியூர்லே இருந்து எக்மோர் போயிட முடியாது..?''

முட்டைக் கண்களை உருட்டி பாவம்போல கேட்பாள். எத்தனைதான் அவகாசம் கொடுத்தபோதிலும், கடைசி நிமிஷத்தில் பி.டி.உஷா, ஷைனி வில்ஸன் மாதிரி அரக்கப் பரக்க ஓடி வருவாள் பாருங்கள்.. தலைமுடியில் சீப்பு சிக்கியபடி இருக்கும். ஒரு காலில் தன் செருப்பும் இன்னொரு காலில் மாமியார் செருப்புமாக மாட்டியிருப்பாள். காதில் ஒன்றில் ஜிமிக்கி, இன்னொன்றில் வளையம்..

''வீட்டுல எல்லாத்தையும் முடிச்சிட்டு கிளம்பி வர்றதுன்னா லேசான காரியமா.. இதுவே, பேக்கிங் எல்லாம் என் ஹஸ்பண்ட் செஞ்சாராக்கும்..'' - இப்படிப் பெருமையாகப் பேசியவள், மறுநாள் முகூர்த்த நேரத்தில் என் முதுகைச் சுரண்டினாள்..

''என்ன.. நீ இன்னும் குளிக்கலே?''

''அதுக்குத்தான் போனேன். சூட்கேஸைத் திறந்தேனா.. ஒரே ஷாக் இவளே.. பொட்டிய அவசரத்துல மாத்தி எடுத் துட்டு வந்துட்டேன்.. இது முழுக்க, பழைய பாத்திரக்காரனுக் காக எடுத்து வச்ச துணிமணிங்க.. கடைசி நிமிஷ அரிபரி யில..''

''என்ன கடைசி நிமிஷம்? கல்யாணத்துக்குப் போகப் போறதா ஒரு மாசம் முன்னாடியே தீர்மானம் பண்ணியாச்சு. 'ரெண்டு நாள் வீட்டை விட்டு நகர்றதுன்னா வீட்டுல இருக்கறவங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாங்க'னு முனகினே.. நான் புளிக்காய்ச்சல் செஞ்சு கொடுத்தேன். உமா, மாங்காத் தொக்கு போட்டுக் கொடுத்தா.. உங்க மாமியார், 'பரவாயில்ல, நீ கவலைப்படாம போயிட்டு வா.. ரெண்டு நாளைக்காவது என் பையன் காபி நேரத்துல லஞ்ச், லஞ்ச் நேரத்துல பிரேக்ஃபாஸ்ட்னு பைத்தியம் பிடிச்சுத் திண்டாடாம ஒழுங்கா நேரத்துக்குச் சாப்பிட்டட்டும்'னு நக்கலா சொன் னாங்கனு ஒரு பாட்டம் அழுது ஓய்ஞ்சே. ஏய்.. இரு.. இரு.. இப்ப எதுக்கு திருப்பி அழ ஆரம்பிக்கறே?''

''பின்னே என்ன.. நானே கிழிஞ்ச துணிய எடுத்துட்டு வந்துட்டு, குளிச்சிட்டு எதைக் கட்டிக்கறதுனு தெரியாம உன்னை ஐடியா கேக்க வந்தா, திட்டறியே.. இதுக்குத்தான் நான் உங்களோட எல்லாம் சேர்ந்து ஒரு இடத் துக்கும் வர மாட்டேன்னு சொல்றது..''

அந்த ஒரு நிமிடத்தில் அவளுடைய முட்டைக் கண்கள் வெளியே பிதுங்கி விடுவதுபோல அழுவதைப் பார்க்கும் போது, மனம் கரைந்து போய்விடும்.

''இப்ப என்ன.. என்கிட்ட இன்னொரு எக்ஸ்ட்ரா புடவை இருக்கு. கட்டிக்க..''

''தாங்க்ஸ் இவளே.. ஆனா ரவிக்கை? உன் ரவிக்கை எனக்கு ரொம்ம்ம்ப லூஸா இருக் குமே..''

''ஆமா.. இதை இன்னும் பெரிசா, கல்யாண மண்டபம் முழுக்கக் கேக்கற மாதிரி மைக் வச்சுக் கத்து..''

''நான் இப்ப என்ன சொல்லிட்டேன்? என்னை விட நீ பதினோரு கிலோ ஜாஸ்தி.. இல்லியா?''

''மென்னிய முறிச்சிடுவேன். அப்படியே 'பெட்டி கோட்'டோட ரூம்ல நிக்க வச்சு, கதவைப் பூட்டிட்டுப் போயிடுவேன். உனக்கு என்ன இப்ப.. ரவிக்கைதானே வேணும்? நான் ஜெயந்திகிட்ட இருந்து வாங்கித் தர்றேன்..''

''இந்தப் புடவைக்கு மேட்ச்சா கிடைக்குமா?''

''இது ரொம்ப ஓவரா தெரியல? ஏதோ ஒரு ரவிக்கை.. அடக்கவொடுக்கமா போர்த்திட்டே இரு..''

ஆள் ஆளுக்குக் கத்துவோம். ஆனால் அவளோ, எதற்குமே அலட்டிக் கொள்ளாமல் என்னிடமிருந்து புடவை, ஜெயந்தியிடமிருந்து ரவிக்கை, இன்னொருத்தி யிடமிருந்து பவுடர், டூத் பேஸ்ட் இப்படி 'பவதி பிட்க்ஷாந் தேஹி' என்று ஒரு ரவுண்டு புறப்பட்டுப் போவாள். எல்லாம் முடிந்து, இவள் கல்யாண மண்டபத்துக்குள் பிரவேசிக்கும்போது நாங்கள் டைனிங் ஹாலில்..

''என்னை விட்டுட்டு சாப்பிட வந்துட்டீங்க. என்னது இது.. காலம்பற டிபன்னா ஒரு இட்லி, பொங்கல், கல்கண்டு பாத், வடை.. இப்படிப் போடாம, பருப்பு, பாயசம், சாதம்னு பரிமாறுறாங்க..''

நாங்கள் அத்தனை பேரும் முறைத்தாலும் சாம்பலா காமல் இருக்கிறாளே.. அதிசயம்!

''ஏய்.. நீ சீவி முடிச்சு சிங்காரிச்சு வர்றதுக்குள்ள டிபன் கடை முடிஞ்சு, முகூர்த்தம் முடிஞ்சு, சாப்பாடு.. இது கடைசி பந்தி. இன்னும் லேட்டாக்கியிருந்தே.. அண்டா, குண்டானை வழிச்சுப் போட வேண்டி வந்திருக் கும்..''

கல்யாணம் முடிந்து, இரவு ரயிலேறும் போதும் லேட்தான். சாவகாசமாக, பட்சணப்பையில் போட்டுத் தந்த முறுக்கை எடுத்து, 'திருநெல்வேலி சுத்தே அலாதிதான். பாரு.. ஒவ்வொரு இழையும் தாம்புக் கயிறு வடம் மாதிரி..' - இப்படி சிலாகித்த வண்ணம், சாவகாசமாக இவள் வந்து உட்காரவும், ரயில் புறப்படவும் சரியாக இருக்கும்.

''கரெக்ட் டயத்துக்கு வந்துட்டேனில்ல?'' முகத்தில் பரவசப் புன்னகை.

''முறுக்கு சாப்பிடறியா?''

''இருக்கட்டும்.. காலம்பற கட்டிக் கறதுக்கு பட்டுப் புடவை கொடுத்தேனே.. எங்கே?''

''அச்சச்சோ!''

''என்ன.. என்ன ஆச்சு?''

''அது உன் புடவையா..? அங்கே மண்டபத்துல சிவப்பா, உயரமா ஒரு ஆன்ட்டி இருந்தாங்களே.. அதாம்பா நம்ப சங்கரியோட மாமியார். நான் அவங்களோடதாக்கும்னு.. இதுக்குத்தான் என்னை, 'கிளம்பு, கிளம்பு'னு அவசரப் படுத்தாதீங்கன்னு முட்டிக்கறேன்.. கேட்டாத் தானே..! அந்த ஆன்ட்டிகூட ஏதோ சொல்ல வந்தாங்க. நான்தான், 'ஏற்கெனவே ரயிலுக்கு நேரமாச்சுனு ஒவ்வொருத்தியும் கத்திட்டிருக்காங்க ஆன்ட்டி..'னு.. ஏய்.. ஏய்.. ஏம்பா இப்படி முறைக்கறே..?''

மறுபடியும் லோச்சுவின் முட்டைக்கண் வெளியே பிதுங்கும் கண்றாவியை விவரிக்க வேறு வேண்டுமா?

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 12

## அனுராதா ரமணன்



‘‘உங்க கடை துவரம்பருப்பு ‘வேகுவனா, வேகுவனா’னு வெந்துட்-டிருக்கு. டிவி---யில எத்தனை விதமான பருப்பெல்லாம் விளம்பரம் பண்றாங்க..’’

லல்லு என்கிற லலிதாவின் குரல் எட்டு ஊருக்குக் கேட்கிறதா.. கேட்கும். அப்படிக் -கேட்டு, எல்லோரும் இவளைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்பது-தான் லல்லுவின் நோக்கமே..

கடைக்காரர், எதை வைத்து இவள் வாயை அடைப்பது என்று சுற்றும் முற்றும் பார்த்து, திணறி வழிவார்.

‘‘டிவி-யில பார்த்தீங்களே.. அதே பிராண்டுதாம்மா இதுவும்.’’

‘‘யார்கிட்ட காது குத்தறீங்க.. நான் இந்தப் பருப்பைத் தூக்கிட்டு, கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போகப் போறேன். இது மாதிரி போலிகளை மார்க்-கெட்ல உலாவ விடறது-க்கு சட்டப்படி எத்தனை வருஷம் தண்டனை தெரியுமா?’’

அவ்வளவுதான்.. கடை முதலாளிக்கு ஜுரம் கண்டு விடும்.

‘‘அம்மா.. அப்படியெல்லாம் எதுவும் பண்ணிடாதீங்க.. துவரம்-பருப்பு எல்லா பிராண்டுலேயும் ஒவ்வொரு கிலோ சும்மாத்தான் - காசு வேணாம்ங்க.. வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். எது நல்லா வேகுதோ, அதையே கொடுத்தனுப்பறேன்..’’

‘‘அது..! ‘லா பாயின்ட்’ லல்லுன்னா நீதிக்காகக் குரல் கொடுப்பவங் கறதை முதல்ல தெரிஞ்சுக்கணும் நீங்க..’’

இப்படிச் சொல்லி விட்டு, நம்மைப் பார்த்து ஒரு வெற்றிச் சிரிப்பு சிரிப்பாள் பாருங்கள். அப்படியே புடவை கட்டிய ‘அந்நியன்’ விக்ரம் மாதிரி.. நான் பயத்தில் கண்களை இறுக்க்க்க்க மூடிக் கொள்வேன்.

லல்லுவுக்கு ‘லா’ எல்லாம் தண்ணி பட்ட பாடு! இதற்குத்தான் எகிறுவாள் என்று நீங்கள் யூகிக்கவே முடியாது.

ஒருமுறை சிநேகிதிகள் அத்தனை பேருமாக ‘பீச்’சுக்குப் போனோம். அன்றைக்கு எங்களிடம் சுண்டல் விற்ற தாத்தாவுக்கு அஷ்டமத்துச் சனி போல. இவளிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

அதுவும் சுண்டல், கை முறுக்குக்காக வாதாடினாளா என்றால், அதுதான் இல்லை. லல்லு சுண்டல் பொட்டலங்-களை வாங்கிக் கொண்டு இருபது ரூபாய் பணம் கொடுத்தாள். மீதி சில்லறை மூன்று ரூபாய் சொச்சம். அந்த சுண்டல் தாத்தா தர வேண்டும். அவரிடம் சில்லறை இல்லை. அசட்டுச் சிரிப்புடன் மூக்கு நுனியைச் சொறிந்தபடி சொன்னார்..

‘‘சில்லறை இல்லையேம்மா.. அதுக்கும் சேர்ந்து சுண்டல் கொடுத்துடவா..?’’

‘‘இருங்க.. இப்ப என்ன செஞ்சீங்க?’’

''என்ன.. சில்லறை இல்லை-யின்னு..''

''அதுக்கு முன்னாடி?''

''சில்லறை இருக்கானு தேடிப் பார்த்தேன்..''

''அதான்.. அதுக்கு அப்புறம்?''

'இது ஏதுடா இது வம்பாப் போச்சு?' என்று அவர் யோசிப் பதற்குள் எங்களைச் சுற்றி இருபது பேர்..

''இன்னாம்மா.. ராங் காட்டறாரா கிழவனாரு?''

''மேடம், நீங்க நகருங்க சொல்றேன்.''

சுண்டல் தாத்தா, அவசர அவசரமாக மூக்கு நுனியைத் தேய்த்து விட்டுக் கொண்டார். கண்கள் ஜிவுஜிவுக்க அழுவதற்குத் தயாராக முகத்தைக் கோணிக் கொண்டார்.

''பாருங்க.. பாருங்க.. மறுபடியும் அதே குற்றத்தைச் செய்யறீங்க. மூக்கு நுனியை என்னமோ அலாவுதீனுடைய அற்புத விளக்கைத் தேய்க்கிற மாதிரி தேய்ச்சுட்டு, அதனாலேயே சுண்டலும் எடுத்துக் கொடுத்தா சட்டப்படி என்ன தண்டனை தெரியுமா..''

சுண்டல் தாத்தா மட்டுமில்லை.. கூடியிருந்த அத்தனை பேருமே செம கடுப்புக்கு ஆளாகியிருப்-பார்கள். ஆனால், அதற்கெல்லாம் லல்லு அசருகிற ரகமில்லை. சுண்டல் தாத்தாவைப் பிடித்து அழ வைத்து, அட்ரஸை வாங்கி, அவர் பேரில் ஒரு கேஸ் ஃபைல் பண்ணின பிறகுதான் மூச்சு விட்டாள்.

தினமும் ஆட்டோக்காரர்களிடம் சண்டை. இதனாலேயே இவள் தலையைக் கண்டாலே ஆட்டோ டிரைவர்கள், பின் ஸீட்டில் முடங்கிக் கொண்டு ''ஆட்டோ வராதும்மே.. எனக்கு சிக்குன் குனியா'' என்பார்கள்.

கீரைக்காரனில் ஆரம்பித்து, பூக்காரி, கோயில் அர்ச்சகர், ஹோட்டல் சர்வர், இஸ்திரி போடுபவன்.. இப்படி எல்லார் பேரிலும் வழக்கு பதிவு பண்ணி இருக்--கிறாள்.

இவளது சமீபத்திய வழக்கு - இவளுடைய அண்ணன் சதா சிவத்தின் மேலும் அவருடைய சம்பந்தி கார்மேகத்தின் பேரிலும்.

சென்ற எலெக்ஷன் சமயத்தில் அண்ணன் வீட்டுக்குப் போயிருக்கிறாள். அண்ணனின் புது மருமகள் ஓடிவந்து வரவேற்றிருக்கிறது..

லல்லு ஒரு கணம் நின்றாள். மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக் கொண்டு, அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

''நீ வோட்டு போடப் போகலே?''

''எனக்கு அடுத்த மாசம்தான் பதினெட்டு வயசே முடியுது.. ஸ்கூல் சர்டிஃபிகேட்ல ஒரு வயசு அதிகமா கொடுத்துட்டாங்க. அதை வச்சுக் கல்யாணம்..''

''இரு.. இரு..'' - கையமர்த்தினாள் லல்லு.

''அதெப்படி மேஜராகாத பொண்ணை உன் பையனுக்குக் கட்டி வச்சே?''

அவள் அண்ணனை சாட, அவரோ பேய் முழி முழித்தவாறு தங்கையிடம் சரணடைந்தார்.

‘‘அய்யோ.. லல்ல்ல்லூ.. இதைப் பெரிசு பண்ணாதே.. எப்பிடியோ கல்யாணம் நடந்திடுச்சு.. விட்டுடேன்..’’

‘‘அது எப்படி விடறதுங்கறேன்.. அய்யோ.. அய்யோ.. என் குடும்பத்துலயே இத்தனை ஊழலா? நம்ம ஃபேமிலி எப்பேர்ப்பட்டது தெரியுமா? ஸர்.சி.வி. ராமனும் நம்ம தாத்தாவும் ஆத்ம சிநேகிதங்க. காமராஜரும் நம்ம விருதுநகர் மாமாவும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்-டோவை மறந்துட்டியா.. நான், நாலாவது படிக்கிறப்போ ராஜாஜி கையால பரிசு வாங்கியிருக்கேன். என் குடும்பத்துலயே தோண்டத் தோண்டத் தூழலா.. ச்சீ.. ஊழலா?’’

அன்றைக்கு லல்லு மீது ஊரிலுள்ள எல்லா அம்மன்களும் ஆரோகணித்து ஆடிய ஆட்டம் இருக்கிறதே.. மலையேற இரண்டு நாட்களுக்கு மேலாயிற்று. இப்போது அண்ணனின் சம்பந்திக்கு வக்கீல் நோட்டீஸ் விடப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அதாகப்பட்டது..

‘பெண் மேஜராவதற்கு முன்பே கல்யாணம் செய்து வைத்தது உண்மையா?

அல்லது, பெண்ணின் வயதை அதிகமாகக் கொடுத்து பள்ளியில் சேர்த்தது உண்மையா?’

விஷயம் தெரிந்து, அந்தப் பெண்ணைப் பெற்றவர்கள், சொல்லாமல் கொள்ளாமல் அமெரிக்கா சென்று விட்டதாகக் கேள்வி!

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 13

**ரா**ஜி வீட்டுக் கல்யாணம் ‘ஓஹோ’வென நடந்த தாக என் நட்பு வட்டத்தில் உள்ள எல்லோரும் சொன் னார்கள். அதே முகூர்த்தத்தில் வேறொரு திருமணம் கோவையில் நடந்ததால், சென்னை திரும்பியதும் ராஜி வீட்டுக்குக் கல்யாணம் விசாரிக்கப் போனேன்.

‘‘என்ன ராஜி, கல்யாணம் தடபுடலா நடந்ததாமே..’’

‘‘ப்சு.. ஏதோ ஒண்ணு..’’

‘‘ஏன் இப்படி அலுத்துக்கறே.. பாதாம்கீர்னா - ராஜி வீட்டுக் கல்யாணத்துல சாப்பிட்டதுதான் பாதாம்கீர்னு நம்ம ஃப்ரெண்ட்ஸ்லாம் சொல்லிக்கறாங்க..’’

‘‘ஆமா.. சொல்லிக்கறாளுங்க. மொத்தத்துல சம்பந்தியம்மா என் மூஞ்சியில சிரிச்சுட்டே கரியப் பூசிட்டா.. பாதாம்கீர் நல்லாயிருந்தா என்ன.. காசி அல்வா பிரமாதமா இருந்தா என்ன.. நான் என்ன, பஞ்சத்துல அடிபட்டவளா.. இல்லே, என் குடும்பம்தான் இதையெல்லாம் கண்ணால பார்த்ததே இல்லையா..? விக்..விக்..’’

நான் ஒரு கணம் அதிர்ந்து நின்றேன்.

ராஜியின் சீமந்த புத்திரனின் நிச்சயதார்த்தம் மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்தது.. அதற்கு நான் போயிருந்தேன். ராஜியின் சம்பந்தி அம்மாள் சிரித்த முகத்துடன், மகா சாந்தமாக, புராணப் படங்களில் அம்மனாக வரும் கே.ஆர்.விஜயா மாதிரி இருந்தாள். கிரீடம் ஒன்றுதான் மிஸ்ஸிங். அப்படியாப்பட்டவளா ராஜியின் முகத்தில் கரியை வாரிப் பூசியிருப்பாள்? நம்ப முடியவில்லையே..

அப்போதுதான் என் மண்டைக்குள் பல்ப் எரிந்தது.நான், ராஜியைப் பார்த்துக் கேட்டேன்..

‘‘கல்யாணத்துக்கு நம்ம ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் வந்திருந்தாங்களா?’’

''உம்..''

''கலகா.. ஸாரி.. கனகாவும் வந்திருந்தாளா..?''

''விக்.. விக்..''

ராஜியின் அழுகை பன்மடங்காகியது. எனக்கு அவள் சொல்லாமலேயே விஷயம் என்னவென்று புரிந்து விட்டது.

கனகா எங்கள் நண்பிதான். அவளுடைய சுபாவம் யாரும் 'தேமே'யென்று அவரவர் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் பிடிக்காது. ஓசைப்படாமல் போய் - அந்தப் பக்கத்தைப் பற்றி, இந்தப் பக்கம் நாலு வார்த்தை.. இந்தப் பக்கத்தைப் பற்றி எதிராளியின் வயிறு புகைவது மாதிரி நாலு வார்த்தை.. பட்டாசு திரியை நிமிண்டி கொளுத்திப் போட்டு விட்டு வந்தால்தான் நிம்மதி.

என்னதான் சிநேகமாக இருந்தாலும், அவள் தலை யைக் கண்டதுமே நாங்கள் அனைவரும் 'பெப்பரப்பே' என முழிக்கத்தான் செய்வோம். அவள் வந்து எத்தனை கலகம் மூட்டினாலும், அதையெல்லாம் நம்புவதில்லை என்று, எங்களுக்குள் நாங்கள் போட்டுக் கொண்ட அக்ரிமென்ட்டை மனசுக்குள் உரு போட்டுக் கொள் வோம். ஆனாலும், சில சமயங்களில் அசையாத நெஞ்சையும் அசைத்து விடுவாள் கலகா.. ச்சீ.. கனகா!

''ஏம்பா, என்னைப் பார்த்தவுடனே எல்லாரும், வாயில கொழுக்கட்டைய அடைச்சிட்ட மாதிரி இந்த முழி முழிக்கிறீங்க..?''

''சேச்சே.. அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா. ஏதோ பொதுவான சமாசாரம் பேசிட்டிருந்தோம். நீ வரவும் பேச்சு முடியவும் கரெக்டா போச்சு. அவ்வளவுதான்!''

''அவ்வளவுதானா.. அப்புறம், நானே உன்கிட்ட சொல்லணும்னு நினைச்சேம்பா. ஆனா, ஏற்கெனவே எனக்கு 'கலகா'னு ரகசியமா பேரெல்லாம் வச்சிருக்கீங் களே.. இதை வேற எதுக்குச் சொல்லணும்னு வாயை மூடிக்கிட்டேன். 'யார், எக்கேடு கெட்டா நமக்கென்னனு இருந்துரு'ங்கிறார் என் வீட்டுக்காரர்.. அப்படி இருக்க முடியலையே..''

கனகா ஏற்கெனவே பருத்த சரீரம்.. இது போன்ற சமயங்களில் அவள் விடும் பெருமூச்சில், எங்கேயாவது தூரத்தில் போய் விழுந்து தொலைக்கப் போகிறோமே என்று அவரவர் கையில் கிடைக்கும் தூணையும் கதவையும் கெட்ட்..ட்டியாகப் பிடித்துக் கொள்வோம். அப்படியும், சொல்ல வந்ததைச் சொல்லாமல் விட மாட்டாள். ராட்சஸி.

''வேலூர் போயிருந்தேனா.. பஸ் ஸ்டாண்டுல உன் நாத்தனாரைப் பார்த்தேன். 'எப்படியிருக்கீங்க.. மாலதிகிட்ட ஏதாவது செய்தி சொல்லணுமா?'னு கேட்டேன். அதுக்கு அவ என்ன சொன்னா தெரியுமோ..''

''......''

'' 'அவகிட்ட என்னைப் பத்தி என்ன சொல்றது.. நான் இன்னும் உயிரோடதான் இருக்கேன்ங்கறதை வேணுமானா சொல்லு'ங்கறா.. நீ அவளை பிரசவத்துக்கு அழைச்சிட்டு வந்து, எத்தனை செஞ்சே? எப்படியெல்லாம் செஞ்சே.. மாலதி.. மாலூ.. அழறியா என்ன?''

''ச்சீ.. நான் ஒண்ணும் அழலே..''

''நோ, நோ.. அழுகை வந்தா அழுதுடணும். அடக்கி வச்சாத்தான் ஆபத்து.. என்ன போ.. நாத்தனார்கள், அண்ணன் பொண்டாட்டிகளை என்னிக்குத்தான் மதிச்சிருக் காங்க..''

இங்கே இப்படி! என்னிடம் வேறு மாதிரி..

''ராஜி வீட்டுக்குக் கல்யாணம் விசாரிக்கப் போயிருந்தியா..?'' ஏதாவது கிடைக்குமா என்று துழாவியவளிடம் நேரடியாகவே கேட்டு விட்டேன்.

''ஆமா, கனகா.. இது உனக்கே நல்லாயிருக்கா? ராஜி, பையனுக்குக் கல்யாணத்தைப் பண்ணிட்டு, பறிகொடுத்தாப்ல உட்கார்ந்திருக்கா. என்னத்தைச் சொல்லி மூட்டி விட்டே நீ..?''

''அய்யோ.. நானா..''

அலறியபடி, இரு கைகளாலும் தன் மார்பில் வலிக்காமல் அடித்துக் கொண்டாள்.

''இதுதான்.. இதுக்குத்தான் நான் அநாவசியமா பேச்சே வச்சுக்கறதில்லே. அப்படியும் பாரு.. பழி என்மேலயே திரும்பித் திரும்பி வர்றது..

இதப்பாரு.. மாப்பிள்ளை அழைப்பு அன்னிக்கு நான் போகவேயில்ல. மறுநாள் முகூர்த்தத்துக்குப் போனப்ப, 'நம்ப ராஜிதானே'னு கேட்டேன்.. 'ஏண்டீ, நேத்து போளி போட்டிருப்பாங்களே.. எனக்கு ஒரு பத்து போளி எடுத்து வைக்கக் கூடாதா'னு.. அப்பத்தான் அவ சொன்னா.. 'பாதி பேருக்கு போளியே வரல்லே'னு..

'என்னடீ இது.. ஆறடி ரெண்டங்குலத்துக்குப் பையனை வளர்த்து, பொண்ணு வீட்டுக்காரங்களுக்கே தாரை வார்த்துக் கொடுக்கறே.. போயும் போயும் போளிலதானா இப்படி கஞ்சத்தனம் பண்ணணும்'னு கேட்டேன். இது பேக்கு.. நான் சொல்ற வரைக்கும் ஒண்ணும் தெரியல்லே.. இப்படியே இருந்தா, பெண்ணைப் பெத்தவ, இவ தலையில ஓட்டி மொளகா அரைக்க மாட்டாளா.. அதைத்தான் சொன்னேன்..''

''அவளோட சம்பந்திகிட்ட என்ன சொன்னே?''

''என்னத்தை சொல்லிட்டேன் பெரிசா? 'இதோ பாருங்க.. முதலாவது எங்க ராஜிக்கு உங்க பெண்ணை தன் பையனுக்குக் கல்யாணம் பண்றதுல இஷ்டமே இல்ல. 'பொண்ணு பார்க்க சுமாராத்தான் இருக்கா. எங்க குடும்பத்துப் பொண்ணுங்கள்லாம் சிம்ரன், அசின் கணக்கா இருக்காங்க'னு யோசிச்சா.. நான்தான் 'இப்பவே பையனுக்கு வயசு ஏகமா ஏறிடுச்சு'னு சொல்லி சம்மதிக்க வெச்சேன்'னு சொன்னேன். பின்ன.. அந்த அம்மாவோட ஈகோவுக்கு ஒரு நெத்தியடி தர வேணாமா? தந்துட்டேன்..'' பேசிக்கொண்டே போனவள், நான் முறைப்பதைப் பார்த்து, தலையை நட்டுக் கொண்டாள்.

''நல்லதுக்கே காலமில்லே.. எங்க மாமியார் சொல்லுவா.. கண்ணே காதே நமஸ்காரம், கண்டதைக் கேட்டதைச் சொல்லாதேனு.. இனிமே பேசறேனா பார். எனக்கெதுக்கு தலையெழுத்து..'' அவள் அழ ஆயத்த மானாள்.

தேவைதான் எனக்கு!

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 14

'**வெ**ஜிடபிள் கட்ட'ரில் எத்தனை வகை உண்டு என்பது உங்களில் யாருக்காவது தெரியுமா? தெரியாத-வர்கள் வரலட்சுமி வீட்டு சமையலறையில் வந்து பார்க்கலாம்.



ஸ்த்ரீகளுக்கு ஒவ்வொரு சமாசாரத்தில் வீக்னஸ் இருக்கும்தான். ஒப்புக் கொள்கிறேன். புடவை, நகை, சினிமா, சீரியல், பாத்திரங்களுக்காக சேமிப்பு.. இப்படி எத்தனையோ வீக்னஸ் இருக்க, போயும் போயும் வரலட்சுமிக்கு வெஜிடபிள் கட்டர்களின் மீது ஆசை.

வருடந்தோறும் எக்ஸிபிஷன் வந்தாலும் சரி.. அறுபத்து மூவர், வேளாங்கண்ணி கோயில் திருவிழா.. இப்படி எது வந்தாலும் சரி.. இவள் கட்டரைத் தேடி அலையாய் அலைவாள். பின்னாலேயே இவளுடைய கணவர் கிட்டாவும்.. பரிதாபமாக!

‘‘வரு.. இதுமாதிரி ஒரு கட்டர் ஏற்கெனவே நம்மகிட்ட இருக்கு இல்லே?’’

‘‘நோ.. நோ.. அதுல நாம பிரஸ் பண்ணித் தேய்க்கணும். கட்டை விரலும் ஆள்காட்டி விரலும் வீங்கியே போயிடும். இது அப்படி யில்ல. என்னமா ‘சரசர’னு வெட்டிக் குமிக்கறான் பாருங்க..’’

அப்படியே ரஜினியை நேரில் பார்த்த தீவிர ரசிகை மாதிரி, பரவசத்துடன் அந்தக் கடையில் வாழைக்காய் சீவிக் கொண்டிருப்பவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்-பாள்.

‘‘க்கும்..’’

கிட்டாதான் அவளை, இந்த உலகத்துக்கு மீட்டுக் கொண்டு வர வேண்டும். இவள் இப்படி தேங்காய் துருவி, கேரட் தோல் சீவி, கட்டர், ஸ்லைசர் என்று கடை கடையாக நிற்பது கிட்டாவை ரொம்பவுமே பாதிப்பதால், அவள் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து அழைத்து வந்து விடுவார்.

சொன்னால் நம்பக்கூட மாட் டீர்கள்.. பீட்ரூட், கேரட்டைத் தோல் சீவி வட்டமாக நறுக்க ஒரு கட்டர்.. அதையே நீளமாக நறுக்க வேறு ஒன்று. வெங்காயத்தைத் தோலுரித்து நடுவில் ஒரு ஆணியைச் செருகி, அதன் மீது பிளாஸ்டிக் டப்பா மாதிரி ஒன்றைப் போட்டு மூடி, அந்த டப்பாவின் உச்சந்தலையில் இருக்கும் ஸ்குரூ டிரைவர் போன்ற கருவியை உள்ளங்கையால் ‘ணங் ணங்’கென்று பலமாகக் குத்தினால், வெங்காயம் அப்படியே மல்லிப்பூ மாதிரி ‘பொலபொல’வென நறுக்கப்பட்டு வருமாம்.

‘ஒரு வெங்காயத்தைப் பொடியாக நறுக்க இத்தனை சிங்காரமா..?’ என்று யாரும் வரலட்சுமியிடம் கேட்டு விடக் கூடாது. பெண்கள் சமையலறையில், காய்கறி நறுக்குவதிலேயே பாதி ஆயுளைக் கழித்து விடுவதாகப் புள்ளி விவரமே தருவாள்.

இந்த உள்ளூர் அயிட்டங்கள் எல்லாம் தவிர, ஃபாரினிலிருந்து மச்சினர், நாத்தனார் பெண்.. யார் வந்தாலும் சொல்லி வைத்து அங்கிருந்து, எலெக்ட்ரானிக் கட்டர், கத்தி, கபடா வகைகளில் இருபது, முப்பது என வரவழைத்து, சமையலறை யையே ஆயுதக் கிடங்காக வைத்திருக்கிறாள்.

இத்தனைக்கும் இருப்பது என்னவோ - இவள், கிட்டா, இவர்களுடைய ஒரே மகன் வெங்கட் மூவர்தான். பையன் கல்லூரிக் காளை. பாதி நாள் கேன்டீனில் சாப்பாடு. இவர்கள் இருவருக்கும் கல்யாண வீட்டுக்குச் சமைப்பதுபோல ஒரு அமர்க்களம் நடக்கும்.

ஒருமுறை, இது போன்ற ஒரு சமயத்தில் நான் இவள் வீட்டுக்குப் போக.. காலிங்பெல்லை அழுத்தப் போனவள், உள்ளிருந்து வரும் கூச்சலைக் கேட்டு திடுக்கிட்டேன். வரலட்சுமிதான் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தாள்..

‘‘விட்டுடாதீங்க.. ‘கப்’புனு பிடிங்க..ஓடறது பாருங்க.. ஓடறது.. பிடிங்க..’’

‘கிட்டா கொஞ்சம் பருமன்.. அத்தனை லகுவில் எதன் பின்னாலும் ஓட முடியாது. தொந்தியும் தொப்பையுமாக ‘புசுபுசு’வென மூச்சு வாங்கும். அவரைப் போய் எலியையோ, பூனையையோ பிடிக்கச்

சொல்கிறாளே.. தர்மபத்தினியா இவள்?' - இப்படிப்பட்ட நினைப்புகளுடன் காலிங்பெல்லை தயக்கத்துடன் அழுத்தினேன்.

தம்பதியர் இருவரும் வியர்க்க விறுவிறுக்க வந்து கதவைத் திறந்தனர். வரலட்சுமி தலைவிரி கோலமாக கண்களில் நீர் மல்க நின்றாள். கிட்டாவுக்கு மேல் மூச்சு வாங்கியது. அந்நிய ஸ்த்ரீ எதிரில் சட்டை போடாமல், வேட்டியை மடித்துக் கட்டியபடி நிற்கிறோமே என்கிற பிரக்ஞை இன்றி நின்றார்.

வரலட்சுமி, நான் கேட்பதற்கு முன்பே படபடத்தாள். ''பாருப்பா.. இந்தக் கட்டர்ல, நேத்து அந்தக் கடைக்காரன் என் கண் முன்னால அரை கிலோ பீன்ஸை ரெண்டே நிமிஷத்துல, பொடிப் பொடியா நறுக்கிக் காமிச்சான். அவன் அழுத்தின இடத்துல எல்லாம் இந்த கட்டர் 'பசக்'னு ஒட்டிட்டு எத்தனை சமர்த்தா சொன்னபடி எல்லாம் செஞ்சது தெரியுமா..''

''சரி, இப்ப என்ன.. நறுக்க முடியலையா?''

''நறுக்கிறது இருக்கட்டும்.. ஓரிடத்துல நிற்கவே மாட்டேங்குது. அங்கே, வழவழப்பா எந்த இடத்துல வச்சு அழுத்தினாலும் நகராம ஒட்டினது, இங்கே ஒட்டவும் ஒட்டாம ஓட்டம் பிடிக்கிறது. பாருங்க.. அதைப் பிடிக்கப் போய்.. பீன்ஸுக்குப் பதிலா கையெல்லாம் காயம்..''

- கிட்டா அழ மாட்டாத குறையாகச் சொன்னார். வரலட்சுமிக்கும் சிறிது நேரம் இந்த இயந்திரங்களிடமிருந்து எல்லாம் விடுபட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டியிருந்தது போல..

'தொப்'பென சோபாவில் அமர்ந்தாள்.

''பேசிட்டிருங்க.. நான் ரெண்டு பேருக்கும் ஆரஞ்சு ஜூஸ் கொண்டு வர்றேன்..''

கிட்டா, சமையலறையைப் பார்க்க மெள்ள நழுவினார்.

''ஆரஞ்ச் நறுக்கிப் பிழிய அந்த ஜூஸர் இருக்கில்ல.. ஆஸ்திரேலியா-வுல இருந்து உங்க தம்பி வாங்கி-னது.. அதுல பிழியுங்க. கை படாம, சுத்தமா இருக்கும்..''

''ஆகட்டும்..''

கிட்டாவின் குரலே, ஜூஸர் மாதிரி கரகரத்தது..

நான் அந்த சமயம் பார்த்து, வரலட்சுமியிடம் அவளுடைய இந்த கட்டர் பழக்கத்தை 'கட்' செய்யச் சொல்லி உபதேசித்துக் கொண்டிருந்தேன்..

''என்னத்துக்கு இத்தனை ஆயுதம் வரூ.. ஒரு குழம்பு, ஒரு பொரியல்.. உங்க வீட்டுக்காரருக்கு தேங்கா, வாழைக்கா ஆகாது. உனக்கு வறுத்தது, பொரிச்சது அலர்ஜி.. அப்படியிருக்கிறப்ப..''

அவள் சுலபத்தில் என் வாதத்தை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இடையில் கிட்டா, எங்களுக்கு அருமையான ஜூஸைக் கொண்டு வந்து தந்தார். வலது கையில் பீன்ஸ் கட்டரால் ஏற்பட்ட காயத்துக்கு, முண்டாசு மாதிரி ஒரு கட்டு.. ஆனால், முகம் தேஜஸாக ஒளிர்ந்தது.

''வரூ.. பீன்ஸ் நறுக்கியாச்சு..''

''எப்படி.. எப்படியெப்படி..? சத்தமே கேட்கலையே.. காட்டுங்க..''

''இது மனுஷ கட்டர் நறுக்கினது.. சத்தம் எப்படி வரும்? இதப் பாரு.. நீ கேட்ட மாதிரி பொடீஸா..''

- நான் அவளைக் கிண்டலடித்தேன்..

''உன் ஹஸ்பெண்டை விட ஒரு 'மல்டி கட்டர்' உண்டா வரலட்சுமி.! என்ன.. கிச்சன்ல 'ஷோ'வா அலமாரியில வச்சு அழகு பார்க்கத்தான் முடியாது..''

இதை நான் சொன்னபோது, கிட்டாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 15



நீங்கள் அமிர்தத்தையே கொண்டு போய்க் கொடுங்களேன்..

''என்னப்பா இது.. எந்த லாலா கடையில வாங்கினே.. இதையெல்லாம் விரலால கூடத் தொடறதில்ல நான்..''

இப்படிச் சொல்லுகிற 'நக்கீரி' நாராயணிக்கு பூலோகத்தில் தன்னை விடவும் அல்லது தனக்குத் தெரிந்த மனிதர்களை விடவும் வேறு யார் எதைச் செய்தாலும் குற்றமே!

மாநிறம்தான். கொஞ்சம் ஒடிசலான உடல்வாகு. முகத்தில் புருவங்கள் இரண்டும் நெற்றி வகிட்டைத் தொட்டுக் கொண்டிருக்கும். சதா புருவங்களை உயர்த்தி, உயர்த்தி.. அவை அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டன. அவள் சிரித்து நான் பார்த்ததில்லை. முகத்தை எப்போதுமே நாலு விரற்கடை அளவுக்குத் தூக்கி வைத்துக் கொண்டுதான் நடப்பாள்.

''கிருஷ்ண ஜெயந்திக்கு வெல்லச் சீடை வெடிக்காம வந்ததா?''

இவள் நக்கலாகக் கேட்டால், நான் மிக மிக ஜாக்கிரதையாகப் பதில் சொல்வேன்.

''நான் வெல்லச் சீடையே பண்ணல..''

''ஏன்?''

''ஆமா போ.. கழுத்து மட்டும் ஷுகரை வச்சிட்டு வெல்லச் சீடை என்ன வாழறது..''

''அங்கேதான் நீ தப்புப் பண்றே..''

இப்படி ஆரம்பித்து விட்டாள் அவள்.. 'என்ன தப்பு?' என்று நான் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. எப்படியும் அவள், நாலு பேர் முன் வைத்து நான் தலை குனியுமாறு ஏதாவது சொல்லத்தான் போகிறாள். இதில் கேள்வி என்ன வேண்டியிருக்கிறது?

''உனக்கு ஷுகர்னா கிருஷ்ணர் என்ன பண்ணு-வார்? அவரா உன்னை கண்டதைத் தின்னு, ஷுகரை வரவழைச்சுக்கச் சொன்னார்? சாஸ்திரத்துக்கு அளவா செஞ்சு, ஒண்ணே ஒண்ணை வாயில போட்டுட்டு, மிச்சத்தை ஃப்ரெண்ட்ஸ் அண்ட் ரிலேடிவ்ஸ்-ஸுக்குக் கொடுக்கணும். அந்த மனக் கட்டுப்பாடு இந்த வயசுக்கு வந்திருக்க வேண்டாமோ..''

''..........''

''ஆமா, ஆவின் வெண்ணெயே கிடைக்கலையே.. வெண்ணெய்க்கு என்ன பண்ணினே?'' இப்படி ஒருநாள் கேட்டாள் இன்னொரு தோழியிடம்!

''நான் ஊத்துக்குளி வெண்ணெயை வாங்கிட்டே-னாக்கும்..''

*அவள் விவரம் தெரியாமல் நாராயணியிடம் வாய் கொடுத்து மாட்டிக் கொண்டாள்.*

*‘‘உவ்வே.. ஊத்துக்குளின்னு வர்றதுல பல போலிகளும் கலந்திருக்கு. அதுல நிறைய மிருகக் கொழுப்பு சேர்த்து..’’*

*இப்படி ஆரம்பித்து, போலியான வெண்ணெயை எப்படி தயாரிக்கிறார்கள் என்று விஸ்தாரமாக இவள் விளக்கினதில், நாங்கள் நாலைந்து பேர்.. வயசான காலத்திலும் மசக்கை வந்த மாதிரி ஒரு வாரத்துக்கு சுழட்டிச் சுழட்டி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தோம். இதைத்தான் மட்டம் தட்டுவாள் என்றில்லை..*

*‘‘புடவை எங்க வாங்கின? இதெல்லாம் ஒரு ஜரிகையோட சேர்த்தியா? திருபுவனத்துல என் மாமனாரோட அக்காவோட நாத்தனார் வீட்டுக்காரர் தறி வச்சிருக்கார். தீபாவளிக்கு வேணும்னா பொங்கலுக்கே ஆர்டர் கொடுத்துடணும். ஜரிகை எல்லாம் பியூர் வெள்ளி. புடவையைக் கையில எடுத்துப் பார்த்தா ரொட்டி மாதிரி இருக்கும்..’’*

‘‘.........’’

*‘‘தீபாவளின்னதுமே ஞாபகம் வருது.. ஸ்வீட், காரம்லாம் ஆர்டர் கொடுத்துட்டியா..? வழக்கமா இருக்கிற ஸ்வீட் கடையில எல்லாம் வாங்கக் கூடாது. அவங்கள்லாம் மூணு நாலு மாசமா செய்ய ஆரம்பிச்சு, தீபாவளிக்கு வாங்குறப்ப பூஞ்சை வந்திருக்கும். நான் வழக்கமா திருவல்லிக்கேணியில, ஒரு சந்துல, ‘ஜிலேபி ஜானகேஸ்வரன்’னு ஒரு ஸ்வீட் மாஸ்டர்கிட்டத்தான் கொடுப்பேன். ஒவ்வொரு ஜிலேபியும் எப்படி இருக்கும்ங்கறே நீ.. ராக்கொடி கணக்கா..’’*

‘‘.........’’

*‘‘எவன்டீ உனக்கு ரவிக்கை தைக்கிறான்? கூப்பிடு சொல்றேன்.. கன்னம் கன்னமா இழுத்து நாலு அறை விடறேன். இப்படியா நாலு ஆள் பூந்துக்கற மாதிரி தைப்பான்? நீ குண்டுதான். துணி நனைச்சா சுருங்கும்தான். அதுக்காக இப்படியா.. நான் ஒரு ஆளைப் பிடிச்சு வச்சிருக்கேன். ஒரு ரவிக்கைக்கு இருபத்தஞ்சு ரூபாதான். அறுபது செண்டிமீட்டருக்கு மேல ஒரு மில்லிமீட்டர் தர மாட்டேன். அதுல எனக்கு ரவிக்கையும் தச்சு, மிச்சத் துணியில சின்னதா ஒரு கர்ச்சீஃப்பும் கொண்டு வந்து தந்துடுவான்னா பார்த்துக்க..’’*

*நாராயணியின் வாயில் யாருமே நல்ல பெயர் வாங்க முடியாது.*

*இவள் இப்படி பார்க்கிற இடத்தில் எல்லாம் ‘தானே அழகி.. தம்பிரான் பொண்டாட்டி’ என்று அலட்டிக் கொள்கிறாளே என்று, இவள் மூலமாகவே ஜிலேபி ஜானகேஸ்வரனிடம் ஐம்பது ஜிலேபி (என் பெண் அமெரிக்காவில் இருந்து வந்து விட்டுக் கிளம்பிய சமயம்) ஆர்டர் கொடுக்க, நாராயணியுடன் திருவல்லிக்கேணி ஸ்டார் டாக்கீஸின் பின்புறம் உள்ள சந்துக்கு நான் போன வைபவம் இருக்கிறதே..*

*ஒரு பக்கம் மழை உறுமிக் கொண்டு வருகிறது.. தெருவில் ஆங்காங்கே மலை மலையாகக் குப்பைகள்.. குப்பைகளுக்கிடையே இருந்து ‘வள்’ளென பாய்ந்து வரும் நாய்களிடம் ஆடுசதையைக் கொடுக்காமல் வந்தது கடவுள் அருள் என்றுதான் சொல்ல வேண்டும். இருட்டு தாழ்வாரம் நீ....ளமாகப் போக, உள்ளே ஜானகேஸ்வரனின் வீடு என்னவோ தீவிரவாதி களின் வெடிகுண்டு கிடங்கு போல..*

*‘‘நாராயணி.. இங்கேயிருந்தா என் பெண்ணுக்கு ஜிலேபி.. அவ, அமெரிக்காவுல போய் இதச் சாப்பிட்டுட்டு..’’*

*- நான் பயத்தில் மென்று முழுங்கினேன்.*

*அந்த ஜானகேஸ்வரர் முகத்தில் மரியாதைக்குக் கூட ஒரு சிரிப்பு இல்லை. பதிலுக்கு இவள்தான் அவரை விழுந்து சேவிக்காத குறை!*

*‘‘ஏய், என்னப்பா.. முகம் கொடுத்துப் பேசக்கூட மாட்டேங்கறார்?’’*

நான், ஆர்டரைக் கொடுத்து விட்டு, மனத்-தாங்கலுடன் இவளைக் கேட்டபடி பின் தொடர்ந்தேன்.

''என்ன பண்ணணும்ங்கிற? அவர் பார்க்கத்தான் இப்படி இருக்கார். இன்னிக்கு அவரோட ஜிலேபி, நம்ம இந்தியாவுக்கு விசிட் பண்ற வெளிநாட்டு வி.ஐ.பி-க்-களுக்கெல்லாம் டெல்லிக்குப் பறக்குது. நாம வெறும் அம்பது ஜிலேபிக்கு ஆர்டர் கொடுத்துட்டு சிலுப்பிக்கக் கூடாது. இதையும் ஒரு பொருட்டா மதிச்சு அவர் செஞ்சு தர்றேன்னு சொல்றார்னா இந்த நாராயணியோட தாத்தாவும் இவரோட தாத்தாவும் கொண்டப்பள்ளிங்கற ஊர்ல அஞ்சாங்கிளாஸ் வரைக்கும் சேர்ந்து படிச்ச தோஷத்துக் காகத்தான்.''

நான் வாயே திறவாமல், ஜிலேபி ஜானகேஸ்-வரனின் ஜிலேபி கனவுகளுடன் குப்பை-களையும் நாய்களையும் மிதிக்காமல் வீடு வந்து சேர்ந்தேன்.

பத்து நாட்களுக்குப் பிறகு, ஜிலேபிகளை வாங்கி வந்து எனது ஷுகர் பயமுறுத்தலை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, எப்படியும் ஒரு ஜிலேபியையாவது சாப்பிட்டுப் பார்த்து விட வேண்டும் என்கிற ஆவலுடன் போனால்..

அட்டைப் பெட்டி நிறைய செக்கச் செவேல் என்று கல் மாதிரி வஸ்துக்கள்.. நாராயணியானால் இந்தக் கண்றாவியை 'ஆஹா ஓஹோ' என்று புகழுகிறாள்.

''நானாயிருந்தா, உங்க கைக்கு ஒரு தங்கக் காப்பே செஞ்சு போட்டுடுவேன்'' என்கிறாள்..

ஜிலேபிகள்.. ஜிலேபிகளா அவை.. மட்டமான கடலை எண்ணெய் வாடை குடலைப் பிடுங்கியது.

அப்படியே தெரிந்த ஸ்வீட் கடையில் ஐம்பது ஜிலேபி.. பெரிய பெரிய சாமந்திப் பூ மாதிரி, ஜீரா சொட்டச் சொட்ட வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்.

''இந்த ஜிலேபி ஜானகேஸ்வரனோட ஜிலேபியை என்ன செய்தாய்?'' என்றுதானே கேட்கிறீர்கள்..

தெருவில் மலை மலையாகக்குவிந்திருந்த குப்பைகளில் இரண்டு அட்டை டப்பாக்கள் 'வெடி குண்டுகளோ' என்கிற சந்தேகத்தை எழுப்பியதால், வெடிகுண்டு நிபுணர்கள் வந்து பார்த்ததாக தினசரியில் செய்தி வந்ததே.. பார்த்திருப்பீர்களே..

இன்னும் விண்டு விளக்கிச் சொல்லத்தான் வேண்டுமா?

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 16

**வை**த்தீஸ்வரன் கோவில் வைத்தீஸ்-வரனைத் தெரியும்.. ஆனால், எங்கள் வைத்தீஸ்வரியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்-கிறீர்களா..

இவளுடைய ஒரிஜினல் பெயர் மகேஸ்வரி. வைத்தீஸ்வரி அல்லது மருந்தீஸ்வரி என்பது நாங்கள் சூட்டியிருக்கும் செல்லப் பெயர்..



தினசரிகளிலோ, டி.வி.யிலோ.. ஒரு புது வியாதி-யைப் பற்றி அறிவித்து விட்டால் போதும்! அம்மணி இங்கே கிலி பிடித்து உட்கார்ந்து விடுவாள். ஒரு உதாரணத்துக்குச் சொல்கிறேனே..

இவளுக்கு வயசு நாற்பத்தைந்து. 'மொழு மொழு'வென தர்பூசணி போல இருப்பாள். இவள் வீட்டு வேலைக்கார ஆயாவுக்கு சிக்குன் குனியா வந்து பத்து நாள் படுத்து விட்டாள். அவள் பேத்தி வந்து வேலைகளை கவனித்துக் கொண்டாலும் மருந்தீஸ்வரியால் சும்மா இருக்க முடியவில்லை.. அதுவரை நியூஸ் பேப்-பரிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்த சிக்குன்குனியாவின் அறிகுறிகளைக் கத்தரித்து ஒரு ஆல்பமே பண்ணி வைத்து விட்டாள்.

''எனக்குக் கூட முழங்கால், முழங்கை ஜாயின்ட்ஸ்ல பெயின் இருக்கு.. அது, சிக்கன் குனியாவோட சிம்ப்டம்தானே..''

''சேச்சே.. முந்தாநாள் உடுப்பி ஹோட்டல்ல மசால் தோசை.. எக்ஸ்ட்ரா உருளைக்கிழங்கு மசாலா வாங்கி சாப்பிட்டியே.. அதனால இருக்கும்!'' - இப்படி சொன்னதற்காக என்னிடம் அவள் மூன்று நாட்கள் பேசவில்லை.

ஒவ்வொருத்திக்கும் புடவைக் கடை, நகைக் கடை, ஷாப்பிங், சினிமா என்று ஆசை இருக்-கும். ஆனால் நம் மருந்தீஸ்வரி, பொழுது போக-வில்லை என்றால் யாராவது ஒரு டாக்டரிடம் போய் பிளட் பிரஷர் பார்த்துக் கொண்டோ, ஈ.ஸி.ஜி எடுத்துக் கொண்டோ இருப்பாள்.

அந்த டாக்டர், பணம் பண்ணுவதில் கெட்டிக்காரராக இருந்தால் இவளுக்கு ஏதோ வாயில் நுழையாத பெயர் கொண்ட வியாதி இருப்பதாகச் சொல்லி, இன்னும் ஸ்கேன், அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட்.. என்று இவள் கணவரின் பேங்க் பேலன்ஸுக்கு வேட்டு வைப்பார்.

அப்படி இல்லாமல், உள்ளதை உள்ளபடி சொல்லும் டாக்டர்-களாக இருந்தால்.. அவர்களை இவள் மதிக்கவே மாட்டாள்.

''பாருப்பா.. பத்து நாளா தலைவலி உயிர் போகுது.. காதுக்குள்ள வண்டு குடையற மாதிரி ஒரு சத்தம்.. கழுத்தைத் திருப்பவே முடியல. அப்பப்ப கண்ணுல பூச்சி பறக்குது.. இத்தனையும் பிரெய்ன் ட்யூமரோட சிம்ப்டம்ஸ்னு படிச்சிருக்கேன். அந்த டாக்டர் என்னடான்னா, 'தலையில தூக்கி கொண்டை போடறதை மாத்துங்க.. தலை வலிக்காது! எப்பவும் காதுல செல்போனை வச்சி பேசிட்டே இருக்காதீங்க.. காதுக்குள்ள சத்தம் வராது! டி.வி முன்னாடி ஆடாம அசையாம உட்கார்ந்திருக்கறதாலதான் கழுத்-தைத் திருப்ப முடியல - கண்ணுல பூச்சி பறக்குது'ன்னு சொல்லிட்டு, ஏதோ பெரிய ஜோக் சொன்ன மாதிரி சிரிக்கிறார். இவரெல்லாம் ஒரு டாக்டரா..''

கண்டபடி திட்டித் தீர்த்த பிறகுதான் நிம்மதியாக மூச்சு விடுவாள். அது மட்டுமில்லை.. தனக்கு இன்ன வியாதியாக இருக்குமோ என்று தானாகவே ஊகம் பண்ணிக் கொண்டு, டாக்டரிடம் போய்ச் சொல்வாள் பாருங்கள்..

''டாக்டர்.. வயிறு 'டொம்'னு இருக்கு.. 'லிவர்'க்கு ரெண்டு இன்ச் மேல வலிக்குது.. மத்தவங்களா இருந்தா இந்த வலியை ஹார்ட் பிராப்ளம்னுதான் நினைப்பாங்க. ஆனா, நான் அப்படி நினைக்கலை. பித்தப்பையில கல் இருக்குமோனு சந்தேகப்படறேன். கால்ஷியம் மாத்திரைகள் அதிகமா சாப்பிட்டதால இருக்குமோ.. சுண்ணாம்புச் சத்துதானே கால்பிளாடர்ல ஸ்டோன்ஸ் ஆகுது.. ஒருவேளை,

கால்பிளாடரையே எடுத்துட வேண்டி வருமோ.. இப்பத்தான் கீ-ஹோல் ஆபரேஷன் எல்லாம் சர்வ சகஜமாயிடுச்சே..''

இவள் சொல்லச் சொல்ல, டாக்டர் வாயடைத்துப் போவார். ஒரேயொரு டாக்டர் மட்டும் கிண்டலாக ''சுண்ணாம்பைக் கரைக்க, வெறும் வெத்தலையும் பாக்கையும் மட்டும் மென்னு தின்னுங்க.. ஏம்மா இப்படி அரைகுறையா எதையோ தெரிஞ்சிட்டு வந்து, எங்களைப் படுத்தறீங்க..'' என்று கேட்டு விட்டார். அதற்குப் பின் இவள் கொஞ்ச நாள் அலோபதியைத் தவிர்த்து விட்டு, ஹோமியோபதி, யுனானி, சித்தவைத்தியம், ஆயுர் வேதம், ரெய்க்கி என்று அலைந்தாள்.

இப்போழுது சமீபகாலமாக நிஜமாகவே சீக்குக் கோழி போல வீட்டில் முடங்கிக் கிடக்கிறாள். காரணம்..

யுனானியோ, ஆயுர்வேதமோ.. ஏதோ ஒரு டாக்டரிடம் போய் இவள் தன் சுகவீனங்களைப் பட்டியலிட, அவர் மிகுந்த உற்சாகத்துடன்..

''இப்படி இருந்தா புளிச்ச ஏப்பம் வருமே..''

''ஆமா டாக்டர்..''

''அப்பப்போ வயித்தைக் கலக்கி பேதியாகறது உண்டா..''

''எப்பவாவது..''

''எங்கே.. நாக்கை நீட்டுங்க.. கண்ணை விரிங்க.. கையைக் காட்டுங்க.. அடடா, இதுக்குப் பேரு சிலோத்-தும‌ம். அதுலேயும் இதைப் 'பிடாரி சிலோத்துமம்'னு சொல்லுவாங்க.. வியாதி தீவிரமாகுறப்ப மூளை பிரண்ட மாதிரி பேசுவாங்க..''

அவர் சொல்லச் சொல்ல இவள் அவர் பக்கத்திலேயே ஆடு மாதிரி உட்கார்ந்திருக்கிறாள். அடுத்த சில நாட்களிலேயே அந்த டாக்டர், எல்லார் வீட்டிலும் குத்துமதிப்பாக தெரிந்து தொலைக்கிற ஒரு சேனலில் தனது மருத்துவப் பகுதியில் இந்தக் காட்சியை அப்படியே ஒளிபரப்பி விட்டார்.

ஆள் ஆளுக்கு, தலைக்குத் தலை, இவளுக்கு போன் செய்து விசாரிக்-கிறார்களாம்.. இவள் கணவரிடம், 'எப்படி ஸார் இப்படிப்பட்ட ஒய்ஃபோட குடித்தனம் பண்றீங்க..' என்று வேறு அனுதாபப்படுகிறார்களாம்.

''அந்த டாக்டரோட ரூம், மத்த டாக்டர்களோடதை விட பிரகாசமா இருந்தது.. சத்தமா வேற பேசினார்..அவரே பேசிட்டிருந்தார். இப்பத்தான் புரியுது.. எனக்குத் தெரியாமயே.. என்னை விடியோவுல படம் எடுத்திருக்காங்க.. விக்..விக்..'' - அவள் அழ, சிநேகிதிகள் பலரும் - இது உண்மையான அழுகையா? இல்லை, பிடாரி சிலோத்துமத்தின் உச்சகட்ட மூளைப் புரளலா என இன்னமும் விவாதித்துக் கொண்டிருக்-கிறார்கள்.

# ஸ்த்ரீ ரத்தினங்கள்!

**எ**ழுத்தாளர்கள் - ஏன், நான் கூட இப்படி எழுதுவேன்..



‘அவள், கவலை தோய்ந்த முகத்-துடன் காணப்பட்டாள்..’

என்னவோ, கவலையை வெந்நீர் தவலையில் நிரப்பி வைத்து, அதில் முகத்தை தோய்த்துத் தோய்த்து எடுத்ததாக யாரும் அர்த்தம் பண்ணிக் கொள்ள மாட்டார்-கள் என்றே நினைக்கிறேன்.

இது கொஞ்சம் உச்சபட்ச வர்ணனை. அவ்வளவே! ஆனால், எனக்கு மிகவும் நெருங்கிய நட்பு வட்டத்தில் ஒருத்தி இருக்-கிறாள்.. பெயர் விருத்தாம்பா.. நாங்கள் அவளை.. (கரெக்ட்.. கண்டுபிடித்து விட்டீர்களே) ‘வருத்-தாம்பாள்’ என்றே கூப்பிடுவோம்.

முன்பெல்லாம் சினிமாக்களில் அழுவதற்காகவே சில கதாநாயகிகளை நடிக்க வைப்பார்கள். அவர்கள், மருந்-துக்குக்-கூட சிரிக்க மாட்டார்கள். ஸ்ரீரஞ்சனி என்று ஒரு நடிகை.. கலைஞரின் ‘பரா-சக்தி’யில் கூட நடித்தார்.. நம்பர் 1 அழுகை ராணி இவர்-தான். அடுத்தது நம்பர் 2 நமது விருத்தாம்பாதான்!

‘‘சொல்ல மாட்டியா பின்னே.. என்னை மாதிரி பொண்ணா பொறந்துட்டு ஒருத்தி சிரிக்க முடியுமா.. கவலைப்-பட்டு அழுறதுக்-குன்னேதானே பகவான் என்னைப் படைச்சிருக்கார்.’’

விருத்தா, இதைச் சொல்வதற்குள் அவளது இரு விழிகளிலும் மெட்ரோ வாட்டர் லாரி வந்து அணி வகுத்து விடும்.

பேச்சுக்குப் பேச்சு, ‘பொண்ணா பொறந்து நான் படற கஷ்டம் போதாதா’ எனச் சொல்லிக் கொண்டால்தான் வேலையே ஓடும் இவளுக்கு.

இத்தனைக்கும் பணக் கஷ்டம் பிறந்த வீட்டிலும் இல்லை.. புகுந்த வீட்டிலும் இல்லை. அப்பா இவளை வெள்ளித் தட்டில் வைத்து சீராட்டினார் என்றால், கணவர் இவளை தங்கத் தாம்பாளத்தில் வைத்து, தலை மீது தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிறார். ஆனாலும், மூஞ்சூறு மாதிரிதான் முகத்தை வைத்திருப்பாள்.

காபியைக் கலந்து, சமையல்கார அம்மாள் இவள் கையில் கொண்டு வந்து கொடுப்பாள். ஒரு பக்கம் எருமை மாடு, பருத்திக் கொட்டை - புண்ணாக்கு அரைத்த கலவையை உறிஞ்சுவது போல காபியை உறிஞ்சிக் கொண்டே இவள் கேட்பாள்..

‘‘மாமீ, ராத்திரி படுக்கப் போனப்புறம் நினைச்-சிட்டேன்.. நேத்தே காபி பவுடர் தீர்ந்துடுச்சே.. ஃபில்டர் காபி இல்லாம, பவுடர் காபி போட்டுடப் போறீங்-களோனு ஒரே கவலை.. எழுந்து வந்து கேட்கலா-மோன்னு கூட நினைச்சேன். நீங்க ஆனந்தமா குறட்டை விட்டுத் தூங்கிட்டிருந்தீங்க.. எனக்குத்தான் கவலை.. உங்களுக்கு என்ன..’’

‘‘நேத்து சாயந்திரமே உங்க வீட்டுக்காரர் காபி பொடியை வாங்கிட்டு வந்துட்டாரே.. ‘விருத்தா இதுக்கோசரம் கவலைப்படுவா.. ராத்திரி அவ படுத்துக்கப் போறதுக்-குள்ள சொல்லிடுங்க’ன்னார். நான்தான் மறந்துட்டேன்.’’

‘‘சொன்னாரா.. என் கவலை அவருக்குத்தான் தெரியும்..’’ கணவரை சிலாகித்துக் கொள்ளும்போது கூட முகத்தில் மலர்ச்சி இருக்காது.. உடனே, கண்களில் மயிலாப்பூர் குள-மும், பார்த்தசாரதி கோயில் குளமும் வந்து தளும்பும்.

‘‘உம்.. எம் மேல உசிரையே வச்சிருக்கார்.. என் புடவை முந்தானையை பிடிச்சிட்டே அலையுறார்.. போன வருஷம் சாம்பன் பெண்டாட்டி திடுதிப்புனு மண்டையப் போட்டா மாதிரி, எனக்கு ஏதாவது ஆயிடுச்-சுன்னா..’’

கவலையின் உச்சத்தில் மூஞ்சூறு முகம் இன்னும் நீண்டு விடும்.

விருத்தாம்பாளோடு பல வருடங்களாகக் குப்பை கொட்டிய சமையற்கார அம்மாளுக்குத் தெரியும்.. எதைச் சொன்னால், இந்த சமயத்தில் அவள் சமாதானமாவாள் என்பது..

''போதுமே. காலங்காத்தால இது என்ன பேச்சு? உங்களுக்கென்ன, ராஜாத்தி மாதிரி நல்லா இருப்பீங்க. சாம்பன் பெண்டாட்டிக்கு கழுத்து மட்டும் சர்க்கரை.. ஒரு இடத்துல உக்காந்தாலே ஆயிரம் கட்டெறும்பு மொய்க்கும். நீங்க அப்படியா..''

''இருந்தாலும், கடவுள் யாரை எப்ப கூப்பிடுவார்னு தெரியலையே மாமீ..''

பேச்சு இப்படியே போய், விருத்தாம்பாளின் பாட்டி எண்பது வயசில், யார் வீட்டு சீமந்த முறுக்கையோ சாப்பிட்டுக் கொண்டே பிராணனை விட்டதையும், ஒன்று விட்ட சித்தப்பா எண்ணெய் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும்போதே 'பொக்'கெனப் போனதையும், வேறு வழியில்லாமல் சீயக்காய் தேய்த்துக் குளிப்பாட்டி கூடத்தில் கொண்டு வந்து போட்டதையும், கோமாவில் கிடந்த மாமனார் ஒரேயொரு தடவை கண்ணை விழித்துப் பார்த்தபோது, பெண்டாட்டி, பிள்ளைகள் அத்தனை பேரும் கட்டிலைச் சுற்றி நின்று, தன்னைத்தான் கூப்பிடுவார் எனக் காத்திருக்க.. அவர், 'நர்ஸ் ரத்னா எங்கே?' எனக் கேட்டு விட்டு பரலோகம் போனதையும் ஒரு பாட்டம் பாடி ஓய்வாள்.

அப்புறம், கணவர் மார்க்கண்டேயனுடன் ஒரு மணி நேரம்..

''நேத்து, மவுண்ட் ரோடுல எல்லாம் கலாட்டா, கல் வீச்சாமே..''

''.........''

''நீங்க என்கிட்ட சொல்லலையின்னாலும், டிவி. நியூஸ்ல இதைத் தவிர வேற என்னத்தைக் காட்டினாங்க.. நீங்க மவுண்ட் ரோடு பக்கமே போகாதீங்க..''

''அது எப்படி விருத்தா.. ஆபீஸ் மவுண்ட் ரோடுலதானே இருக்கு. இப்படியெல்லாம் கவலைப்பட்டா, நான் வீட்டோட உக்கார வேண்டியதுதான்..''

''ரொம்ப நல்லதாப் போச்சு. என்னைக் கேட்டா, அந்த மோட்டார் சைக்கிளை வீட்டுல வச்சிட்டு, பஸ்லயே போகலாம்..''

''போனா? பஸ் குடை சாயாதா? போகணும்னு இருந்தா.. இரு.. இரு.. இப்ப எதுக்காக அழறே?''

''பின்னே என்ன.. நானே ஒவ்வொரு நாளும் கதிகலங்கி, கவலைப்பட்டுக்கிட்டுக் கிடக்கேன். இப்படித்தான் பேசுறதா..''

''சரி.. பேசலை. நீயும் அப்படிப் பேசாதே..''

''ஒண்ணு செய்யுங்களேன். விடியக்-காலையிலயே எழுப்பி விட்டுடுறேன்.. குளிச்-சிட்டு டிபன், சாப்பாடு எல்லாத்தையும் கையில எடுத்துட்டு, பொடி நடையா பிளாட் ஃபாரத்தோடயே நடந்து போயிடுங்களேன்..''

இவள் இப்படி பேசினால், நமக்கு சிரிப்பு வருமா, வராதா..

நேற்று இவள் கவலை என்ன தெரியுமா? மார்க்கண்டேயன் வீட்டில் உட்கார்ந்து கல் தோசையை வெட்டிக் கொண்டிருந்தார். சமையல் மாமி, கொஞ்சம் விச்ராந்தியாய் தோசை வார்த்துக் கொண்டிருந்தார். டிவி-யில் வடிவேலுவின் நகைச்சுவை..

மார்கண்டேயன் சிரிக்கிறார், சிரிக்கிறார், அப்படி சிரிக்கிறார்..

''ரொம்ப சிரிக்காதீங்க. நானே, 'ஏதுடா கவலை எதுவும் இல்லாம உக்காந்திருக்-கோமே. இது என்ன ஆபத்துக்கு அறிகுறியோனு தெரியலையே'னு கவலைப்பட்டுட்டிருக்கேன். நீங்க வேற..''

வருத்தாம்பா - ஸாரி.. விருத்தாம்பாளோடு பேசி விட்டு வந்து, கண்ணாடியில் முகத்தைப் பாருங்களேன்.. உங்கள் முகத்திலும் எங்கேயோ மூஞ்சூறு சாயல் அடிக்கும்!

# ஸ்த்ரீ ரத்தினங்கள்!



உங்களுக்கு திருவாளர் அப்பாசாமியைத் தெரியுமா? சென்னை மாநகரத்தில் மிக முக்கியமான நிறுவனத்தில் மாதம் ஒரு லட்சம் பக்கம் சம்பளம் வாங்குகிற படா ஆசாமி. தெரியாதா.. போகிறது விடுங்கள். அவர் மனைவி மிஸஸ் அப்பாசாமி..?

நாங்கள் எல்லோரும் அவளை 'மிஸஸ் அல்ப்ஸ்' என்றுதான் கூப்பிடுவோம் (அவள் எதிரில் 'மிஸஸ் அப்ஸ்' என்று செல்லமாகக் கூப்பிடுவோம்). அதாகப்பட்டது, மிஸஸ் அப்பாசாமி சுருங்கி அப்ஸ் ஆகி, பின் அவளது குண விசேஷத்தைக் கருத்தில் கொண்டு அல்ப்ஸ் என்றானாள்.

சுமார் நூறு கிலோ இருப்பாள். எல்லாம் ஓசி சாப்பாட்டில் வளர்ந்த உடம்பு.. என் சிநேகிதி லலிதா ராமானுஜத்தைக் கேட்டால், பிழியப் பிழிய அழுது கொண்டே சொல்வாள்..

''அடியே.. இவ வரப் போறானு தெரியாதுடீ.. மதியானம் சாப்பாட்டுக்காக பருப்புத் துவையலும் மிளகு ரசமும் வச்சிருந்தேன்.. தபதபனு வந்தா. 'ஐயோ, பருப்புத் துவையலா.. எனக்கு உசிராச்சே'னு நெஞ்சுல கைய வச்சிட்டு கொஞ்ச நேரம் நின்னா.. கடைசியில தானே ரெண்டு டப்பாவை எடுத்து, துவையலையும் ரசத்தையும் போட்டு எடுத்துட்டுப் போயிட்டா. போற போக்குல, என் வீட்டுக் காரர்கிட்ட, 'லல்லுவுக்கு நான்னா உசிரு.. சின்ன வயசுலயிருந்து ரெண்டு பேரும் ஒரே தட்டுலதான் சாப்பிடுவோம்'னு பில்டப் வேற..''

''ரெண்டு பேரும் ஒரே தட்டுல சாப் பிட்டவங்கதானே.. அதான் சொல்றா..''

''அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கறே? ரெண்டு பேரும் ஒரு தட்டுல சாதம் போட்டுக் கிட்ட-தெல்லாம் உண்மைதான். ஆனா, சாப்பிட்டது அவ மட்டும்-தான். சரியான அல்பம்.. பிசுநாரி.. கஞ்சூஸ்..'' - லல்லு, அகராதியில் உள்ள வசை மொழிகளை எல்லாம் தேடியெடுத்துத் திட்டுவாள்.

அத்தனைக்கும் அர்த்தம் இல்லாமல் இல்லை. அவள் ஒரு வீட்டுக்குள் நுழைந்து எதையாவது பார்த்து, பூரி போல முகம் உப்ப, 'ஐயோ' என்று நெஞ்சில் கை வைத்துக் கொண்டாள் என்றால்.. அவ்வளவுதான், அந்தப் பொருள் நம்முடையது இல்லை என அடித்துச் சொல்லலாம்.

பல்லாங்குழி, பாக்கு வெட்டி, காது குடையும் கம்பி, மெழுகுவர்த்தி, வத்திப் பெட்டி.. இப்படி இன்னதுதான் என்றில்லை..

அன்று அவள் வீட்டில் உதவிக்கு இருக்கும் அம்முலு வரவில்லை என்று அவளைத் தேடி அவள் வீட்டுக்குப் போயிருக்கிறாள். கேவலம்.. அவள் வீட்டில் இருந்த தலைக்குப் போடுகிற ரப்பர் பேண்டை (அதுவும் அவள் உபயோகித்து கழற்றி வைத்தது) லவட்டிக் கொண்டு வந்து விட்டாள்.

இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும் என்கிறீர்களா? எங்கள் வீட்டு வேலைக்காரப் பெண்மணி அம்முலுவுக்குப் பக்கத்து வீட்டுக்காரி.

*இன்னொரு நாள்.. ஜம்பு மாமி வீட்டுக்குப் போயிருக்கிறாள். சோஃபாவில் உட்கார்ந்து ஒரு டஜன் முறுக்கைத் தின்று, அரை லிட்டர் காபியைக் குடித்து-விட்டு, ஃப்பிரிட்ஜுக்கு அடியில் காக்கா பார்வை பார்த்தாள்.*

*‘‘ஜம்பு மாமி.. ஃப்பிரிட்ஜுக்கு அடியில என்னது, உருண்டையா..?’’*

*‘‘அதுவா..? கத்தரிக்கா. நாலஞ்சு நாளுக்கு முன்னாடி கை நழுவி விழுந்துடுச்சு’’*

*‘‘ஐயோ!!’’*

*அல்ப்ஸ் நெஞ்சில் கை வைத்தபடி விசுக்கென எழுந்தாள். ஃப்பிரிட்ஜ் எதிரில் போய் அப்படியே குப்புற விழுந்து ஒரு நமஸ்காரத்தைப் பண்ணினாள்.*

*‘‘அத்துனூண்டு இடத்துல, யானைக்குட்டி சேத்துல நீச்சலடிக்கிற மாதிரி விழுந்துட்டாப்பா.. எப்படியோ முக்கி சக்கி அந்த கத்திரிக்காயை எடுத்துட்டா.. அது வாடி, வதங்கி அடையாளமே தெரியாம போயிருந்துச்சி. அதைப் போய், ‘வீட்டுக்கு எடுத்துட்டுப் போறேன், கூட ஒரு வெங்காயமும் கொடுங்க. ஒரு நாள் பொரியலுக்கு ஆச்சு’ங்குறா. இவளை என்ன செய்யலாம் சொல்லு..’’*

*ஜம்பு மாமி, அசந்துபோய் கன்னத்தில் கை வைத்து நின்று விட்டாள். ஃப்பிரிட்ஜை விழுந்து வணங்கிய அல்ப்ஸ்ஸை மறுபடியும் தூக்கி நிறுத்த ஜம்பு மாமி ஒருத்தியால் முடியாமல் போய், மாமியின் கணவரையும் துணைக்கு அழைத்ததில் அந்தக் கிழவருக்கு தோள்பட்டையில் சுளுக்காம்.*

*சமீபத்தில் நடந்த ஒரு சிநேகிதி வீட்டுக் கல்யாணத்தில், அல்ப்ஸ் மாப்பிள்ளை அழைப்பன்று காலையிலேயே போய் விட்டு, கல்யாணத்துக்கு மறுநாள் கட்டுசாதக் கூடை வைத்த பிறகுதான் குடும்பத்தோடு திரும்பியதாகக் கேள்வி.*

*வரும்போதே மூன்று நாளைய ஸ்வீட், சீர் பட்சணங்-கள், மினரல் வாட்டர் பாட்டில்கள், பீடாக்கள், பேப்பர் நாப்கின்.. இவை தவிர ஒரு கூடை கட்டுசாதம் இத்தனையையும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள் படுபாவி.*

*‘‘எதைப் பார்த்தாலும் ஐயோ ஐயோனு நெஞ்சுல கைய வைக்கறா.. அதான்.. கல்யாண வீட்டுல வச்சு அவ ‘ஐயோ’னு சொல்ல ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி நானே தூக்கிக் கொடுத்துட்டேன்..’’ - மணப்பெண்ணின் தாயார் சொன்ன கண்ணீர் ஸ்டேட்மென்ட் இது.*

*ஆனால், ஒரு வாரமாக அல்ப்ஸ்-க்கும் பெரிய பிரச்னை. அவளுடைய ஸ்பெஷல் சிநேகிதி ஒருத்தி, மத்திய அரசின் மிகப் பெரிய அதிகாரியின் மனைவி.*

*அவளைப் பார்க்கப் போகிற சாக்கில் ஓசியில் பல விஷயங்களை சாதித்துக் கொள்வது அல்ப்ஸ்-க்கு வழக்கம். இந்தத் தடவை போனவள் அது மாதிரியே எதையாவது சாதித்துக் கொண்டிருக்கலாம். போயும் போயும் அந்த வீட்டில் இருந்த குப்பைக் கூடையைப் பார்த்து ‘‘ஐயோ’’ என்றாள்.*

*‘‘ச்சீ.. இது டெல்லியில சிரிப்பா சிரிக்கும். அடுத்த தடவை அவர் டெல்லி போறப்ப ஒண்ணுக்கு ரெண்டா..’’*

*சிநேகிதி சொல்லச் சொல்லக் கேட்காமல் குப்பைக் கூடையைத் தூக்கி வந்து விட்டாள் இவள்.*

*கடைசியில் என்னவென்றால், சிநேகிதி வீட்டுக்காரர் சி.பி.ஐ. ரெய்டுக்கு பயந்து, குப்பைக் கூடைக்குள் ஏதோ முக்கியமான சமாசாரத்தை வைத்திருந்தாராம்.*

*‘‘ஐயோ, ஐயையோ.. எனக்குத் தெரியாது. குப்பையை வாசல்லயே கொட்டிட்டு வந்துட்டேன்..’’ என தலை தலையாய் அடித்துக் கொள்கிறாள் அல்ப்ஸ்.*

சிநேகிதியோ, அவள் கணவரோ நம்ப மறுக்கிறார்கள். பத்து அடியாட்களு-டன் வீட்டில் இவளைச் சுற்றி உட்கார்ந் திருக்கிறார்கள்.

''குப்பையை வாசல்லயே கொட்டினாளாம். யார்கிட்ட காது குத்தறா..'' - அல்ப்ஸ்ஸின் சிநேகிதி உறுமுகிறாள்.

அல்ப்ஸ்-க்கு இது தேவைதான்.. விடுங்கள்!

# ஸ்த்ரீ ரத்தினங்கள்! - 19



முந்தாநாள் ஒரு விஷயமாக பெட்டூவைப் பார்க்கப் போயிருந்.. ஸாரி, பட்டூவைப் பார்க்கப் போயிருந் தேன். அமெரிக்காவில் இருக்கும் அவள் பிள்ளை, அவளது செல்லப் பிராணிகளுக் காக ஒரு பெரிய பிளாஸ்டிக் பை நிறைய அந்த ஊர் பிராணிகளின் விருப்ப உணவை வாங்கி, என் பெண் மூலமாக அனுப்பி இருந்தான்.

சாதாரணமாக நாங்கள் யாருமே பட்டுவின் வீட்டுக்குள் கால் வைக்க அஞ்சுவோம். எப்படியும் மூக்கை மறைத்து ஸ்கார்ஃப் போன்ற ஒன்றைக் கட்டிக் கொள்வோம். அதைப் பார்த்து வேறு அவளது செல்லங்கள் 'வள்ள்ள்..', 'உர்ர்ர்..', 'ம்யாவ்வ்வ்' என அலறும்.

''ஏய், குழந்தைகளை பயமுறுத்தாதே.. அந்த முகமூடியை கழட்டி எறிஞ்சிட்டு வா!'' - பட்டு தான்! நாங்கள் இவளை 'பெட்டூ' எனச் செல்லமாக அழைப்பதன் காரணம் புரிந்ததா?

வீட்டில் மொத்தம் ஐந்து நாய்கள்.. பதினாறு பூனைகள் வளர்க்கிறாள். யாரும் இவற்றை நாய், பூனை என்று சொல்லி விடவே கூடாது.. கடித்துப் பிறாண்டி விடுவாள்.

'அவளுக்கு இந்த வாயில்லாப் பிராணிகள் மீது அத்தனை பிரியம் என்றால் உனக்கென்ன ஆச்சு..' என்கிறீர்களா? கண்டிப்பாக. எனக்கென்ன..! ஆனால், இவள் வீட்டுக்குப் போய் வந்தால் அன்று முழுக்க என் வீட்டு கதவின் சீல்கள் கூட 'மியாவ்' என்கிற மாதிரி.. அலமாரி கதவு 'உர்ர்ர்'ரென உறுமுகிற மாதிரி பீதியில் பிரமை பிடித்து நின்றிருக்கிறேன்.

அதெல்லாம் அவளுக்குத் தெரியுமா?

'நீ பேசாமல் உட்காரு' என்பாள். எங்கே உட்காருவதாம்? சோபா நிறைய ஒன்று படுத்திருக்கும். இன்னொன்று சோபா குஷனைக் கடித்துக் குதறிக் கொண்டிருக்கும். ஒன்று நம்மையே முறைக்கும்.

''என்னடா வெங்கு.. அது நம்ம ஃப்ரெண்டுடா.. பாவமில்லியா.. ஒரு அரை இன்ச் நகர்ந்துக்கோடா..''

அவள் கெஞ்சக் கெஞ்ச அது என்னையும் அவளையும் மாறி மாறிப் பார்க்குமே தவிர, அரை இன்ச் என்ன.. காலே அரைக்கால் இன்ச் கூட நகராது.

''அவனுக்குப் பாரு.. தன் இடத்துல யாரும் உட்கார்ந்துடக் கூடாது. அத்தனை பொஸஸிவ். என் பேத்தி என் மடியில உட்கார்ந்தாத்தான் ஓடி வந்து மடியில இவனும் விழுவான்..''

''இதுக்காக என்னையும் உன் மடியில விழச் சொல்றியா?''

''இல்லேப்பா.. அதோ, சித்ராவைத் தூக்கி மடியில வச்சுக்கிட்டு உக்காரு. அவ சாது. இது மாசம் வேற!''

சித்ரா என்பது ஒரு ஸயாமி பூனை. உடம்பு முழுக்க புசு புசு.. எங்கே பிடிப்பது..? பிள்ளைத் தாய்ச்சி வேறு.. பேசாமல் நின்று கொண்டே நான் வந்த விஷயத்தைக் கொட்டி விட்டு கிளம்பத் தயாரா னேன்.

''கொஞ்சம் இரேன். இப்பத்தான் ஒரு ஈடு முள்ளுத் தேன்குழல் பிழிஞ்சேன்.. சாப்பிட்டுப் போ.''

''முள்ளுத் தேங்குழலா.. என்ன விசேஷம்?''

''விசாலத்துக்கு மசக்கைப்பா.. மூணு நாளா, கண்ணைத் திறக்கலே. அவளோட அயிட்டம் எதுவுமே பிடிக்கலே. நான் எப்ப ஸ்நாக்ஸ் பண்ணினாலும் காலைச் சுத்திச் சுத்தி வருவா. அதான்.. இதுலயாவது கொஞ்சம் சாப்பிடுவாளானு பார்க்கறேன்.. எங்கே விசாலம்.. அம்மா விச்சு!''

விசாலம் என்று அழைக்கப்பட்ட அந்த அல்சேஷன் வகை, இவளது படுக்கையில் ஏ.சி. சில்லிப்பில் சொஸ்தமாக படுத்துக் கிடந்தது. பெட்டூவின் குரலுக்கு அரைக் கண்ணைத் திறந்து பார்த்து விட்டு, மறுபடியும் தன் மசக்கை மயக்கத்தைத் தொடர்ந்தது. அது எப்படித்தான் இத்தனை ஜீவன்களை அத்துணூண்டு வீட்டில் வளர்க்கிறாளோ..

இரண்டாவது மாடியில் இவள் வீட்டுக்குள் நுழையும்போதே ஒரு மாதிரி 'கப்' அடிக்கும். அதற்குத்தான் ஸ்கார்ஃப். ஆனால், பெட்டூவோ இது பற்றி எல்லாம் கவலையே படமாட்டாள். வீட்டில் எந்நேரமும் அதட்டல்தான்..

''ஏங்க, நேத்திக்கு அந்த மட்டனை எந்தக் கடையில வாங்கினீங்க.. லிஸி மோந்து கூடப் பார்க்கலை.''

''காலையில சுப்பிரமணியை வாக் கூட்டிட்டே போகலையா நீங்க..? அதான் முனகிட்டே இருக்கான்..''

பெட்டூவின் கணவர் மிருகேஷ்வர், சீச்சீ.. முருகேஷ்வர் கூட வாயில்லாத ஜீவன்தான். கிட்டத்தட்ட ஞானி மாதிரி. பால்கனியில் அடுப்பு வைத்து, அவள் வளர்ப்புகளுக்காக கறியும் மீனும் சமைப்பதுதான் அவரது வேலை..

பல சமயங்களில் பெட்டூவின் செல்லங்கள், அவரைக் கட்டிலில் படுக்க விடாமல் விரட்டுமாதலால், பாவம் அறை ஓரத்தில் பாய் போட்டுப் படுப்பார். அதிலேயும் புரள விடாமல் பூனைகள்..

காலையில் ஐந்தாறு நாய்களை சங்கிலி போட்டு வாக் அழைத்துப் போகும்போது முருகேஷ்வரைப் பார்க்க வேண்டும்.. அவை இழுக்கிற இழுப்பில் விழுந்து எழுந்து சொல்லொண்ணா கொடுமை அது.

சாயந்திர நேரங்களில் பக்கத்தில் இருக்கும் ஒரு 'பெட் கிளினிக்'கில் உட்கார்ந்திருப்பார்.. கையில் பூனைக் குட்டியும் இடுப்பில் நாயுமாக.

பெட்டூ, மேனகா காந்தி மாதிரி ஜீவகாருண்ய திலகம்தான். இல்லையென்று சொல்லவே இல்லை, ஆனால், அதற்காக மனிதர்களை கவனிக்காமல் விட்டுவிடக் கூடாதல்லவா?

அப்படி என்ன செய்தாள் என்று கேட்கிறீர்களா? நேற்று என் சிநேகிதி லதாதான் சொன்னாள்.

அது என்ன அவஸ்தையோ..

நேற்று பெட்டூ எல்லா செல்லங்களையும் வீட்டில் விட்டு விட்டு, காவலுக்குக் கணவரையும் வைத்து விட்டு, வள்.. சாரி, 'வேல்' படத்துக்குப் போயிருக்கிறாள்..

'திரும்பி வந்து சப்பாத்தி பண்றேன் உங்களுக்கு.. நீங்க 'குழந்தைகளுக்கு' வேண்டியதைக் கொடுத்துடுங்க!' என்றிருக்கிறாள்.

படம் முடிந்து இவள் வர லேட்.

புருஷனும் மனுஷன்தானே.. பசி தாங்கவில்லை. அப்படியே நாய் பிஸ்கெட் (அதுதான், இவள் பிள்ளை அமெரிக்காவிலிருந்து வாங்கி அனுப்பினது) டின்னை எடுத்து வைத்துக் கொண்டு காலி பண்ணத் தொடங்க..

பெட்டூவும் லதாவும் ஒன்றாகத்தான் வீடு திரும்பினார்களாம். நடுக்கூடத்தில் வெங்கிட்டு, சுந்தரி, விசாலம், கப்பு, லிஸி.. என்று அத்தனையும் சுற்றி நின்று இவர் வாயையே பார்க்க..

''ஐய்யோ..என்ன பண்ணிட்டிருக்கீங்க..''

பெட்டூ கத்த, ஒருகணம் நிலைகுலைந்த முருகேஷ்வர், தன்னை மறந்த நிலையில் மனைவியைப் பார்த்து 'உர்ர்ர்' என்று உறுமி, 'வள்'ளென விழுந்தாராம்!

''நாயெல்லாம் மனுஷங்க மாதிரி மிஸ்டர் பெட்டூவையே கண் கொட்டாமப் பார்த்துட்டு இருந்ததுகள். பாவம் அவர்தான் ஒரு நிமிஷம் குலைச்சுத் தீர்த்துட்டார்..''

லதாவுக்கு தொண்டை பெரிசு.. என்னமாய் சிரிக்கிறாள்!



**வீ**ட்டுக்கு வர இன்று லேட்டாகி விட்டது. எப்போதுமே ஜிம்னா.. ஸாரி.. ஜம்னா வீட்டுக்குப் போய், அவளது ஒப்பாரியைக் கேட்டு விட்டு வீட்டுக்கு வந்தால், நமக்கு ஒரு வாய் தண்ணீர் அதிகமாகக் குடிக்கக்கூட யோசனையாக இருக்கும்.

ஜம்னா 'ஜம்'மென்றுதான் இருப்பாள். நாற்பது வயசுக்கு, இரண்டு குழந்தைகளைப் பெற்றவள் எப்படி இருப்பாளோ.. அப்படி.. அவள் வீட்டுக்காரரோ, மாமியாரோ, ஏன்.. அந்த வீட்டுக்கு வருகிற கூரியர்காரரோகூட அவளை பருமன் என்று சொன்னதே இல்லை.

அறுபத்தெட்டு கிலோ இருக்கிறாள். ஆனால், ஐந்தரை அடி இருக்கிறாளே.. அதனால் அப்படியன்றும் அவள் நினைக்கிற மாதிரி வித்தியாசமாக இல்லை.. ஆனால், அவளுக்குப் பேராசை.. முல்லைக்கொடி மாதிரி ஆக வேண்டும் என்று!

அடையாறிலும் ஆழ்வார்ப்பேட்டையிலும் எத்தனை 'ஜிம்'கள் உண்டோ அத்தனையிலும் இவள் லைஃப் மெம்பர். அங்கே இவளுக்கு நடக்கிற உபசாரங்களைப் பார்க்க வேண்டுமே..

''மேடம்.. நேத்திய விட இன்னிக்கு முந்நூறு கிராம் குறைஞ்சிருக்கீங்க..''

''கேலியா.. நான் இன்னிக்கு பவுடர் போட்டுட்டு வரல..''

''ஓ.. ஸாரி..''

''என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. ஒரு மாசத்துல அஞ்சு கிலோ குறைய கியாரண்டினு டி.வி-யில எல்லாம் விளம்பரம் செஞ்சிருக்கீங்க இல்லே? எனக்கும் அஞ்சு கிலோ குறைஞ்சாகணும். இல்லாட்டி, நான் கட்டின நாற்பத்தஞ்சாயிரத்தைத் திருப்பிக் கொடுக்கணும். கேஸ் போட்டுரு வேன்..''

இந்த மாதிரியான மிரட்டலில் ஒரு ஜிம்மின் சொந்தக்காரி, ஒரு மாசத்துக்கு ஒரு நாளே பாக்கி இருக்கையில், ஜிம்மைக் காலி செய்து விட்டு, ராவோடு ராவாக கேரளாவுக்குப் போய் விட்டாள்.

''உன்னை மாதிரிப்பட்டவங்களுக்கெல்லாம் 'ஜிம்' மட்டும் போதாதுடீ இவளே.. 'பிளாஸ்டிக் சர்ஜரி'




பண்ணிக்க. என் மாமா பொண்ணு இப்படித்தான்.. ஒரு 'லைப்போ சக்ஷன்' பண்ணிக்கிட்டா பாரு.. உள்ளேயிருந்து எட்டு கிலோ கொழுப்பைக் கரைச்சு, மூணு பக்கெட் ஃபுல்லா எடுத்துக் காமிச்சாங்க.. உடம்பு இப்ப எப்படி இருக்கு தெரியுமோ.. கொடியிடைதான்..''

எங்களில் ஒருத்தி வாய் தவறி உளற.. உடனே பிளாஸ்டிக் சர்ஜனை சந்தித்து, தனக்கும் அப்படியே கொழுப்பை ஆவின் வெண்ணெயிலிருந்து நெய் காய்ச்சி எடுப்பதுபோல எடுக்க வேண்டும் என வேண்டி..

''உங்களுக்கு அப்படி ஒன்றும் இல்லையே..'' என்று டாக்டர் சொல்ல..

''இல்ல டாக்டர்.. முதுகுலே.. அடிவயித்துல, தொடையில..''

இப்படி உடம்பு முழுக்க மார்கழி மாசத்துக்கு வாசலில் கோலம் போடப் புள்ளி வைப்பது போல புள்ளி வைத்துக் காட்டி.. இவளது ரோதனை பொறுக்க முடியாமல் டாக்டரும் சக்ஷன் பண்ண..

உடம்பு முழுக்க பஞ்சர் ஒட்டினதுதான் மிச்சம்.. கொழுப்பு என்று இத்துணுண்டை எடுத்துக் காட்டியிருக்கிறார் அந்த டாக்டர்.

இவளானால் பேயாட்டம் ஆடி விட்டாள்.

''எண்பதாயிரம்.. அப்படியே ஹாட் கேஷா கொடுத் தேனே டாக்டர்.. இத்துனூண்டு காட்டறீங்களே.. நீங்க சரியாப் பண்ணல!''

''இவ்வளவுதாம்மா.. இதுக்கு மேலன்னா, சதையை அறுத்தாத்தான் முடியும்..''

''அதை முன்னாடி சொல்றதுக்கென்ன.. அதையே செஞ்சுக்கிட்டிருப்பேன் இல்ல..''

''மேடம்.. முதல்ல வாயைக் கட்டுங்க. வாக் போங்க. அதை விட்டுட்டு ஏன் இப்படி.. எதுவுமே நீங்க நினைக்கிற மாதிரி அத்தனை ஈஸி இல்ல..''

டாக்டர் இப்படிச் சொல்லி விட்டார் என்பதற்காக மூன்று நாள் அழுது கொண்டிருந்தாள்..

நானும் மற்ற அவளது உற்ற சிநேகிதிகளும் வேத கோஷம் மாதிரி திருப்பித் திருப்பிச் சொன் னோம்..

''ஏய், நீ அப்படியண்ணும் குண்டு இல்ல.. இதோ, என்னைப் பாரு.. குண்டுதான். அதனால என்ன பண்ண.. எங்க தாத்தா, பாட்டி எல்லாம் குண்டுதான். ஏதோ சுறுசுறுனு வேலையப் பார்க்க முடியுதேனு சந்தோஷப்படுவேன்.. அப்படி இருப்பியா..''

நாங்கள் சொன்னதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் மூக்கை உறிஞ்சினாள்.. ''என்னால ஒட்ட ஒட்டப் பட்டினி கிடக்க முடியாது..''

''எவடி இவ? யார் உன்னை பட்டினி கிடக்கச் சொன்னது? சாப்பிடு.. நட..''

''என்னால தெருவுல நடக்க முடியாது. எல்லாரும் என்னையே பார்த்து கேலி பேசுற மாதிரி இருக்கும்..''

''நீதான் ஜிம்முக்குப் போவியே.. போ..'' என்றதுமே ஞானோதயம் பெற்றது போல எழுந்தாள்..

''அது மட்டும் போதாது. வீட்டுலயும் ஒரு 'ட்ரெட் மில்' (நடை மெஷின்) வாங்கிப் போட ணும். அப்பத்தான் ராத்திரி கூட விடாம, விடிய விடிய நடந்து.. என்னோட எய்ம்.. நாப்பது கிலோ.''

ஏதோ புருஷன்காரன் எந்த முகச் சுளிப்பும் இன்றி கேட்கும்போதெல்லாம் பணத்தை அள்ளித் தருகிறான். இவள் 'ஜிம்'முக்குப் போய் விட்டு வீடு திரும்பும்போது, மாமியார் சேப்பங்கிழங்கு ரோஸ்ட்டும் வெங்காய சாம்பாரும் தோதாகச் செய்து வைக்கிறாள்.

இப்போது வீட்டிலேயே ஒரு 'ட்ரெட் மில்' வாங்கிப் போட்டுக் கொண்டு விட்டாள்.

''இதோ பார்.. இனிமேயும் அழுதா, நான் காசி, ராமேஸ்வரம்னு, எங்கேயாவது போயிடுவேன்..'' - ஜம்னாவின் கணவனின் விரக்தி மிகு வார்த் தைகள். அது வாங்கி மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது..

இன்றைக்கு எனக்கு போன் செய்து, மூக்கை உறிஞ்சியபடியே கூறினாள்..

''அனு அக்கா, எங்க வீட்டுக்கு ஒரு நடை வந்துட்டுப் போங்களேன்.. விக்.. விக்..''

''என்னது.. மறுபடி என்ன..''

நான் கிலி பிடித்துக் கேட்டேன்..

''வாங்க.. வந்து இந்த அநியாயத்தைப் பார்த்துட்டு அப்புறம்.. விக்.. விக்.. சொல்லுங்க..''

போனேன். இவள் அப்படியே கல் மாதிரி, கொஞ்சம் கூடக் கரையாமல் உட்கார்ந்து, மூக்கும் முழியும் சிவக்க அழுது கொண்டிருக்கிறாள்.

உள்ளேயிருந்து 'ட்ரெட் மில்'லின் 'விசுக் விசுக்'கென்ற சத்தம்..

''ஏய்.. நீதான் இங்கே இருக்கியே.. உள்ளே யாரு 'ட்ரெட் மில்'லுல?''

''எங்க மாமியார்தான் அக்கா.. மூணு மாசத்துல ஏழு கிலோ இளைச்சிட்டாங்க. எனக்கு மட்டும் ஏன் இப்படின்னே தெரியல. இந்த வயசுக்கு அவங்களுக்கு இது தேவையா..''

அவள் அழுதாலும் எனக்கு அடக்க மாட்டாமல் சிரிப்புத்தான் வந்தது!

**உ**ங்களில் யாராவது ஒரே கலர், ஒரே பார்டரில் இரண்டு புடவை வாங்கி விட்டீர்களா.. நீங்கள் வாங்க மாட்டீர்கள். சில சமயங்களில் அம்மா வீட்டில் எடுப்பதும், மாமியார் வீட்டில் எடுப்பதும் ஒரே மாதிரி ஈயடிச்சான் காப்பியாக அமைந்து விடும்.

அப்படி தோழிகளான எங்கள் வீடுகளில் அச்சு அசலாக ஒரே மாதிரி இரண்டு பொருட்கள் வந்து சேர்ந்தால் நாங்கள் கவலையே பட மாட்டோம். அந்த இன்னொன்றை வாங்கிக் கொள்ளத்தான் 'ஐஸ்' இருக்கிறாளே..



அப்படித்தான்.. என் சிநேகிதி லட்சுமி, ஸ்ரீரங்கம் போனபோது எனக்காக சேங்காலிபுரம் தேன்குழல் அச்சு வாங்கி வந்தாள். இவள் வாங்கி வருவது தெரியாமல், நான் வேறொருவரிடமும் சொல்லி வைக்க.. கடைசியில் 'வேல்' பட சூர்யா மாதிரி என்னிடம் இரண்டு தேன்குழல் அச்சுகள்!

இரண்டை வைத்துக் கொண்டு நான் விழி பிதுங்க, என்னுடைய சிநேகிதி விமலா, யோசிக்காமல் இதைச் சொன்னாள்..

''ஏய், ஒரு அச்சைக் கொண்டு போய் நம்ம ஐஸ்கிட்ட கொடுத்துடலாம்பா..''

''அவ கேட்டாளா?''

''கேட்கலே.. சொல்ற விதத்துல சொன்னா கண்டிப்பா வாங்கிப்பா..''

அதென்னது, 'சொல்ற விதம்..' என்கிறீர்களா..

'ஐஸ்'வர்யாவிடம், ''ஆஹா.. உன்னைத் தவிர வேற யாருக்காவது இத்தனை தாராள மனசு உண்டா'' என்று சொல்லிப் பாருங்கள்.. அதாவது, 'ஐஸ்' வைத்துப் பாருங்கள், நீங்கள் கரிக்கட்டியைக் கொண்டு போய்த் தந்தா-லும், சொன்ன விலைக்கு வாங்கி விடுவாள்.

எங்கள் வீட்டுக்கு வருகிற அதே கீரைக் காரன்தான் அவள் வீட்டுக்கும். என்னிடம் ஒரு கட்டு முளைக் கீரை ஐந்து ரூபாய்க்கு விற்பான். அவளிடம் பத்து ரூபாய்.

''அது என்னாமோ தெரியலேங்க.. உங்களைப் பார்த்தா, பதினாறு வயசுல தாராந்து பூட்ட (தொலைந்து போன) என் தங்கச்சியே நேரே வந்து நிக்கறா மாதிரி இருக்கு. அது கூடையைத் தொட்ட துக்குப் பொறவுதான் நான் வியாபாரத்துக்கே கிளம்பு வேன். இப்பகூட முதல் போணி உங்க கையிலேதான்!''

''அப்படியா.. அப்ப அந்த அனுராதாம்மா வீட்டுல..''

''ஐய்யே.. 'கீரை கட்டு என்ன விலைப்பா?'ன்னு கேட்டாங்க. 'பத்து ரூவா'ன்னு சொன்னேன். 'அத்தனை காசு கொடுத்து கீரை வாங்கி சாப்பிட நாங்க ஒண்ணும் ரா.. ரா.. அது என்னமோ சொன்னாங்களே..''

''ராயல் ஃபேமிலியா?''

''ஆங்.. அதான்.. 'அந்த ஃபேமிலி இல்லே'னு சொன்னாங்க. நானும் பதிலுக்கு, 'முதல் போணி ஐஸ்வர்யாம்மா கையாலேதான்.. நீங்க கேட்டாலும் கூடைய இறக்க மாட்டேன்'னேன். அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க தெரியுமா.. 'அவ ஒண்ணும் பத்து ரூபா கொடுத்து, கீரைய வாங்க மாட்டா'னு சொன்னாங் கம்மா..''

''சரி சரி.. இந்தா பிடி முப்பது ரூபா.. எனக்கு மூணு கட்டு கீரை கொடு..''

''அம்மா.. மகராசி.. தங்கக் கைம்மா உங்களுக்கு. பச்சு பச்சனு முள்ளங்கி ஒரு கட்டு வாங்கிக்குங்க..''

அவன், இப்படியே அவள் தலையில் வண்டி ஐஸை வைத்து முக்கால் கூடையை அங்கேயே இறக்கி வைத்து விட்டுப் போய் விடுவான்.

*விமலா, சொன்னதுபோலவே அந்தத் தேன்குழல் அச்சை, இந்த அச்சு பிச்சு ஐஸிடம் விற்று விட்டு வந்து விட்டாள். கூடவே 50 அச்சுக்கு ஆர்டரும்!*

*எப்படி என்கிறீர்களா? தன்னுடன் இரண்டு சிநேகிதி களை அழைத்துப் போனாள். அவர்கள் எதிரிலேயே வலையை வீசினாள்.*

*''ஐஸ்.. நீ தேன்குழல் அச்சு கேட்டியே.. இந்தா..''*

*''நான் கேட்டேனா.. இல்லையே..''*

*''பார்த்தியா. அன்னிக்கு என் நாத்தனார் சீமந்தத்துக்கு வந்தியா?''*

*''வந்தேன்..''*

*''அப்ப, என் மாமியார்கிட்ட 'அச்சு முறுக்கு' நல்லா யிருக்குன்னு சொன்னியா?''*

*''ஆமா..''*

*''எங்க மாமியார், 'இது சேங்காலிபுரம் அச்சுல பிழிஞ்ச முறுக்கு'ன்னு சொன்னாங்க. அப்ப, 'இந்த மாதிரி அச்சு ஒண்ணு எனக்கு வேணும்'னு அனு கேட்டா. அப்ப, நீயும் 'எனக்கும் ஒண்ணு'னு கேட்டியே.. மறந்துட்டியா? அனுவுக்காக வாங்கிட்டு வந்ததை அங்கே கொடுத்தாச்சு. உனக்கு வேண்டாம்னா பரவாயில்ல.. ஆனா பாரு.. இது விலை நூத்தியிருபது ரூபாய்தான்.. நம்ம கஞ்சூஸ் காஞ்சனா கேட்கறா.. ஆனா, முழுசா பணம் தர முடியா தாம் அவளாலே. ரெண்டு மாசமா, இன்ஸ்டால்மென்ட்லே தரலாமானு கேக்கறா..''*

*''நீ என்ன சொன்னே?''*

*''நான் என்ன சொல்லியிருப்பேன்னு உனக்குத் தெரியாதா.. இது உனக்குன்னு வாங்கினதாச்சே.. 'ஒரு அச்சு பணத்தை ரெண்டு மாசத்துல திருப்பித் தர்றேன்னு சொல்றியே காஞ்சூ.. இதுவே நம்ம ஐஸ்னா ஒரு அம்பது அச்சு வாங்கி, பொங்கல் பரிசா வீட்டுக்கு வர்ற சுமங்கலிகளுக்கு வெத்தலை பாக்கோட வச்சுக் கொடுப்பா. போன நவராத்திரிக்கே, ஒவ்வொருத்திக்கும் 'டேபிள் டாப்' கிரைண்டர் வாங்கித் தரணும்னுதான் கொள்ளை ஆசைப்பட்டா ஐஸ்.. கடைசியில அவங்க குடும்ப ஜோசியர்தான் எலெக்ட்ரிகல் அயிட்டம் எல்லாம் தாம்பூலத்தோட வச்சுக் கொடுக்கக் கூடாதுனு சொல்லிட்டார்'னு சொன்னேன்..''*

*''....''*

*''அதுக்குப் பதிலா அம்மிக்கல்லும் ஆட்டுக்கல்லும் வாங்கி, சந்தனம், குங்குமம் வச்சுக் கொடுத்துடலையா நீ.. இன்னிக்கும் எங்க வீட்டுக்காரர், 'தேங்கா சட்னினா உன் சிநேகிதியோட அம்மிக்கல்லுல வச்சு அரைச்சுத் தரணும்'னு பிடிவாதம் பிடிக்கிறாரே..''*

*''அந்தத் தேங்குழல் அச்சை இங்கே கொடு. நீ சொன்ன மாதிரி பொங்கலுக்கு எல்லாருக்கும் தேங்குழல் அச்சு.. ஐடியா நல்லாயிருக்கு. என் வீட்டுக்காரர்கிட்ட சொல்லி, அட்வான்ஸாவே பணத்தை வாங்கித் தந்துடறேன்.''*

*தேன்குழல் அச்சை விற்ற கையோடு, இன்னும் 50 அச்சுகளுக்கு ஆர்டரும் வாங்கி வந்து விட்டாள் விமலா. போதாக்குறைக்கு கூட இரண்டு பேரை அழைத்துப் போனாள் இல்லையா.. அவர்களுக்கும் சேர்த்து சில்க் காட்டன் புடவை.. அதாவது தன் வீட்டுக்கு கெஸ்ட்டாக வருபவர்களை தான் மரியாதை செய்யும் விதத்தைக் காட்டுவதற்காக..*

*இப்போது கொஞ்ச நாட்களாக ஐஸ்ஸின் முகத்தில் விசனக் குறி.. அதாவது இவளுக்குப் புருஷன் என ஒருவர் இருக்கிறார் இல்லையா? என்னதான் மஞ்சக் காணி, புஞ்சக்காணி என்றாலும் இந்த ரேஞ்சில் போனால் தாக்குப் பிடிக்குமா..*

*ஏதோ, குடும்ப ஜோசியருக்கு வேண்டுமானால் சில ஆயிரங்களைக் கொடுத்து, கிரைண்டரை ஆட்டுக் கல்லாக்கலாம். பெரிய விஷயங்களில் கையைச் சுட்டுக் கொண்டு விட்டால்?*

*அதற்காகவே, வீடு, நிலம், பண்ணைத் தோட்டம் எல்லாவற்றையும் வங்கியில் வைத்து லோன் வாங்கி இருப்பதாக உடான்ஸ் விட்டிருக்கிறான். இல்லாவிட்டால், அத்தனை சொத்தும் 'ஐஸ்'ஸாய் கரைந்து விடாதா?*

*இந்த உண்மை, விமலா வீட்டுக்காரர் வங்கியில் வேலை பார்ப்பதால் அவருக்குத் தெரியும். அவர் விமலாவிடம் சொல்ல, அவள் என்னிடம் சொல்ல.. ஹி.. நான் உங்களிடம் சொல்லி விட்டேன். நீங்கள் யாரிடமும்.. முக்கியமாக ஐஸ்ஸிடம் சொல்லியே விடாதீர்கள்.*

***ஓகே. என் அருமை சகோதரிகளே.. இன்னும் கூட நிறைய 'ஸ்த்ரீ ரத்தினங்கள்' இருந்தாலும் திகட்டி விடக் கூடாதே என்பதற்காக, இப்போதைக்கு முடித்துக் கொள்கிறேன். த்ச்.. த்ச்.. அழக் கூடாது, அனுவுக்கும் உங்களுக்கும் காலத்துக்கும் எழுத்துப் பாலம் ஸ்டிராங்காக இருக்கும்.. நாம் ஜொலித்துக் கொண்டே இருப்போம்!***